




# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI Volume- 3 Issue:226 02-03-2026 திங்கட்கிழமை Free E- Paper ●சென்னை ●மதுரை ●கோவை ●திருச்சி







## இன்றைய பஞ்சாங்கம்

02.03.2026 மாசி 18
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.28

**திதி:**
இன்று மாலை 6.28 வரை சதுர்த்தசி பின்பு பௌர்ணமி.

**நட்சத்திரம்:**
இன்று காலை 8.16 வரை ஆயில்யம் பின்பு மகம்.

**யோகம் :**
இன்று பிற்பகல் 12.46 வரை அதிகண்டம் பின்பு சுகர்மம்.

**கரணம் :**
இன்று காலை 7.00 வரை கரசை பின்பு மாலை 6.28 வரை வணிசை பின்பு பத்திரை

**அமிர்தாதி யோகம் :**
இன்று காலை 8.16 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

**சந்திராஷ்டமம் :**
இன்று காலை 8.16 வரை பூராடம் பின்பு உத்திராடம்.

**நல்ல நேரம்**
காலை 6.30 – 7.30.
மாலை 4.30 – 5.30.

**இராகு காலம்**
காலை 7.30 –9.00.

**எமகண்டம்**
காலை 10.30 – 12.00

**குளிகை**
பிற்பகல் 1.30 – 3.00.

இன்று மாசி மகம் திருநாள்


ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040


# ஈரான் தலைவர் காமேனி கொல்லப்பட்டார்

## உறுதி செய்த ஈரான் – 40 நாட்கள் துக்கம் அனுசரிப்பு

**டெஹ்ரான், மார்ச்.2:**
அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டு ராணுவத் தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனி மரணம் அடைந்தார். இதை அந்நாட்டின் அரசு ஊடக நிறுவனமான ஐஆர்என்ஏ உறுதி செய்தது. அவரது மறைவை அடுத்து 7 நாட்கள் பொது விடுமுறையும், 40 நாட்கள் துக்கமும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

முன்னதாக, தாங்கள் நடத்திய தாக்குதலில் கமேனி உயிரிழந்ததாக அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்ப் தெரிவித்திருந்தார். இதை இஸ்ரேலும் கூறியிருந்தது. இந்தச் சூழலில் கமேனி உயிரிழந்ததை ஈரான் அரசின் ஊடக நிறுவனம் உறுதி செய்துள்ளது.

டெஹ்ரானில் சனிக்கிழமை கமேனி தனது அலுவல் பணிகளை வழக்கம் போல கவனித்துள்ளார். அப்போது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தரப்பு நடத்திய தாக்குதலில் அந்த கட்டிடம் சேதமடைந்தது. இதை செயற்கைக்கோள் படங்கள் உறுதி செய்தன. அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலில் கமேனி மற்றும் அவரது மகள், மருமகள், பேரக்குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தினர் உயிரிழந்தனர்.

*40 நாட்கள் துக்கம்:* 86 வயதான கமேனி, கடந்த 1989-ம் ஆண்டு முதல் ஈரானில் ஆட்சி பொறுப்பில் இருந்தவர். அதனால் அவரது மறைவை அடுத்து அந்நாட்டில் 7 நாட்கள் பொது விடுமுறை மற்றும் 40 நாட்கள் துக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கமேனியின் உயிர் தியாகத்துடன், அவரது பாதையில் செல்வோம், அவரது பணி மறக்கப்படாது. அவை அதைவிட அதிக வீரியத்துடனும், ஆர்வத்துடனும் தொடரும் என ஈரான் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

*யார் இந்த கமேனி? -* கடந்த 1939-ல் ஈரானில் உள்ள மாஸ்ஸாத் நகரில் பிறந்தவர் அயத்துல்லா அலி கமேனி. ஈரானில் 1979-ல் ஏற்பட்ட இஸ்லாமிய புரட்சியை தொடர்ந்து ஐஆர்ஜிசி உடன் அவருக்கு நெருக்கம் ஏற்பட்டது. அந்த படைப்பிரிவில் பல்வேறு பணிகளை ஒருங்கிணைக்க உதவினார். இஸ்லாமிய புரட்சிக்கு பின்னர் ஈரானில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து 1981 முதல் 1989 வரையில் ஈரானின் அதிபராக பொறுப்பு வகித்தார்.

கடந்த 1989-ல் முன்னாள் ஈரான் உச்ச தலைவர் ருஹோல்லா கோமேனி மறைவுக்கு பின்னால் அந்த பொறுப்பை கமேனி ஏற்றார். அவரை ஈரானின் வல்லுநர் மன்றம் தேர்வு செய்தது. தற்போது ஈரானின் அடுத்த உச்ச தலைவரையும் இந்த வல்லுநர் குழுதான் தேர்வு செய்ய உள்ளது.

*பழிவாங்க ஐஆர்ஜிசி சபதம்:* கமேனி உயிரிழந்ததை அடுத்து ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை (ஐஆர்ஜிசி), இமாமைக் கொன்றவர்களுக்கு கடுமையான மற்றும் வருந்தத்தக்க தண்டனையை ஈரான் வழங்கும். அவர்களை ஒருபோதும் விடமாட்டோம் என்று தெரிவித்துள்ளது.



## மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம்

ஈரான் தலைநகர் தெஹ்ரான் மற்றும் இஸ்பகான், லோரஸ்தான், இலாம், கெர்மன்ஷா, குவாம், கராஜ், தப்ரிஸ் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அணுசக்தி தளங்கள், ராணுவ தளங்களை குறிவைத்து அமெரிக்கா, இஸ்ரேல் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின. தெஹ்ரானில் உள்ள கமேனியின் வீடு, அலுவலகம், ராணுவ அலுவலகம், உளவுத் துறை அலுவலகத்தை குறிவைத்தும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இஸ்ரேல், அமெரிக்காவின் தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் பலியானதாக தகவல்கள் வெளிவருகின்றன. குறிப்பாக, ஹார்மோஸ்கன் மாகாணம் மினாப் நகரில் உள்ள பெண்கள் தொடக்கப் பள்ளியில் சில குண்டுகள் விழுந்ததில் மாணவிகள் உட்பட 85 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஈரான் பதில் தாக்குதல்:
அமெரிக்கா, இஸ்ரேலின் தாக்குதலைத் தொடர்ந்து ஈரானும் பதில் தாக்குதலைத் தொடங்கியது. இஸ்ரேலின் டெல் அவிவ், ஹைபா, ஜெருசலேம் நகரங்கள் மற்றும் வடக்கு, மத்திய, தெற்கு பகுதிகளில் உள்ள ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் ராணுவம் 100-க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசியது.

ரியாத், தோஹா, அபுதாபி, குவைத் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அமெரிக்க ராணுவ, விமான, கடற்படைத் தளங்களை குறிவைத்து 400-க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசியது. இதில் பெரும்பாலான ஏவுகணைகள் நடுவானில் இடைமறித்து அழிக்கப்பட்டன.

## மத்திய கிழக்கில் போர் பதற்றம்: பிரதமர் மோடி தலைமையில் ஆலோசனை கூட்டம்



அமெரிக்கா இஸ்ரேலுடன் இணைந்து ஈரான்மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஈரான் உச்ச தலைவர் காமேனி கொல்லப்பட்டார்.

இதற்கு பதிலடியாக கத்தார், குவைத், பரைன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றம் நிலவி வருகிறது.

இந்நிலையில், பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவினருடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையில் உள்துறை மந்திரி அமித்ஷா, பாதுகாப்பு துறை மந்திரி ராஜ்நாத் சிங், நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அப்போது, மத்திய கிழக்கில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு பற்றியும், தேவைப்பட்டால் அவர்களை சிறப்பு விமானங்களில் அழைத்து வருவது பற்றியும் விரிவான ஆலோசனை நடத்தப்பட்டது.

# பணம் நமக்கு, பிரச்சனை மக்களுக்கு என்பது தான் தி.மு.க.-வின் மாடல்: பிரதமர் நரேந்திர மோடி

**மதுரை, மார்ச் 2:**
மதுரையில் நேற்று மாலை நடைபெற்ற என்டிஏ பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்று பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

மதுரை சொந்தங்களே நீங்கள் என் மீது பொழியும் பேரன்பு மலேசியாவில் இந்தியர்கள் என் மீது பொழிந்த பேரன்மை நினைவுபடுத்துகிறது.

நாவில் இனிக்கும் தமிழுக்கும், நாசியில் இனிக்கும் மல்லிகைக்கும் பெயர்போனது மதுரை மண்.


தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சியை பிடிக்கலாம் என சிலர் கனவு காண்கிறார்கள். ஆனால், அவர்களின் கனவு பலிக்காது.

திமுகவின் கனவுக்கோட்டை கானல் நீராக மாறிவிடும், இந்த தேர்தல் மாற்றத்தை கொண்டுவரும் தேர்தல்.

வரும் சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும்.

திமுக ஆட்சியை வழியனுப்பி வைப்பதற்கு தமிழ்நாடு மக்கள் தயாராகிவிட்டனர். வரும் தேர்தல் திருப்புமுனையாக அமையும். திமுக ஆட்சிக்கு முடிவுகட்ட மக்கள் தீர்மானித்துவிட்டார்கள். தமிழ்நாட்டை திராவிட முன்னேற்றக் கழகம் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறது.

மாஃபியா போல் தமிழ்நாட்டை திமுக கொள்ளை



அடிக்கிறது. மோசமான சாலை, அசுத்தமான குடிநீர் இதைத்தான் திமுக அரசு கொடுத்தது.

ஊழல் காரணமாக மதுரை மாநகர் மேயரின் பதவியே பறிபோய் உள்ளது. இதுதான் திமுகவின் ஆட்சி.

25 ஆண்டுகளுக்கு பின் முழு மெஜாரிட்டியுடன் திமுக ஆட்சிக்கு வந்தும் கூட தமிழ்நாட்டிற்கு எதுவும் செய்யவில்லை.

மதுரை மக்கள் எம்ஜிஆருடன் நின்றார்கள் அதனால் மதுரையை திமுகவிற்கு பிடிக்கவில்லை. ஊழல் ஆட்சியா? என்டிஏ கூட்டணி ஆட்சியா? என்ன வேண்டும் என மக்கள் தான் முடிவெடுக்க வேண்டும்.

திமுக அரசின் ஊழல் ஆட்சியால் லட்சக்கணக்கான ஏழைக்குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

திமுக அரசால் ஏழைகளுக்கான 3 லட்சம் வீடுகள் கட்டும் பணி முடங்கி உள்ளது. திமுகவின் சில்லறை அரிசயலால் ஏழை மக்கள் ஏன் அவதிப்பட வேண்டும்?

மத்திய அரசு நிதி கொடுத்தாலும் திமுக அரசு நல்லது செய்யாது, நல்லது செய்யவும் விடாது.

பணம் நமக்கு, பிரச்சனை மக்களுக்கு என்பது தான் திமுகவின் மாடல். தமிழ்நாட்டின் உரிமைக்காக வாய் கிழிய பேசும் திமுக மாநில மக்களுக்காக ஒன்றும் செய்யவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் பிரதமர் மோடி சாமி தரிசனம்



மதுரையில் தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டம் இன்று நடைபெற உள்ளது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி இன்று மதுரைக்கு வருகை தந்துள்ளார். பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக, மதுரை விமான நிலையத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

இந்த விழாவில் ரூ.4,400 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்தார். இதன்படி, சென்னை கடற்கரை-எழும்பூர் இடையேயான 4-வது வழித்தடம், காரைக்குடி உள்ளிட்ட 8 மறுசீரமைக்கப்பட்ட ரெயில் நிலையங்கள், கும்பகோணம், வேலூர், ஏற்காடு உள்ளிட்ட இடங்களில் ஆகாஷ்வாணி பண்பலை உள்ளிட்ட திட்டங்களை தொடங்கி வைத்த பிரதமர் மோடி, மரக்காணம்-புதுச்சேரி பிரிவு, பரமக்குடி-ராமநாதபுரம் பிரிவு 4 வழிச்சாலை பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்த விழாவில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக அமைச்சர் எ.வ.வேலு, மத்திய இணை மந்திரி எல்.முருகன், தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு பிரதமர் மோடி வருகை தந்தார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் பூரன கும்ப மரியாதையுடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து கோவிலில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, முருகப்பெருமானை தரிசனம் செய்து வழிபட்டார்.


ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice ➤ Loss of Share
➤ Legal Notice ➤ Merger
➤ Tender Notice ➤ Acquisition
➤ Society Notice ➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel


# திருக்குறள் குறள்-546

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்



ஒருவனுக்கு வெற்றி பெற்றுத் தருவது வேல் அன்று, அரசனுடைய செங்கோலே ஆகும், அச் செங்கோலும் கோணாதிருக்குமாயின்.

## சிந்திக்க ஒரு நொடி



மருதாணியின்
சாயத்தால் என் கரங்கள்
சிவந்ததை விட....

மனிதனின் சாயத்தால்
என் கண்கள் சிவந்தது
தான் அதிகம்...

உஷாமுத்துராமன்

## வந்தவாசி ஜலகண்டேஸ்வரர் கோயில் மாசி மக தேரோட்டம்..!



**வந்தவாசி,மார்ச்02:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீசத்புத்ரி நாயகி சமேத ப்ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில் மாசி மக பிரமோற்சவ விழாவின் 9 ஆம் நாள் தேர்த் திருவிழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஜலகண்டேஸ்வரர் தேர், அம்பாள் தேர், விநாயகர் தேர் என மூன்று தேர்கள் மாட வீதிகளில் வலம் வந்தது. விநாயகர் தேர் ரதப்பட்டறையில் வந்தது. மற்ற இரண்டு தேர்கள் மேளதாளத்துடன் வீதியுலா வந்தனர். சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் அரோகரா கோஷத்துடன் தேரை வடம் பிடித்து இழுத்தனர். மேலும் இந்த தேர்த் திருவிழாவில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். மேலும் தீயணைப்பு துறையினர், அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் மின்வாரிய அலுவலர்கள் உடன் வந்தனர். ஆங்காங்கே அன்னதான நிகழ்வும் வழங்கப்பட்டது.

## கும்பகோணத்தில் பாதாள அறையில் இருந்து வெளியே வந்த அத்தி வரதர்



**தஞ்சாவூர், மார்ச் 02:**
தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பிரம்மன் கோவில் தெரு பகுதியில் வரதராஜ பெருமாள், வேதநாராயண பெருமாள் கோவில் உள்ளது. 180 ஆண்டுகள் பழமையான இக்கோவிலில் வரதராஜ பெருமாள், வேதநாராயண பெருமாள் தனித்தனி சன்னதிகளில் எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றனர். இக்கோவிலில் கடந்த 1915-ம் ஆண்டு அத்திவரதர் பாதாள அறையில் இருந்து வெளியே வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அதன்பின்னர், சுமார் 98 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த 2013-ம் ஆண்டு அத்திவரதர் வெளியே வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இந்த அத்திவரதரை தரிசனம் செய்தால் சகல தோஷங்கள், முன்ஜென்ம பாவங்கள் நீங்கும் என்றும், நினைத்த காரியம் கைகூடும் என்றும் ஐதீகம்.

## திருப்பரங்குன்றம் கோயிலில் சாமி தரிசனம் செய்தார் பிரதமர் மோடி: மலையில் உச்சக்கட்ட பாதுகாப்பு!



**மதுரை,மார்ச்02:**
தமிழ்நாட்டுக்கு வருகை தந்துள்ள பிரதமர் மோடி நேற்று மாலை 4 மணியளவில் திருப்பரங்குன்றம் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். மோடி வருகையையொட்டி திருப்பரங்குன்றம் கோயில், மலைப்பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பில் ஈடுபட்டனர். தமிழ்நாட்டில் விரைவில் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அதிமுக - பாஜக இடம்பெற்றுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி தனது கூட்டணியைப் பலப்படுத்தி வருகிறது. அந்த வகையில், அன்புமணி தலைமையிலான பாமக, அமமுக, தமாகா, இந்திய ஜனநாயகக் கட்சி, தமமுக, புரட்சி பாரதம் உள்ளிட்ட கட்சிகள் அந்த கூட்டணியில் இடம்பெற்றுள்ளன. கடந்த மாதம் மதுராந்தகத்தில் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த கட்சிகளின் தலைவர்கள் மேடையேறினர்.

# இனாம் சமயபுரம் ஆதி மாரியம்மன் கோவில் தேரோட்டம்




**திருச்சி, மார்ச் 02:**
திருச்சி மாவட்டம் இனாம் சமயபுரத்தில் உள்ள ஆதிமாரியம்மன் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் தேர்த்திருவிழா நடைபெறும்.

அந்த வகையில் இந்த ஆண்டிற்கான தேர்திருவிழா கடந்த மாதம் 8 ம் தேதி தொடங்கியது. அன்றைய தினம் ஆதிமாரியம்மன் சிறப்பு அலங்காரத்தில் கேடயத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

அதைத்தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்காரத்தில் சிம்மம், யானை, ரிஷபம், அன்ன , குதிரை வாகனத்தில் அம்மன் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நேற்றுநடைபெற்றது.

முன்னதாக காலை 9 மணிக்கு சிறப்பு அலங்காரத்தில் அம்மன் தேரில் எழுந்தருளினார். அதைத்தொடர்ந்து காலை 9.20 மணிக்கு மேளதாளங்கள் முழங்க, அதிர்வேட்டுகளுடன் திரளான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். தேரோடும் வீதி வழியாக வலம் வந்த தேர் மீண்டும் நிலையை அடைந்தது. தேரோட்டத்தையொட்டி ஏராளமான பக்தர்கள் அலகு குத்தியும், அக்னிசட்டி எடுத்தும் கோயிலை அடைந்து

# பிரதமர் மோடி மதுரை வருகை - ரூ.4,400 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்தார்




**மதுரை, மார்ச் 02:**
மதுரையில் தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டம் இன்று நடைபெற உள்ளது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி நேற்று மதுரைக்கு வருகை தந்துள்ளார்.

பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக, மதுரை விமான நிலையத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

இந்த விழாவில் ரூ.4,400 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்தார்.

இதன்படி, சென்னை கடற்கரை - எழும்பூர் இடையேயான 4-வது வழித்தடம், காரைக்குடி உள்ளிட்ட 8 மறுசீரமைக்கப்பட்ட ரெயில் நிலையங்கள், கும்பகோணம், வேலூர், ஏற்காடு உள்ளிட்ட இடங்களில் ஆகாஷ்வாணி பண்பலை உள்ளிட்ட திட்டங்களை தொடங்கி வைத்த பிரதமர் மோடி, மரக்காணம்-புதுச்சேரி பிரிவு, பரமக்குடி-ராமநாதபுரம் பிரிவு 4 வழிச்சாலை பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, தமிழக அமைச்சர் எ.வ.வேலு, மத்திய இணை மந்திரி எல்.முருகன், தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அண்ணா சாலையில் ரூ.3.46 கோடியில் பூங்கா - உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னையில் ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணா நகர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற திட்டப் பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்.

## அருள்மிகு ஸ்ரீ சந்திர சூடேஸ்வரர் திருக்கோயில் தேர் வெள்ளி பிரபை நாக வாகனம் சிறப்பு அலங்காரத்தில்



**கிருஷ்ணகிரி , மார்ச் 02:**
கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அருள்மிகு மரகதாம்பாள் உடனுரை ஸ்ரீ சந்திர சூடேஸ்வரர் திருக்கோயிலில் தேர் திருவிழா மின்விளக்குகளால் அலங்கரித்து வண்ண மலர்களால் அலங்காரங்கள், வெள்ளி பிரபை நாகவாகனம் அலங்காரத்தில் திருவீதி உலா நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## மாசி மாத வளர்பிறை பிரதோஷ வழிபாடு



**திருவண்ணாமலை,மார்ச் 02:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீநந்திகேச பெருமானுக்கு மாசி மாத வளர்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு ஸ்ரீவீரட்டேஸ்வரர், ஸ்ரீ மீனாட்சி உடனமர் சுந்தரேஸ்வரர்க்கும் அபிஷேகங்கள் பால், தயிர்,சந்தனம், விபூதி,இளநீர், பன்னீர், பஞ்சாமிர்தம்,தேன், வெட்டிவேர் எண்ணற்ற வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள் , வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வில்வம் மாலைகளால் அலங்கரித்து, வண்ண புஷ்பங்களால் அர்ச்சனைகள் செய்து, வில்வத்தினால் அர்ச்சனைகள் செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதீபா ராதனையும் நடைபெற்றது.

பின்னர் உற்சவர் வேத மந்திரங்கள் ஒலிக்க மூன்று முறை ஆலயம் சுற்றி வந்தன. ஏராளமான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று முழக்கமிட்டு நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

# மாசி மாத வளர்பிறை பிரதோஷ வழிபாடு



**திருவண்ணாமலை,மார்ச்02:**
அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்தில் அமைந்திருக்கும் பெரிய நந்திகேச பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,சந்தனம், விபூதி,இளநீர், பன்னீர், பஞ்சாமிர்தம்,தேன், வெட்டிவேர் எண்ணற்ற வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வில்வம் மாலைகளால் அலங்கரித்து, வண்ண புஷ்பங்களால் அர்ச்சனைகள் செய்து, வில்வத்தினால் அர்ச்சனைகள் செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதீபா ராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று முழக்கமிட்டு நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# அன்மருதை ஆக்சிலியம் மெட்ரிகுலேஷன் பள்ளியில் ஆண்டு விழா



## வழக்கறிஞர் ஜாகிர் உசேன் பங்கேற்பு

**செய்யாறு மார்ச். 02:**
செய்யாறு அடுத்த ஆரணி-வந்தவாசி நெடுஞ்சாலையில் உள்ள அன்மருதை கிராமத்தில் அமைந்துள்ள ஆக்சீலியம் மெட்ரிகுலேஷன் உயர்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது.

ஆண்டு விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக ஆரணி இன்டர்நேஷனல் பெண்கள் பி .எட் கல்லூரி தாளாளர் வழக்கறிஞர் ஜாகிர் உசேன் கலந்து கொண்டார்.ஆக்சீலியம் பள்ளி தலைமை ஆசிரியை ரேகா ஆண்டறிக்கையை வாசித்தார். பள்ளியின் தாளாளர் பிலோமினா விழாவிற்கு தலைமை தாங்கினார்.

விழாவில் மாணவ ,மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர் ஜாகிர் உசேன் பரிசுகள் வழங்கினார். பள்ளி ஆசிரியை ஜெசிந்தா நன்றி கூறினார்.

# “ஆட்சியை கவிழ்க்க ஈரான் மக்களே ஒன்றிணையுங்கள்” - இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு



**டெல் அவிவ், மார்ச் 02:**
நாட்டின் தலைமைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து, ஆட்சியை கவிழ்க்கும் வெகுஜன போராட்டங்களில் ஈரான் மக்கள் இறங்க வேண்டுமென இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு வலியுறுத்தியுள்ளார்.

ஆபரேஷன் ரைசிங் லயன் மூலம் ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகள் ராணுவத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார்.

இதனையடுத்து இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு வெளியிட்ட வீடியோ செய்தியில், “இஸ்ரேலின் தொடர்ச்சியான ராணுவ நடவடிக்கைகள் ஈரானின் ஆளும் அரசை பலவீனப்படுத்தி, அதிகார மாற்றத்திற்கான பாதையை அமைக்கும். வரவிருக்கும் நாட்களில், ஈரான் பயங்கரவாத ஆட்சியின் ஆயிரக்கணக்கான இலக்குகளை நாங்கள் தாக்குவோம். ஈரானின் துணிச்சலான மக்கள் கொடுங்கோன்மையின் சங்கிலிகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள இது உதவும்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவேன் - கருணாஸ்



முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் அண்ணா அறிவாலயம் வந்து திமுக தொகுதி பங்கீட்டு குழு தலைவர்களை சந்தித்து விட்டு வெளியே வந்த பின்பு செய்தியாளர்களை சந்தித்தார், அப்போது அவர் பேசியதாவது:-

வருகிற சட்டப்பேரவை தேர்தலில் சென்னையில் போட்டியிடுவீர்களா என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர், இதற்கு தமிழக முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எங்கு போட்டியிட சொல்கிறார்களோ அங்கு போட்டியிடுவேன் கடந்த 5 ஆண்டுகள் திமுக ஆட்சியில் செய்த சாதனைகளை மக்களிடம் எடுத்து சொல்லி வாக்கு சேகரிப்பேன். மீண்டும் எத்தனை தொகுதிகள் கேட்டுள்ளீர்கள் என்று நிருபர்கள் கேள்வி எழுப்பியதற்கு, திமுக கூட்டணியில் சீட் கேட்டுள்ளோம், எங்கள் கட்சியின் வலிமை என்ன என்பது எங்களுக்கு தெரியும். திமுக கூட்டணியில் புதிதாக 13,14 கட்சிகள் வந்துள்ளது. இவர்கள் எல்லோரும் பாஜகவின் பாதக செயலுக்கு தமிழ்நாட்டில் இடம் கொடுக்க கூடாது, அதற்கான வழிவகையை நாமே ஏற்படுத்திவிடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் அனைவரும் ஒன்றாக இணைந்துள்ளனர். அதனால் எத்தனை தொகுதிகள் கிடைக்கும் என்பது முக்கியமில்லை மீண்டும் திராவிட சித்தாந்தத்தை தாங்கி நிற்க கூடிய திமுகவின் ஆட்சி தொடரவேண்டும் என்பதே முக்குலத்தோர் புலிப்படையின் நிலைப்பாடாகும். திருவாடானை தொகுதியை ஓபிஎஸ் தரப்பு கேட்பதாக தகவல் வெளியாகியுள்ளதாக நிருபர்கள் கேள்வி கேட்டதற்கு, எனக்கு தளபதி எந்த தொகுதியை கொடுக்கிறாரோ, யாரை எதிர்த்து நிற்க சொல்கிறாரோ அந்த தொகுதியில் நிற்பேன். எந்த சின்னத்தில் நிற்பீர்கள் என்று கேட்டதற்கு தளபதியின் வெற்றி சின்னமான உதயசூரியன் சின்னத்தில் நிற்பேன் என்று கூறினார்.

### மதிமுக தனிச் சின்னத்தில் தான் போட்டியிடும்: வைகோ திட்டவட்டம்



சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, " இன்று மூன்று கோரிக்கைகளை முதல்வர் ஸ்டாலினிடம் நேரடியாக எடுத்துரைப்பதற்காக அவரை சந்தித்தேன். காயிதேமில்லத் பெயரால் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதை திமுக தேர்தல் அறிக்கையில் சேர்க்க வலியுறுத்தினேன். உடனே அக்கோரிக்கையை தேர்தல் அறிக்கையில் சேர்ப்பதாக சொன்னார்கள்.

இரண்டாவது, வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கும், விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் கொடுப்பதை தடுப்பதற்கு மத்திய அரசு முயற்சி செய்கிறது. எனவே, சூரிய சக்தி மூலம் இலவச மின்சாரம் வழங்க முடிவெடுக்க கோரிக்கை வைத்தேன். அதனையும் திமுக தேர்தல் அறிக்கையில் சேர்ப்பதாக சொன்னார்கள்.

மூன்றாவதாக, வீரபாண்டிய கட்டபொம்மனின் முன்னோர்கள் திருப்பரங்குன்றம் கோயிலில் 500 ஆண்டுகளுக்கும் மேலாக கட்டபொம்மன் சத்திரம் அமைத்து 9வது மண்டகபடி செய்துவந்தனர். அவர்களின் நேரடி வாரிசு பீமராசா என்பவரிடம் முறைகேடாக கையெழுத்து பெற்று இன்னொரு குடும்பம், அந்த சத்திரம் எங்களுடையது என்று அறநிலையத்துறை மூலம் சொல்லியுள்ளனர். இதில் உரிய நடவடிக்கை எடுக்க முதல்வரிடம் கோரிக்கை வைத்தேன். அமைச்சர் சேகர்பாபுவிடம் இந்த பிரச்சினையை சொல்லி வேண்டிய ஏற்பாடுகளை செய்யச் சொல்லியுள்ளார்.

தொகுதிப் பங்கீடு பற்றி முதல்வரிடம் எதுவும் பேசவில்லை. தொகுதிப் பங்கீடு குறித்து மதிமுக குழு முதற்சுற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. மீண்டும் இரண்டாவது சுற்றுக்கு அழைப்பு வந்தால் பேச்சுவார்த்தை நடத்தப்படும். பேச்சுவார்த்தைக்கு பின்னரே இதுபற்றி பேச முடியும். மதிமுக தனிச்சின்னத்தில் தான் போட்டியிடும் என எங்கள் அவைத்தலைவர் சொல்லியுள்ளார். அதுதான் எங்களின் நிலைப்பாடு. மோடி எத்தனை முறை காவடி தூக்கினாலும், பாஜக தமிழகத்தில் காலூன்ற முடியாது. பாஜகவால் தமிழகத்தை ஏமாற்ற முடியாது" என்றார்..

### மாநிலங்களவை எம்.பி. பதவி அன்புமணிக்கு உறுதியாம்!

பாமக-வில் ராமதாஸ், அன்புமணி இடையே நிலவி வரும் பிரச்சினையால் கட்சியினர் இரு பிரிவுகளாக செயல்பட்டு வருகின்றனர். கட்சியில் உள்ள 5 எம்எல்ஏ-க்களில் ஜி.கே. மணி, இரா.அருள் ராமதாஸுக்கு ஆதரவாக உள்ளனர். எஸ்.பி.வெங்கடேஸ்வரன், எஸ்.சதாசிவம், சி.சிவக்குமார் ஆகியோரும் கட்சி நிர்வாகிகளில் பெரும்பலானோரும் அன்புமணிக்கு ஆதரவாக உள்ளனர். கட்சியும், மாம்பழம் சின்னமும் தனது பக்கமே இருப்பதால், அதிமுக கூட்டணியில் அன்புமணி இணைந்தார். அதிமுக கூட்டணியில் 18 தொகுதிகள் அன்புமணிக்கு ஒதுக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. அதற்கான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதற்கிடையில், தமிழகத்தில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை எம்.பி.-க்களுக்கான தேர்தல் மார்ச் 16-ம் தேதி நடைபெறவுள்ளது. இதில், 2 எம்.பி.-க்கள் அதிமுகவுக்கு கிடைக்கவுள்ள நிலையில், அதில் ஒரு எம்பி பதவியை அன்புமணிக்கு விட்டுக்கொடுக்க அதிமுக முன்வந்துள்ளது.

## 29 இடங்களைக் கேட்கும் காங்கிரஸ்... 23 வழங்க திமுக முடிவு!



திமுக உடனான அதிகாரபூர்வ தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையில் காங்கிரஸ் 29 தொகுதிகளைக் கேட்டதாகவும், திமுக தரப்பில் 23 தொகுதிகளை வழங்க முன்வந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், திமுக தனது கூட்டணி கட்சிகளுடன் தொகுதிப் பங்கீட்டுப்பேச்சுவார்த்தையைத் தீவிரப்படுத்தியுள்ளது. முன்னதாக, ஆட்சியில் பங்கு மற்றும் கூடுதல் தொகுதிகள் கோரிக்கையை காங்கிரஸ் எழுப்பியதால் கூட்டணிக்குள் சலசலப்பு ஏற்பட்டது. இதனால் திமுக - காங்கிரஸ் இடையே பேச்சுவார்த்தை நடக்குமா என்ற கேள்வி எழுந்தது.

இந்த நிலையில் இவ்விஷயத்தில் சோனியா நேரடியாக தலையிட்டதால் காங்கிரஸை நேற்று பேச்சுவார்த்தைக்கு அழைத்தது திமுக. அதன்படி, நேற்று காலை 11 மணி அளவில் தமிழக காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையில் காங்கிரஸ் பேச்சுவார்த்தைக் குழு அறிவாலயம் வந்தது.

திமுக பொருளாளர் டி.ஆர். பாலு தலைமையிலான குழுவுடன் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில், காங்கிரஸ் தனது முந்தைய பிடிவாதத்தில் இருந்து சற்றே இறங்கி வந்ததாகத் தெரிகிறது.

இதுகுறித்து திமுக, காங்கிரஸ் வட்டாரங்களில் விசாரித்த போது, "பேச்சுவார்த்தையின் போது கிரிஷ் சோடங்கர், 'காங்கிரஸுக்கு தமிழகம் முழுவதும் வாக்கு வங்கி இருக்கிறது. புதிதாக கூட்டணிக்கு கட்சிகள் வந்துள்ளதால் பழைய கட்சிகளின் எண்ணிக்கையை குறைக்கப் போவதாக உங்கள் தலைவர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து எங்கள் மேலிடம் ஆலோசித்து, 29 சட்டப்பேரவைத் தொகுதிகள் மற்றும் ஒரு மாநிலங்களவை இடம் கேட்கும்படி தெரிவித்துள்ளது' என இறங்கி வந்தார்.

அதற்குப் பதிலளித்த டி.ஆர். பாலு, 'நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, காங்கிரஸ் போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாது. 23 தொகுதிகள், ஒரு மக்களவை இடம் மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் கணிசமான இடங்களைத் தருகிறோம். அதேபோல், மாநிலங்களவை பதவிக்கான வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள் மார்ச் 5-ம் தேதியாகும்.

எனவே, தாமதிக்காமல் மார்ச் 3-ம் தேதிக்குள் காங்கிரஸ் சார்பில் வேட்பாளர் யார் என்பதைச் சொல்லிவிடுங்கள். கூடுமானவரை தமிழகத்தில் இருந்து ஒருவரை தேர்வு செய்ய வேண்டும்' எனத் தெரிவித்தார்.

அதற்கு காங்கிரஸ் குழுவினர், 'எங்கள் கட்சி மேலிடத்துடன் ஆலோசித்து விட்டுச் சொல்கிறோம்' எனக் கூறிவிட்டுச் சென்றனர்" என்றனர்.

## முஸ்லிம் லீக், மமக.வுக்கு 2 இடங்கள்: திமுக கூட்டணியில் ஒப்பந்தம்



திமுக கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் மனிதநேய மக்கள் கட்சிக்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெற உள்ளது. இதையடுத்து மாநாடுகள், தேர்தல் அறிக்கை தயாரிப்பு, விருப்பமனு விநியோகம் என தேர்தல் பணிகளை ஆளுங்கட்சியான திமுக முடுக்கிவிட்டுள்ளது.

மறுபுறம் கூட்டணிக் கட்சிகளுடனான தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தையும் கடந்த பிப்ரவரி 22-ம் தேதி தொடங்கி திமுக நடத்தி வருகிறது. இதுவரை காங்கிரஸ், மதிமுக, கம்யூனிஸ்ட்கள், கொமதேக, மமக, ஐயூஎம்எல் உட்பட கட்சிகளுடன் முதல்கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் திமுக கூட்டணியில் முஸ்லிம் லீக் மற்றும் மனிதநேய மக்கள் கட்சிக்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கான தொகுதி உடன்பாடு ஒப்பந்தம் திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சென்னை அறிவாலயத்தில் கையெழுத்தானது. அந்த ஒப்பந்தத்தில் மமக தலைவர் ஜவாஹிருல்லா, ஐயூஎம்எல் தலைவர் காதர் மொய்தீன் கையெழுத்திட்டனர். முஸ்லிம் லீக் 2 தொகுதிகளிலும் அவர்கள் ஏணி சின்னத்திலும், மமக 2 தொகுதிகளில் திமுக சின்னத்திலும் போட்டியிட உள்ளது. மேலும், இவ்விரு கட்சிகளுக்கு 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்ட தொகுதிகளே மீண்டும் வழங்கப்பட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையே சட்டப்பேரவைத் தேர்தலுக்கான விருப்ப மனுக்கள் கடந்த பிப்ரவரி 20-ம் தேதி தொடங்கி விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை சுமார் 5 ஆயிரத்துக்கும் மேலான மனுக்கள் விற்பனையாகியுள்ளன. இதற்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் மார்ச் 6-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக திமுக அறிவித்துள்ளது.

## வேளச்சேரியா... விருகம்பாக்கமா... பெரம்பூரா? - விஜய் களமிறங்கும் தொகுதிக்கு எகிறும் எதிர்பார்ப்பு



தவெக தலைவர் விஜய் தனது முதல் தேர்தலில் எந்தத் தொகுதியில் போட்டியிடப் போகிறார் என்பதை அறிந்து கொள்வதில் தமிழக மக்களைவிட அரசியல் கட்சி தலைவர்கள் அதிக ஆர்வத்துடன் இருக்கிறார்கள். தவெக-வின் முதல் மாநாட்டை கூட்டிய விக்கிரவாண்டி, சிறுபான்மையினர் வாக்குகள் அதிகம் இருக்கும் திருச்சி கிழக்கு, அல்லது கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தொகுதி என்று ஆளாளுக்கு ஒரு தொகுதியை விஜய்காக இத்தனை நாளும் விளம்பரப்படுத்தி வந்த நிலையில், தற்போது சென்னையில் இருக்கும் விருகம்பாக்கம், வேளச்சேரி, பெரம்பூர் ஆகிய 3 தொகுதிகளில் ஒன்றில் விஜய் களமிறங்கலாம் என லேட்டஸ்ட் அப்டேட் தருகிறது தவெக வட்டாரம்.

இதுகுறித்து நம்மிடம் பேசிய தவெக நிர்வாகிகள் சிலர், "விஜய்யின் ராசி மற்றும் பெயரின் முதல் எழுத்தான 'வி' சென்டிமென்ட் படி, விருகம்பாக்கம் அல்லது வேளச்சேரி தொகுதியில் நின்றால் வெற்றி பிரகாசமாக இருக்கும் என வழக்கமாக விஜய்க்கு ஜோதிடம் கணித்துச் சொல்லும் ஆன்மிகப் பெரியவர் சொல்லி இருக்கிறார். அதன்படி அந்தத் தொகுதிகளில் முதல்கட்ட வேலைகள் சத்தமில்லாமல் நடந்தன.

இதனிடையே, ஆதவ் அர்ஜுனா தனது 'வாய்ஸ் ஆஃப் காமன்' நிறுவனம் மூலம் பெரம்பூர் தொகுதியில் தான் போட்டியிடப் போவதாகச் சொல்லி ஒரு சர்வே நடத்தினார். இந்தத் தொகுதியில் பட்டியலின மற்றும் வன்னியர் சமூகத்தினர் சரிபாதியாக வசிக்கிறார்கள். நடுத்தர வர்க்கம் மற்றும் கூலித் தொழிலாளர்களின் வாக்குகள் இங்கே வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் சக்தியாக இருப்பதால் பெரம்பூரில், தான் போட்டியிடுவதை விட விஜய் போட்டியிட்டால் களம் சரியாக இருக்கும் என கணித்துச் சொல்லி இருக்கிறார் ஆதவ்.

## களை கட்டும் தேர்தல் களம்: திருப்பூரில் கட்சி கொடிகள் தயாரிக்கும் பணி தீவிரம்



தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இதையொட்டி கூட்டணியை இறுதி செய்யும் பணியில் தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளும் தீவிரமாக இறங்கியுள்ளன.

இதுமட்டுமின்றி போட்டி போட்டு இலவச அறிவிப்புகளை வெளியிட்டு அதை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தி வருகின்றன. மாநாடுகள், பொதுக்கூட்டங்களிலும் அரசியல் கட்சிகள் படுபிசியாகி உள்ளன. மாநில தலைவர்கள், தேசிய தலைவர்கள் வருகை, கூட்டங்களினால் தேர்தல் களம் களை கட்டியுள்ளது. தேர்தல் காரணமாக அரசியல் கட்சிகளின் கொடிகளுக்கும் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

கட்சி கொடிகளுக்காக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்களும், தற்போது திருப்பூரை நோக்கி படையெடுக்க தொடங்கியுள்ளனர். அரசியல் கட்சிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், திருப்பூரில் இரவு, பகலாக கொடிகள் தயாரிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். சிறிய அளவிலான கொடி முதல்,மாநாடு களில் பறக்கவிடப்படும் பெரிய அளவிலான கொடிகள் வரை தற்போது தயாராகி வருகின்றன.

கூட்டணி பேச்சுவார்த்தை இன்னும் சரிவர முடியாத நிலையிலேயே கொடிகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. கூட்டணி இறுதியானால் மேலும் கூடுதலாக கொடிகள் தேவைப்படும் என்பதால், கொடிகள் தயாரித்து இருப்பு வைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக அதிக அளவில் கட்சிக்கொடிகள் தேவைப்படும் நேரத்தில், சூரத்தில் இருந்தும் கொடிகளை வரவழைத்து வழங்கவும் தயாரிப்பாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

## திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி - எந்த வண்டியில் ஏறப் போகிறார் ராமதாஸ்?



தேர்தலுக்குத் தேர்தல் வெற்றிக் கூட்டணியில் இடம்பிடித்த காலம் போய் இப்போது எந்தக் கூட்டணிக்கும் போகமுடியாத இக்கட்டில் சிக்கிக் கொண்டு தவிக்கிறார் பாமக நிறுவனர் ராமதாஸ்.

அதிமுக கூட்டணியில் அன்புமணி முன்கூட்டியே துண்டு போட்டு இடம் பிடித்துவிட்டதால், இயல்பாகவே ராமதாஸ் திமுக அணி பக்கம் தான் போவார் என்று பேசப்பட்டது.

ஆனால், "பாமக, பாஜக இருக்கும் அணியில் விசிக இருக்காது" என திருமா அதற்கு ஆரம்பத்திலேயே அணை போட்டார்.

திருமாவை பகைத்துக் கொண்டு ராமதாஸை உள்ளே சேர்க்க திமுக-வும் தயாராய் இல்லை என்று தெரிந்ததும் அடுத்ததாக தவெக பக்கம் தூது போனார்கள் அய்யாவின் விசுவாசிகள்.

ஆனால், பாமக-வின் ஒரு பிரிவைகூட்டணியில் சேர்ப்பதால் வடமாவட்டங்களில் பட்டியலின மக்களின் பகையை சம்பாதிக்க வேண்டியது இருக்கும்" என ஆலோசகர்கள் எச்சரிக்கை மணி அடித்ததால் ராமதாஸுக்கு பனையூர் கேட்டும் மூடிக் கொண்டது.

இதனால், "இப்படி நாலா பக்கமும் கூட்டணி அமைக்க அல்லல்படுவதற்கு பதிலாக அய்யா தேர்தலை புறக்கணித்தே விடலாம்" என பாட்டாளி சொந்தங்கள் விரக்தியில் பேசுமளவுக்குப் போய்விட்டனர்.

இந்நிலையில், சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக பாமக மற்றும் வன்னியர் சங்க நிர்வாகிகள் உடனான கலந்தாய்வுக் கூட்டம் திண்டிவனம் அடுத்த தைலாபுரத்தில் நேற்று நடைபெற்றது.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய பாமக நிறுவனர் ராமதாஸ், "கூட்டணியை இன்றே முடிவு செய்ய முடியாது.

அதற்கான களம் இன்னும் சரியாக அமையவில்லை. நேரம் வரும்போது தெரிவிப்போம். திராவிடக் கட்சிகளுடன் கூட்டணிஇருக்கும். 'நமக்கான வாகனம் தயாராகிவிட்டது' என நான் தொண்டர்களுக்கு எழுதிய மடல் குறித்து கேட்கிறீர்கள். இது தேர்தல் வாகனம் தான்.. எந்த வாகனத்தில் போகிறோம் என்பது பிப். 28-ம் தேதிக்குள் தெரிவிக்கப்படும்" என்றார்.

"கூட்டணிக்கான களம் இன்னும் சரியாக அமையவில்லை" என முதலில் சொன்னவர் பிறகு, "28-ம் தேதிக்குள் எந்த வாகனத்தில் போகிறோம் என்று தெரிந்துவிடும்" என்று தெரிவித்ததில் இருந்தே எந்தத் திசையில் பயணிக்கப் போகிறோம் என்பதை அவர் இன்னும் முடிவெடுக்க முடியாமல் இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

## மாணவர்களின் படைப்புகளை காட்சிப்படுத்தும் வகையில் இரண்டு நாள் கண்காட்சி

**கடலூர், மார்ச் 2:**

கடலூர், நகர அரங்கில் கற்றல் கொண்டாட்டம் திட்டத்தின் மூலம் பயின்ற மாணவர்களின் படைப்புகளை காட்சிப்படுத்தும் வகையில் இரண்டு நாள் கண்காட்சியினை கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

முதலமைச்சர் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

தனியார் பள்ளி மாணவர்களுக்கு இணையாக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவ,மாணவிகள் தங்களது திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையிலும், வகுப்பறை கற்றலுக்கு அப்பால் சென்று மாணவர்கள் தங்கள் ஆர்வங்கள், திறமைகள் மற்றும் தலைமைத்துவ திறன்களை மேன்மைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கும் வகையிலும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கோடை விடுமுறையில் அரசு பள்ளி மாணாக்கர்களுக்காக “கோடையில் கற்றல் கொண்டாட்டம்“ என்ற சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டது. இப்பயிற்சி வகுப்புகள் மூலம் மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர் களிடமிருந்து பெருவாரியான வரவேற்பு மற்றும் மாணவர்களின் திறன்களில் முன்னேற்றம் ஏற்பட்டது.

மாணவர்களின் தனித்திறன்களை வெளிப்படுத்தும் வகையில் மாணவர்களால்வரையப்பட்டபாரம்பரிய ஓவியங்கள், அருப ஓவியங்கள், கட்டமைக்கப்பட்ட வடிவ ஓவியங்கள், இயற்கை காட்சி ஓவியங்கள், பல்வகை இந்திய ஓவியங்கள், மாணவர்களால் தயாரிக்கப்பட்ட மண்பாண்டப் பொருட்கள்,நிழற்படங்கள், வாசிப்போம் உயர்வோம்மாணவர்களின்படைப்புகள் ஆகிய அரங்குகள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளது என்றார்.

## விழுப்புரத்தில் தேசிய அளவிலான கல்வி விழா

**விழுப்புரம், மார்ச் 2:**

விழுப்புரத்தில் முதுநிலை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் வேதியியல் துறை, மருத்துவ ஊட்டச்சத்து துறை, மருந்தியல் உள்ளிட்ட துறைகளின் சார்பில் தேசிய அளவிலான கல்வி விழா நடைபெற்றது.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, ஆயுர்வேதோ நிறுவனத்தில் பணிபுரியும் படைப்புத்திறன் ரச்சனா குமாரி தலைமை தாங்கி, உணவு மற்றும் மனித ஆரோக்கியம் குறித்து விளக்கினார். தரணியா வரவேற்றார்.

தொடர்ந்து பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. இதில், 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். தொடர்ந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

கல்லூரி முதல்வர் கலைமதி, உதவி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## 12 ஆண்டுகளுக்குப் பிறகு வெளியே வந்த அத்திவரதர்!

**தஞ்சாவூர், மார்ச் 2:**

*12 ஆண்டுகளுக்குப் பிறகு பாதாள அறையில் இருந்து வெளியே வந்த அத்திவரதரை, ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர்.*

*தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம், பிரம்மன் கோவில் தெருவில், சௌராஷ்டிர தர்ம பரிபாலன கமிட்டி நிர்வாகத்தால், கடந்த 1739 ஆம் ஆண்டு கட்டப்பட்ட வரதராஜ பெருமாள், வேதநாராயண பெருமாள் கோயில் உள்ளது.*

*இக்கோயிலில், அத்திமரத்தினால் உருவாக்கப்பட்ட, அத்திவரதரை தரிசனம் செய்தால் சகல தோஷங்களும், முன்ஜென்ம பாவங்களும், நினைத்த காரியம் கைகூடும் என்பது ஐதீகம்.*



*கடந்த 1915 ஆம் ஆண்டு அத்திவரதர் பாதாள அறையில் இருந்து வெளியே வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். அதன் பின்னர் சுமார் 98 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 2013 ஆம் ஆண்டு, அத்திவரதர் வெளியே வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.*

*இந்த நிலையில் 12 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று முதல் வரும் 10 ஆம் தேதி வரை ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் வெளியே வந்து பக்தர்களுக்கு அருள்புரியவுள்ளார்.*

*அத்திமரத்தால் செய்யப்பட்ட அத்திவரதர், பாதாள அறையில் இருந்து எடுத்து வரப்பட்டு, தைலகாப்பு அலங்காரம் செய்து, சிறப்பு தீப ஆராதனை காண்பிக்கப்பட்டு, பக்தர்களின் பார்வைக்காக கோயில் மண்டபத்தில் வைக்கப்பட்டது. விழா நாள்களில் தைலகாப்பு, புஷ்பசேவை, ஊஞ்சல் சேவை ஆகியவை நடக்கிறது. தினமும் காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரையும் சாமி தரிசனம் செய்ய உகந்த நேரம் என சௌராஷ்டிர தர்மபரிபாலன கமிட்டி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.*

*இதனை தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அத்திவரதரை தரிசனம் செய்து வருகின்றனர்.*

*காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயிலில், 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை அத்திவரதர் குளத்தில் இருந்து கொண்டுவரப்பட்டு, 48 நாள்களுக்கு பக்தர்களுக்கு சயன மற்றும் நின்ற கோலத்தில் அருள்பாலிப்பது குறிப்பிடத்தக்கது.*

## திருவெண்காட்டில் இந்திர திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்!

**மயிலாடுதுறை, மார்ச் 2:**

*திருவெண்காட்டில் உள்ள பிரம்ம வித்யாம்பிகை சமேத சுவேதாரண்யேஸ்வரர் கோயிலில் இந்திர திருவிழா சனிக்கிழமை இரவு கொடியேற்றத்துடன் தொடங்கியது.*

*மயிலாடுதுறை மாவட்டம், திருவெண்காட்டில் பிரசித்தி பெற்ற பிரம்ம வித்யாம்பிகை சமேத சுவேதாரண்யேஸ்வரர் கோயில் உள்ளது.*

*இக்கோயிலில் சிவனின் 5 முகங்களில் ஒன்றான அகோர முகத்தில் அகோர மூர்த்தியாக காட்சியளித்து வருகிறார்.*

*மேலும் நவகிரகங்களில் ஒன்றான புதனின் பரிகார ஸ்தலமாகவும் விளங்குகிறது. உலகிலேயே மூன்று குளங்களைக் கொண்ட ஒரே கோயிலாக இது விளங்குகிறது. பல்வேறு சிறப்புகளை கொண்ட இக்கோயிலின் இந்திர திருவிழா சனிக்கிழமை இரவு கொடியேற்றத்துடன் தொடங்கியது.*

*இதனையொட்டி கோயிலின் கொடிமரம், விநாயகர் மற்றும் நந்தி ஆகியவற்றுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யப்பட்டன. பின்னர் வேத மந்திரங்கள் முழங்கிட அர்ச்சகர் ராஜப்பா சிவாச்சாரியார் நந்தி உருவம் பொறித்த கொடியை ஏற்றி வைத்து உற்சவத்தை தொடக்கி வைத்தார்.*

*இதனைத் தொடர்ந்து பஞ்சமூர்த்திகள் வீதி உலா காட்சி நடந்தது. இதில் அறங்காவலர் குழு தலைவர் ரவி, நிர்வாக அதிகாரி முருகன் உள்ளிட்ட திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.*

## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் 3ந் தேதி பங்காரு அடிகளார் 86வது பிறந்தநாள் விழா

**மேல்மருவத்தூர், மார்ச் 2:**

*மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் ஆன்மிக குரு பங்காரு சித்தரின் 86ஆவது பிறந்தநாள் விழா மார்ச் 3ம் தேதி ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது.*

*இந்த நிகழ்ச்சியை ஒட்டி சித்தர் பீடம் முழுவதும் வண்ண விளக்குகளாலும், மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. நாளை (ஞாயிற்றுக்கிழமை) 1ம் தேதி காலை 3 மணிக்கு மங்கல இசையுடன் துவங்குகிறது. கருவறையில் உள்ள ஆதிபராசக்தி அம்மனுக்கும் குருபீடத்தில் உள்ள ஆன்மிக குரு அருள்மிகு பங்காரு சித்தர் திருவுருவ சிலைக்கும் ஆன்மிக இயக்கத்தின் துணைத் தலைவர் அன்பழகன் மற்றும் குடும்பத்தினர் அபிஷேக ஆராதனைகள் செய்கிறார்.*

*மார்ச் 3ந் தேதி காலை 9.30 மணி அளவில் ஆன்மிக குரு பங்காரு சித்தரின் திருவுருவச் சிலை வைக்கப்பட்ட வெள்ளி ரத தேர்த்திருவிழா நடைபெறும். 9.45 மணியளவில் சித்தர் பீடம் வருகை தரும் ஆன்மிக இயக்கத் தலைவர் லட்சுமி பங்காரு அடிகளாருக்கு சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட ஆன்மிக இயக்கத்தைச் சார்ந்த நிர்வாகிகளும், பக்தர்களும் சிறப்பான வரவேற்பு அளிக்க உள்ளனர். காலை 10.30 மணிக்கு ஆன்மிக குரு பங்காரு சித்தர் திருப்பாதுகைகள் சிலைக்கு பாத பூஜை நடைபெறும். இதனைத் தொடர்ந்து மாலை 3.45 மணிக்கு கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஆதிபராசக்தி சித்தர் பீடத்திற்கு கொண்டு வரப்படும் ஆன்மிக ஜோதிகளுக்கு ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத் துணைத்தலைவர் செந்தில்குமார் வரவேற்பு அளிக்க உள்ளார். தொடர்ந்து ஆன்மிக இயக்கத் துணை தலைவர் ஸ்ரீதேவி பங்காரு, கலச விளக்கு வேள்வி பூஜையை மாலை 4 மணிக்கு தொடங்கி வைக்கிறார்.*

*ரதத் தேர்த் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான செவ்வாடை பக்தர்கள் கலந்து கொள்ள உள்ளனர். 10 மணிக்கு குரு பீடத்தில் உள்ள ஆன்மிககுரு பங்காரு சித்தர் திருப்பாதுகைகள் சிலைக்கு பக்தர்கள் பொது பாத பூஜை செய்கிறார்கள். தொடர்ந்து அன்னதானத்தை ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அகத்தியன் துவக்கி வைக்கிறார். மேலும் பங்காரு அடிகளாரின் பிறந்த தினமான 3ம் தேதி செவ்வாய் கிழமை காலை 10.50 மணிக்கு ஆன்மிக குரு பங்காரு சித்தர் அவர்களின் திருப்பாதுகைகள் சிலைக்கு பக்தர்களின் பொது பாத பூஜையும், அருள் தரிசனமும் நடைபெற உள்ளது.*

*தொடர்ந்து மாலை 4.35 மணிக்கு மாபெரும் மக்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் விழா மலர் வெளியிடும் விழாவும் நடைபெறுகிறது. இந்த நலத்திட்ட உதவிகளில் பலரும் பயனடைய உள்ளனர்.*




## உயிர்காக்கும் அவசர சிகிச்சைக்காக தானம் செய்யப்பட்ட சென்னை மெட்ரோ ரெயிலில் விரைவாக கொண்டு செல்லப்பட்ட நுரையீரல், இதயம்



**சென்னை, மார்ச் 2:**

மாற்று அறுவை சிகிச்சைக்காக தானம் செய்யப்பட்ட நுரையீரல் மற்றும் இதயம் குறித்த நேரத்தில் சென்னை மெட்ரோ இரயிலில் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மீனம்பாக்கம் மெட்ரோ நிலையத்திலிருந்து ஏஜி-டிஎம்எஸ் மெட்ரோ நிலையம் வரை, மாற்று அறுவை சிகிச்சைக்காக தானம் செய்யப்பட்ட நுரையீரல் மற்றும் இதயத்தை கொண்டு சென்று உயிர் காக்கும் பொருட்டு துரித போக்குவரத்து உதவியை வழங்கி முக்கிய பங்காற்றியது. மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களின்படி, சமீபத்தில் கொண்டு வரப்பட்ட மெட்ரோ இரயில்வே திருத்த விதிகள், 2023-ன் கீழ் இந்த சேவை வழங்கப்பட்டது.

மதுரையில் இருந்து ஏர் ஆம்புலன்ஸ் மூலம் தானம் செய்யப்பட்ட உடல் உறுப்புகளைக் கொண்டு வந்த மருத்துவகுழுவினர், சென்னை விமான நிலையத்திலிருந்து மீனாம்பாக்கம் மெட்ரோ நிலையத்தை வந்தடைந்தனர். சென்னை மெட்ரோ இரயில் அலுவலர்கள் மற்றும் நிலைய பணியாளர்களின் முழு ஆதரவு மற்றும் ஒருங்கிணைப்புடன், அந்தக் குழுவினர் அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு மெட்ரோ இரயிலில் ஏறி இடைப்பட்ட எந்த மெட்ரோ இரயில் நிலையங்களிலும் நிற்காமல் ஏழு நிலையங்களை 9 நிமிடத்தில் கடந்து, ஏஜி-டிஎம்எஸ் மெட்ரோ நிலையத்தை பாதுகாப்பாக வந்தடைந்தனர். அங்கிருந்து, மருத்துவக் குழுவினர் உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் க்ரீம்ஸ்சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனைக்கு விரைந்தனர்.

அங்கு நுரையீரல் மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை நடைபெற திட்டமிடப்பட்டது. சென்னை மெட்ரோ இரயில், திறம்பட்ட நகரப் போக்குவரத்தை மட்டுமின்றி அவசர மருத்துவ சேவைகள் மற்றும் உயிர் காக்கும் முயற்சிகளில் பங்களித்து பொதுச்சேவைக்கான தனது அர்ப்பணிப்பை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விண்வெளியில் கண்டுபிடிக்கப்பட்ட ரகசியம்! பூமியைப் போல 140 டிரில்லியன் மடங்கு பிரம்மாண்ட கடல்...

நமது பூமியில் உள்ள பரந்து விரிந்த கடல்களைப் பார்த்துநாம்பலநேரங்களில் ஆச்சரியப்படுவதுண்டு. ஆனால், ஒட்டுமொத்த பிரபஞ்சத்தையும் கணக்கில் கொண்டால் நமது பூமி வெறும் ஒரு சிறிய நீல நிறப் புள்ளிதான் என்பதை நிரூபிக்கும் வகையில் ஒரு பிரம்மாண்ட கண்டுபிடிப்பு தற்போது நிகழ்ந்துள்ளது.

விண்வெளி ஆராய்ச்சி யாளர்கள் இதுவரை மனிதகுலம் கண்டிராத அளவுக்கு மிகப் பெரிய அளவிலான ஒரு நீர் ஆதாரத்தைவிண்வெளியில் கண்டுபிடித்து அசத்தியுள்ளனர். இது பூமியில் உள்ள அனைத்து கடல்களின் நீரை விட சுமார் 140 டிரில்லியன் மடங்கு அதிகமானது என்பது கற்பனைக்கே எட்டாத ஒரு விஷயமாகும்.

இந்த மெகா கடல் சாதாரணமாக விண்வெளியில் எந்த ஆதரவும் இல்லாமல் மிதக்கவில்லை. ‘APM 08279+5255’ என்று பெயரிடப்பட்டுள்ள ஒரு அதிவேக விண்மீன் மண்டலத்தின் நடுவேதான் இது அமைந்துள்ளது. இதை விஞ்ஞானிகள் குவாசார் என்று அழைக்கிறார்கள். இதன் மையப்பகுதியில் மிகவும் சக்திவாய்ந்த ஒரு சூப்பர்மாசிவ் கருந்துளை செயல்பட்டு வருகிறது.

அதுதன்னைச்சுற்றியுள்ள வாயுக்களை எல்லாம் அசுர பசியுடன் ஈர்த்து விழுங்கி, ஈடு இணையற்ற



ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த இடம் பூமியில் இருந்து சுமார் 12 பில்லியன் ஒளி ஆண்டுகள் தூரத்தில் அமைந்திருக்கிறது. அதாவது பிரபஞ்சம் தோன்றி ஒரு சில பில்லியன் ஆண்டுகளே ஆன தொடக்கக் காலகட்டத்தின் ஒரு பதிவைத்தான் நாம் இப்போது பின்னோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

கண்டுபிடிப்பின் பின்னணி!

இந்த குவாசார் இவ்வளவு பிரகாசமாகத் தெரிவதற்கு ஈர்ப்பு விசை லென்சிங் என்ற ஒரு அறிவியல் நிகழ்வுதான் முக்கிய காரணம் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

குவாசாருக்கும் நமது பூமிக்கும் நடுவே உள்ள மற்றொரு விண்மீன் மண்டலம் ஒரு பெரிய பூதக்கண்ணாடி போலச் செயல்பட்டு, இதன் ஒளியை சுமார் நாற்பது மடங்கு பெரிதாக்கி நம் கண்களுக்குக் காட்டுகிறது. இந்த உருப்பெருக்கம் இல்லாவிட்டாலும் கூட, இந்த அமைப்பு நமது சூரியனைவிட நூறு டிரில்லியன் மடங்கு அதிக வெளிச்சம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் மையத்திலிருந்து வெளியாகும் வாயுக்கள் ஒரு வினாடிக்கு ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் வேகத்தில் சீறிப்பாய்ந்து வெளியேறுகின்றன. பிரபஞ்சத்தின் ஆரம்ப காலகட்டத்திலேயே தண்ணீர் இவ்வளவு பரவலாக இருந்துள்ளது என்பதை இந்த ஆய்வு ஆணித்தரமாக உணர்த்துகிறது.

மேலும், அங்கு சூழ்ந்துள்ளதண்ணீர்மற்றும் கார்பன் மோனாக்சைடு மேகங்களின் அளவை வைத்துப் கணக்கிடும்போது, அந்த மையக் கருந்துளை இப்போது இருப்பதைவிட இன்னும் ஆறு மடங்கு பெரிதாக வளரக்கூடிய வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபஞ்சத்தின் ஆரம்ப காலத்திலேயேநீர் பரவலாக இருந்துள்ளது என்பதை இது நிரூபிக்கிறது.

விண்வெளி வரைபடங்களில் (IRAS FAINT SOURCE CATALOG) இது போன்ற இன்னும் பல பிரம்மாண்டமான பொருட்கள் மறைந்திருக்கலாம் என்பதை இது உணர்த்துகிறது. இந்த ஆய்வு முடிவுகள் ‘ஆஸ்ட்ரோபிசிகல் ஜர்னல் லெட்டர்ஸ்’ (ASTROPHYSICAL JOURNAL LETTERS) இதழில் வெளியிடப்பட்டுள்ளன. விண்வெளியின் ரகசியங்களை அவிழ்க்க இயற்கை நமக்கு வழங்கிய ‘இயற்கை தொலைநோக்கி’ தான் இந்த ஈர்ப்பு விசை லென்சிங் முறை.

# உயர்ந்த உள்ளம்




" இன்று மாதவியை பார்க்க அவளிடம் ஆட்டோகிராப் வாங்க க்யூவில் நிற்கும் ஆட்களே இல்லை . அவள் பிரபல ரோபோ தயாரிப்பு கம்பெனியின் சி.இ.ஓ.

திருமண வயது கடந்தும் இன்னும் தலையை குனிந்து யாருக்கும் கழுத்தை நீட்டாமல் இருக்க காரணம் அவள் பணத்தை விரும்பாமல் குணத்தை விரும்பிய வனை தேடிக் கொண்டு இருந்தாள் .

அன்புக்கும் ஆறுதலுக்கும் தவிப்புக்கும் தவித்துக் கொண்டிருந்தாள் மாதவி . இந்த ஆடம்பர கார், பணம் காய்க்கும் வேலை, சொகுசு வாழ்க்கை எல்லாம் மாதவியின் வெளி தோற்றம் தான்.

தாய் தந்தையை இழந்து விட்டு பாட்டியின் வளர்ப்பில் அன்பில் கரைந்தவள் மாதவி . மாதவிக்கு தெரியாமல் அவள் கல்லூரி காலம் முதல் மறைமுகமாக உதவி செய்த மாதவன் தாய் தந்தை இல்லாத அவளின் அன்பிற்கும் பாசத்திற்கும் ஏங்கித் தவித்தான்.

மாதவியின் தேவை எதுவானாலும் அதை தலை மேல் கொண்டு அவளுக்கு தெரியாமல் பாட்டி மரகதம் மூலம் செய்து முடிப்பான் மாதவன் .

ஆனால் மாதவனைப் பற்றி எல்லாம் தெரிந்த பாட்டி மரகதம் மாதவியிடம் என்றும் வாய் திறக்க வில்லை.

" ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள் மாதவி தன் குடும்ப சூழ்நிலையை மீறி பள்ளிப் படிப்பு கல்லூரி படிப்பு ஆராய்ச்சி படிப்பு என்று எதிர்நீச்சல் போட்டு படித்தாள்.

தன் தாய் தந்தை செய்யும் கூலி வேலையில் வரும் வருமானத்தில் தானும் தினமும் சில இடத்தில் வேலை செய்து பணம் சேர்த்து படிப்பை முடித்தாள்.

அதற்குள் தாயும் தந்தையும் நோயால் அவதிப்பட்டு இறந்து விட பாட்டி மரகதம் வீட்டில் தஞ்சம் புகுந்தாள்.

பல கம்பெனிகளில் வேலை பார்த்து அனுபவம் பெற்று இன்று பிரபல ரோபோ கம்பெனியில் சி.இ.ஓ.

பள்ளிப் பருவம் கல்லூரிப் பருவம் ஆராய்ச்சி பருவம் என்று தனக்கு சின்னச் சின்ன உதவி செய்த மாணவ மாணவியர் பெயரை தன் பாட நோட்டில் குறித்து வைத்தாள் மாதவி .

அந்த நோட்டுப் பட்டியல் அனைவருக்கும் நல்ல வேலை வாங்கி அமர வைத்து அழகு பார்த்தாள் மாதவி .

இன்று மாதவி அந்த ஊரில் உள்ள பள்ளியில் ஆசிரியர் . மாதவியின் வளர்ச்சி பதவி பணம் ஆடம்பரம் தெரிந்து தன் ஆசைக்கு தடை போட்டு மறக்க முயன்றான் .

பாட்டி மரகதம் சாலையைக் கடக்க முற்பட்ட போது விபத்து ஏற்பட்டு படுக்கையில் விழுந்தாள் . அது நாள் முதல் தன்னால் முடிந்த உதவியை மரகம் அம்மாவிற்கு மாதவிக்கு தெரியாமல் செய்விட்டு கிளம்பிவிடுவான் மாதவன்.

தனக்கு உதவிய அனைவருக்கும் சின்ன உதவியாவது செய்து விட்டேன் எதிர்பார்ப்பு எதுவும் இல்லாத உனக்கு எப்படி கைமாறு செய்வது பாட்டி என்று மனம் உருக கேட்டாள் மாதவி .

உன் இளமைக் கல்விக் காலம் முதல் என் படுக்கைக் காலம் வரை உன் நிழலாக என் பக்க பலமாக இன்றும் தொடரும் மாதவனுக்கு என்ன பதில் சொல் பிறகு எனக்கு கைமாறு செய்யலாம் என்றாள் மரகதம் . ஒரு வாரம் உனக்கு அவகாசம் என்றாள் அழுத்தமாக.

விழித்து கண்ணீர் வெளிப்பட கன்னம் சிவக்க முகம் வீங்கிட மாதவன் பற்றிய விபரத்தை மறைமுகமாக சேகரிக்க தொடங்கினாள் மாதவி . விபரம் சேர சேர மாதவி மனம் கரைந்து கண்ணீரில் நனைந்தது.

பாட்டியின் ஒரு வாரக் கெடு இன்று தான் முடிவடைகிறது , மாலையில் வீடு திரும்பிய மாதவி ஒரு சின்னப் பெட்டியை மரகதம் பாட்டியிடம் கொடுத்து விட்டு மாதவன் வந்த பிறகு பிரித்து பார்க்க சொல்லி விட்டு வெளியில் சென்றாள்.

மாதவன் தன் வீட்டிற்கு வந்ததும் மரகதம் நடந்ததைச் சொல்லி விட்டு அந்த பெட்டியை எடுத்து தன் கண் முன் திறக்கச் சொன்னாள் .

மாதவன் பெட்டியை திறந்த போது கண்ணீர் இருவர் கண்ணிலும் வழிந்தது. அழகான மஞ்சள் கயிறில் கோர்க்கப்பட்ட தாலி மாதவியின் உயர்ந்த உள்ளத்தை ஜொலித்த படி காட்டிக் கொண்டிருந்தது.

- சீர்காழி.
**ஆர்.சீதாராமன்.**

# துணை தேடல்



நீலமேகம் வந்தபோது வன்மீகநாதன் மட்டும்தான், காந்திமதியின் அருகில் அமர்ந்திருந்தார். தலைமாட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கண்கள் சுருங்கி காதுகள் விடைத்து; கன்னங்கள் இறுக மௌனமாக அழுவது நன்றாகவே தெரிந்தது.என்ன பேசுவது என்று தெரியாமல் உதிர்த்த ' நாதா' என்ற ஒற்றைச் சொல் வன்மீகநாதனை உலுக்கியது. 'நீலூ! என்னடா இப்படி ஆயிடுத்தே. நன்றாகத்தானே இருந்தா! டி.வி யில் சஞ்சய் சுப்பிரமணியம் கச்சேரி கேட்டுண்டடே ஃபோனை பார்த்துண்டு இருந்தா. அப்படியே சரிஞ்சுட்டா. டாக்டருக்கும் உனக்கும் தாண்டா ஃபோன் பண்ணினேன். எனக்குத் தெரிஞ்சுடுத்து. டாக்டரால் என்ன பண்ண முடியும்?' என்று சொல்லி மனம் உடைந்து கதறி அழுதார். டாக்டர் வந்து பார்த்துவிட்டு' லுக்ஸ் லைக் மேஸிவ் ஹார்ட் அட்டாக்' எனக் கூறிவிட்டு நகர்ந்தார்.


நீலமேகம் மற்ற ஏற்பாடுகளை கவனிக்கலானார். அவருடைய பெண் சுமதிக்கும், பிள்ளை மகேந்திரனுக்கு,ம் தகவல் சொல்லிய பிறகு நாதனின் உறவுக்காரர்களுக்கு அவர் ஃபோனிலிருந்தே தகவல் சொன்னார். நாதன் சொல்லியபடி , ஐயருக்கும் தகவல் சொல்லி; அவரும் வந்து சேர்ந்த பின் கூட,நாதனோடு உட்கார்ந்து ஆறுதல் சொல்ல நேரமில்லையே; என்று நினைத்துக் கொண்டார். உற்றாரும் உறவினரும் ஒவ்வொருவராக வந்தனர். திருச்சி யிலிருந்து அவர் தம்பி பஞ்சாபகேசன் வந்து சேர்ந்தது அவருக்கு ஆறுதலாக இருந்தது. நாதனின் வீட்டு வழக்கப்படி மேலே ஆகவேண்டிய காரியங்களை பஞ்சாபகேசன் செய்யலானார். பெங்களூரிலிருந்தும் மும்பையிலிருந்தும் சுமதியும் மகேசனும் விமானத்தில் புறப்பட்டு விட்டதாக பஞ்சாபகேசன் சொல்ல; நீலமேகத்திற்கு நாதன் பக்கத்தில் உட்கார அவகாசம் கிடைத்தது. துவண்டு போயிருந்த நாதனுக்கு 'சட் ' என் முதுமை கூடிவிட்டது போல் இருந்தது. ' கேனிலிருந்து காஃபியை கொண்டு வந்து கொடுத்தவர்' சுகர் இறங்கிடும். அப்புறம் உன்னை யார் பார்ப்பது? நாளைக்கு ரொம்ப டென்ஷனான நாள். யாரிடமும் ரொம்ப பேசாதே' என்று சொல்லியவர்,சற்று நேரத்தில் அவரை வற்புறுத்தி, தன் வீட்டிலிருந்து கொண்டு வந்த இரண்டு ரொட்டி துண்டுகளை கொடுத்து, அவருடைய வழக்கமான மருந்துகளைச் சாப்பிட வைத்தார். நீலு, நாதன் பக்கத்தை விட்டு எங்கும் நகரவில்லை. காலையில் அவர் குழந்தைகள் வந்து விட, காந்திமதியின் இறுதிச் சடங்குகள் செவ்வனே நிறைவேறியது.

தினம் நீலமேகம் அவரை வந்து பார்த்துவிட்டுச் சென்றார்.

நாதன் வீட்டார் வழக்கப்படி பதினைந்தாம் நாள் காரியம் முடிந்து உறவினர்கள் அவரவர் இல்லம் திரும்ப, சுமதியும் மகேசனும் அப்பாவை தங்களுடன் அழைத்துப் போவதில், முனைப்பாக இருக்க, நாதன் 'வங்கி வேலைகள் பென்ஷன் வேலைகள் இருப்பதால், நாலைந்து மாதம் கழித்து அது பற்றி யோசிக்கலாம்' என்று நேரம் எடுத்துக் கொண்டார். குழந்தைகளும் புரிந்து கொள்ள நீலமேகத்தின் பாதுகாப்பில் அவரை இப்போதைக்கு விட்டு விட்டு, சமையல் மற்றும் மேல் வேலைகளுக்கு உதவியாளர்களை ஏற்பாடு செய்துவிட்டு, அவர்கள் கிளம்பினார்கள்.

காந்திமதி போய் ஒரு மாதம் ஆயிருக்கும். வங்கி வேலைகளுக்கும், பென்ஷன் வேலைகளுக்கும் நீலமேகம் நாதன் கூடவே அலைந்தில்,கிட்டத்தட்ட வேலைகள் யாவும் முடிந்து விட்டன. ஒரு நாள் மாலை இருவரும் வழக்கம்போல் கோயில் பிரகாரத்தில் அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கும்போது' நீலு! எனக்காவது குழந்தைகள் இருக்கிறார்கள். உனக்கு குழந்தை கூட இல்லை.. உனது நாற்பத்தெட்டு வயசிலேயே சுந்தரி போனபின் தனியாகத் தானே இருக்கிறாயே! எப்படி உன்னால் இருக்க முடிகிறது? காந்தி இல்லாமல் இந்த ஒரு மாசம் போனதே எனக்கு ஒரு யுகம் போல் இருக்கிறது. எப்படித்தான் நீ இத்தனை வருடமும் வளைய வந்தாயோ? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது ' என்றார்; 'நாதன்.நான் எங்கே தனியா இருந்தேன்? இரண்டு வருடம் முன்பு வரை வேலைக்குப் போய் கொண்டுதானே இருந்தேன். சாயங்காலம் உன் வீட்டுக்கு வந்துவிடுவேன். கோயிலுக்குச் சேர்ந்தே போவோம்; தினம் தினம் இரவு தூங்கும் வரை ஏதாவது பேசிக்கொண்டிருப்போம்;இல்லையா? நமக்கு ஒன்று 'இல்லை' என்று ஆன பின் அதைப்பற்றி யோசிக்கவோ; அதற்காக ஏங்குதலினாலோ; என்ன பயன்? போனவர்கள் போனாலும்; நம் நேரம் வரும் வரை காத்திருக்கும் கட்டாயத்தில் தான் நாம் இருக்கிறோம். நான் விரக்தியாக பேசவில்லை. இவ்வுலகின் எதார்த்தத்தைப் பற்றிதான் பேசுகிறேன். ' என்று நீலமேகம் சொல்ல,' ஆம் !நாம் மரணத்தை நெருங்கவில்லை. அந்தத் துணிவு நமக்கில்லை. ஆயினும் மரணத்தின் கை எட்டும் தூரத்தில்தான் நாம் இருக்கிறோம். மரணம் நம் பின்னே நிழல் போல் வந்து கொண்டிருக்கிறதை நாம் அறிந்தே இருந்தாலும்; நாம் அது நம்மை ஆலிங்கனம் செய்யும் நிமிடம் வரை நமக்குத் தெரிவதில்லை. நம்மை அறியாமலே கொல்லும் ஆட்கொல்லி புலி போல்; இல்லையா? நாம் இறுதிவரை உயிர்ப்பாக இருக்க வேண்டியதின் அவசியத்தை காந்தியின் எதிர்பாரா மரணம் எனக்கு உணர்த்தி விட்டது. இறுதி தருணத்தில் கூட அவள் உயிர்ப்புடன் சஞ்ஜய் சுப்ரமணியத்தின் பாடலை ரசித்துக்கொண்டு ஃபோனில் ஏதோ எழுதிக்கொண்டு இருந்தாள். நமக்கு வயது இப்போது அறுபத்தி நான்கு ஆகிறது. நாமும் இறுதி வரை உயிர்ப்பாக இருக்கவேண்டும். தனிமையில் வாடி வதங்குதல் கூடாது. நாம் நல்ல துணையுடன் இருக்க வேண்டிய நேரம் இதுதான். இல்லையென்றால் தனிமையே நம்மை தின்றுவிடும்.' என்ற நாதனை ' 'இவன் என்ன சொல்கிறான்;' என்பது போல் திகிலுடன் பார்த்தார். இவன் தங்கச்சி காந்தியின் மேல் உயிராகத்தானே இருந்தான்! இப்போது என்ன; இப்படி பேசுகிறானே; என்று கலவரம் அடைந்தாலும்; அப்போதைக்கு இந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான் சரி; என்று நினைத்து அமைதியானார்; நீலமேகம். அடுத்த ஒரு மாதத்தில் நாதன், ஒரு புது மனிதனாக மாறிவிட்டதைப் பார்த்தார் நீலமேகம்.வீட்டை துப்புரவு செய்து புது வண்ணம் அடித்து 'வீடு வாடகைக்கு' என்று தகவல் பலகையை வைத்ததை பொருள் விளங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். மகேசனுடன் போவதாக முடிவெடுத்து விட்டார்; என்றே நினைத்தார்.வாடகைக்கு குடும்பம் ஒன்று வந்த மறுநாள். தனது அத்தியாவசிய சாமான்கள் உடைகள் மடிக்கணினியுடன் நீலமேகம் வீட்டிற்கு வந்தார். இனிமேல் இதுதான் என் வீடும். மீதியிருக்கும் நாட்களில் நாம் ஒன்றாக இருக்கலாம்; ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாக. உயிர்ப்புடன் வாழ எனக்கு நீயும், உனக்கு நானுமாக ஆதாரமாயும், துணையாகவும் இருப்போம்.' என்றதும், நீலமேகத்துக்கு பேச்சே வரவில்லை 'என்னடா சொல்கிறாய்! உளறாதே! உங்கள் வீட்டில் என்ன சொல்வார்கள்; உன் சொந்த பந்தம் இதை எப்படிப் பார்க்கும்; உன் பிள்ளைகள்... என்றவரை; மேலே பேசவிடாமல் தடுத்த வன்மீகநாதன்,' அதை எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். என் சாமான்களை ஒழுங்கு படுத்தி அடுக்கி வை. நான் இருவருக்கும் காஃபி போட்டு எடுத்து வருகிறேன். உதவியாளர்களை இனி இங்கேயே வரச் சொல்லியுள்ளேன்.' என்று சொல்லி சமையலறையில் புகுந்தார்.

நீலமேகத்திற்கு அன்று நாதன் கோயிலில் பேசியது நினைவில் வந்து முட்ட, அதன் பொருள் இப்போது நன்கு விளங்கி விட; புன்சிரிப்புடன், நாதனின் சாமான்களை ஒழுங்கு படுத்த ஆரம்பித்தார்.



**- சசிகலா விஸ்வநாதன்**

# திருவிளையாடல் புராணம் 24



**சிவ.முத்து லட்சுமணன்**
**போச்சம்பள்ளி.**

## கால் மாறி ஆடிய படலம்

இந்த படலம், சிவபெருமான் மதுரையில் வெள்ளியம்பலத்தில் கால் மாறி ஆடிய செய்தியை விவரிக்கிறது. பாண்டிய மன்னன் இராசசேகரப் பாண்டியனின் வேண்டுதலுக்கு இணங்கி, சிவன் தன் இடதுக்காலை ஊன்றி வலதுக்காலை உயர்த்தி ஆடியதை விளக்குகிறது.

விக்கிரம பாண்டியன் தனது மகனான இராசசேகர பாண்டியனுக்கு ஆட்சி உரிமையை அளித்து சிவப்பேறு பெற்றான். இராசசேகர பாண்டியன் சொக்கேசரிடம் பேரன்பு கொண்டு நல்வழியில் மதுரையை ஆட்சி செய்து வந்தான்.

அவன் ஆயகலைகள் 64-கில் பரதக்கலையைத் தவிர்த்து ஏனையவற்றில் தேர்ச்சி பெற்று சிறப்புற விளங்கினான்.

வெள்ளியம்பலத்தில் நடனம் புரியும் வெள்ளியம்பலவாணனிடம் அன்பு கொண்டு ‘இறைவன் திருநடனத்தினால் இவ்வுயிர்களின் இயக்கம் உள்ளது. அந்த உன்னதமான பரதக்கலையைக் கற்று இறைவனுக்கு இணையாக ஆடவிரும்பவில்லை’ என்று எண்ணி பரதக்கலையை இராசசேகரபாண்டியன் கற்கவில்லை.

இராசசேகர பாண்டியன் காலத்தில் சோழநாட்டை கரிகால் பெருவளத்தான் என்ற அரசன் ஆண்டு வந்தான். ஆயகலைகள் 64-கிலும் சிறந்து விளங்கிய அவன் திருவானைக்காவில் உள்ள ஜம்புகேசரிடம் பேரன்பு கொண்டவன்.

ஒருசமயம் சோழ நாட்டைச் சார்ந்த புலவன் ஒருவன் இராசசேகர பாண்டியனின் அவைக்கு வந்தான். அப்புலவனை வரவேற்று தனக்கு இணையான ஆசனம் அளித்து அவனை கௌரவித்தான் இராசசேகரபாண்டியன்.

அப்புலவன் இராசசேகர பாண்டியனிடம் “எங்கள் அரசர் ஆயகலைகள் 64-கினையும் நன்கு பயின்றவர். தங்களுக்கோ 63 கலைகள் மட்டும் தெரியும். பரதக்கலை வராது” என்று கூறினான்.

இதனைக் கேட்ட இராசசேகர பாண்டியன் மிகுந்த வருத்தம் கொண்டான். தன் குறையைச் சுட்டிக் காட்டிய புலவனிடம் கோபம் கொள்ளாது அவனுக்கு பரிசுகள் பல கொடுத்து அனுப்பி வைத்தான்.பின் ‘தான் பரதக் கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது இறைவனின் விருப்பம் போலும்’எனக்கு நாட்டியக்கலையும் தெரிய வேண்டுமென இறைவன் எதிர்பார்க்கிறானா? என்னை ஆட வைத்து பார்க்க வேண்டுமென்பதில் அவனுக்கு ஆர்வம் போலும்! எதற்கும், சொக்கநாதப் பெருமான் சன்னதிக்குச் சென்று, அங்கே நடனமாடிக் கொண்டிருக்கும் வெள்ளியம்பல வாசனான நடராஜரையே கேட்டுவிடுவோம், என அங்கு சென்றான். நடன சபாபதியான அவரை வணங்கி, இறைவா! பிறர் என்னைத் தனித்து குறைத்து மதிப்பிட்டால் கவலைப்படமாட்டேன். இது பாண்டிய தேசத்தின் கலையுணர்வுக்கு வந்த இழுக்கு. நான் பரதம் படிக்க ஆர்வமாயிருக்கிறேன். உன்னுடைய அருட்கடாட்சம் வேண்டும், என்று கெஞ்சலாகச் சொன்னான். அப்போது, அவன் கண்களில் கண்ணீர் பெருகி விட்டது. அடியவரின் கண்ணீருக்கு உடனே பதிலளிக்கும் நடராஜப் பெருமான் அசரீரியாக ஒலித்தார்.

ராஜசேகர பாண்டியனே! என் அன்பு மகனே! தேசத்தின் புகழைக் காப்பாற்ற நீ உடனே பரதம் படி. உனக்கு என் நல்லாசிகள், என்று கேட்டது குரல். ராஜசேகர பாண்டியன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

இராசசேகர பாண்டியன் பரதக்கலையை கற்றுணர்ந்தவர்களிடம் பரதக்கலையைக் கற்கத் தொடங்கினான். இராசசேகரபாண்டியன் பரதக் கலையைக் கற்கும்போது உடல்வலி மற்றும் கால் வலி ஏற்பட்டு மிகவும் சோர்வடைந்தான்.

வெள்ளியம்பலத்தில் தினமும் திருக்கூத்தினை நிகழ்த்தும் வெள்ளியம்பலவாணனுக்கும் உடல்வலியும், கால்வலியும், சோர்வும் ஏற்படுமே என்று எண்ணி மிக்க வருத்தம் கொண்டான். இறைவன் கால் மாறி ஆடினால் வலி நீங்குமே என்று கருதினான்.

அப்பொழுது சிவராத்திரி வந்தது. இராசசேகர பாண்டியன் சொக்கநாதரின் சந்நிதியை அடைந்து சிறப்பு வழிபாடு நடத்தினான்.

பின் வெள்ளியம்பலவாணனிடம் “இறைவா, தாங்கள் தூக்கிய திருவடியை ஊன்றியும், ஊன்றிய திருவடியைத் தூக்கியும் மாறி நடனமாட வேண்டும்.

அப்பொழுதுதான் என்னுடைய வருத்தம் நீங்கும். அவ்வாறு செய்யாவிடில் நான் என்னை மாய்த்துக் கொள்வேன்” என்று மனமுருக வேண்டி தன் வாளினை நட்டு வைத்து அதில் பாய்ந்து உயிரை மாய்த்து கொள்ள திட்டமிட்டான்.

இராசசேகர பாண்டியன் வாளில் பாயும் சமயம் வெள்ளியம்பலவாணர் இடது காலை ஊன்றியும், வலது காலை தூக்கியும் நடனமாடி இராசசேகரபாண்டியனின் மும்மலங்களையும் நீக்கி அவனைப் பேரின்பக் கடலில் ஆழ்த்தினார்.

வெள்ளியம்பலவாணன் கால் மாறி நடனம் ஆடியதைக் கண்டதும் இராசசேகர பாண்டியன் இறைவனை பலவாறு போற்றித் துதித்தான்.

பின் வெள்ளியம்பலவாணனிடம் “வெள்ளியம்பலத்துள் கூத்தாடும் எம் தந்தையே, எக்காலத்துக்கும் இவ்வாறே நின்று தேவரீர் அருள் செய்ய வேண்டும். இதுவே அடியேன் வேண்டும் வரமாகும்” என்று மனமுருக பிராத்தித்தான்.

அன்று முதல் இன்றைக்கும் வெள்ளியம்பலத்தில் கூத்தர் பெருமான் கால் மாறிய திருக்கோலத்தில் அருள்புரிகின்றார். இன்றும் மதுரை மீனாட்சி ஆலயத்தில் மட்டும் இடது காலை ஊன்றி வலது காலை தூக்கி நடனமாடும் நடராச பெருமானுடைய திருமேனியை காணலாம்.

இறைவன் தன்மேல் மாறாத அன்பு பூண்டவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றுவார் என்பதே கால் மாறி ஆடிய படலம் கூறும் கருத்தாகும்.

(தொடரும்)



# கோவிலுக்குள் மணி அடித்துவிட்டு வணங்குவது ஏன் தெரியுமா?



கோவிலில் மணி அடிப்பதற்கு பின் ஒளிந்துள்ள ரகசியம்..!!

கோவிலுக்கு செல்லும் அனைவரும் ஏன்? எதற்கு? என தெரியாமல் பின்பற்றும் விஷயங்களில் ஒன்று கோவில் மணி அடிப்பது.

கோவிலில் மணி அடித்துவிட்டு வணங்கினால் கடவுள் காது கொடுத்து கேட்பார் என நினைத்துக் கொண்டிருக்கின்றனர். கோவிலில் அடிக்கும் மணி ஓசைக்கும், மனிதர்களின் மூளைக்கும் இடையே தொடர்பு உள்ளது என சாஸ்திரத்தில் நமது முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். கோவிலுக்கு செல்லும் அனைவரும் மணி அடிப்பது ஏன்?

பூஜை செய்யும் போது பயன்படுத்தப்படும் ஒரு பொருளாக உள்ள மணி ஓசையின் பின் ஒரு அறிவியல் நுண்ணறிவும் இருக்கிறது.

கோவில் மணி அடித்துவிட்டு வணங்கினால், தங்களின் வேண்டுதலை கடவுள் காது கொடுத்து கேட்பார் என்று சிலர் நினைப்பார்கள். ஆனால் அது உண்மை அல்ல.

ஆகம சாஸ்திரங்களின் படி, கோவில் மணியில் இருந்து வெளிப்படும் ஓசை எதிர்மறை சக்திகளை விரட்டி, மனதிற்கும், உடலுக்கும் நேர்மறை சக்தியை அதிகரிக்க செய்கிறது.

கோவில் மணியின் ஓசை மனிதனின் மூளை செயல்திறனை மேலோங்க செய்கிறது என்று அறிவியலில் ஒரு பின்னனி இருக்கிறது.

கோவில் மணியின் ஓசை தனித்துவமாக கேட்பது ஏன்?
கோவில் மணியில் இருந்து வெளிவரும் ஒலியில் ஒரு தனித்துவம் இருக்கும். அதற்கு கோவில் மணிகளில் உள்ள கேட்மியம், துத்தநாகம், நிக்கல், குரோமியம் மற்றும் மாங்கனீசு போன்ற உலோகங்கள் தான் காரணமாகும்.

கோவில் மணியில் இருந்து வெளிவரும் ஒலியானது, மூளையின் வலது மற்றும் இடது பக்கங்களை ஒரு சமநிலைக்கு கொண்டு வர உதவுகின்றது.

கோவில் மணியில் இருந்து வெளிப்படும் சத்தம் உடலில் நேர்மறை ஆற்றல் மற்றும் மூளையில் செயல்திறனை அதிகரிக்கச் செய்து, விழிப்புணர்வை மேம்படுத்தி, மனதிற்கு நிறைவான அமைதி மற்றும் நிம்மதியை அளிக்கிறது.

மணியடிப்பது என்பது துர்தேவதைகளை விரட்டுவதற்காக என்று பெரியோர்களால் சொல்லப்பட்டுள்ளது. பூஜையின்போது மணியை உபயோகப்படுத்துவதற்கு முன்பாக 'ஆகமார்த்தம் து தேவாநாம் கமனார்த்தம் து ரக்ஷஸாம், கண்டாரவம் கரோம்யாதௌ தேவதாஹ்வான லாஞ்ச்சநம்' என்ற மந்திரத்தைச் சொல்வார்கள்.

தீய சக்திகள் விலகி இறைசாந்நித்யம் இந்த இடத்தில் பெருகட்டும் என்பது இதன் பொருள். மணியடிப்பது என்பது அதற்காக மட்டுமல்ல. பூஜையின்போது நமது மனம் அங்குமிங்கும் அலைபாய்ந்து கொண்டிருந்தாலும், முக்கியமான தருணத்திலாவது இறைவனின்பால் நமது மனம் ஒன்றவேண்டும் என்பதற்காகவே மணி ஓசையை எழுப்புகிறார்கள்.

தீபாராதனையின்போது மணி ஓசை எழுவதால் நாம் அநாவசிய பேச்சுகளை நிறுத்தி இறைவனின்பால் நமது சிந்தனையைச் செலுத்துகிறோம்.

மணிஓசை கேட்டதும் நம்மையும் அறியாமல் நமது கரங்கள் இறைவனைத் தொழுகின்றன.

சிந்தனையை ஒருமுகப்படுத்துவதற்காக மணியடிக்கப்படுகிறது என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கருத்து.

நைவேத்யம் செய்யும்போது கண்டிப்பாக மணிஓசையை எழுப்ப வேண்டும் என்கிறது சாஸ்திரம்.

மணி ஓசையைக் கேட்டதும் இறைவன் ஓடோடி வந்து நமது நைவேத்யத்தை ஏற்றுக்கொள்கிறான் என்கிறது ஆகம சாஸ்திரம்

மணி ஓசையினால் நமது சிந்தனையும் ஒருமுகப்படுகிறது. சிரத்தையோடு இறைவனின்பால் நமது கவனமும் செல்கிறது.

சிரத்தையுடன் கூடிய பக்தியைத்தான் இறைவன் நம்மிடம் இருந்து எதிர்பார்க்கிறான்.

நைவேத்யம், தீபாராதனை நேரங்கள் தவிர வெறுமனே மணியை அடிப்பது தவறு.

BALACHANDAR

# தினம் ஒரு தலைவர்கள் டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் வரலாறு

1947 அன்னு சுகநாதிரம் அளிக்கப்பட்டது .டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் 3 டிசம்பர் 1884 28 பிப்ரவரி 1963) இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரும் இந்திய விடுதலைப் போராட்ட வீரரும் ஆவார். காங்கிரஸ் கட்சித் தலைவர்களுள் ஒருவர். 1950 முதல் 1962 வரை இந்திய குடியரசுத் தலைவராக இருந்தார். இரு முறை குடியரசுத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே குடியரசுத் தலைவர்.


## இளமை

இவர் 1884ம் ஆண்டு டிசம்பர் 3ம் தேதி பீகாரின் சிவான் எனுமிடத்தில் பிறந்தார். இவருடைய தந்தை மகாவீர சாகி பெர்சிய மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் தேர்ந்திருந்தார். இவரது தாயார் கமலேசுவரி தேவி சமயப் பற்றுள்ள ஒரு மாது ஆவார். சிறு வயதில் தன் குடும்பத்தாராலும் நண்பர்களாலும் 'ராஜன்' என அழைக்கப்பட்டார். தனது 12 ஆம் வயதில் ராஜவன்சி தேவி என்ற பெண்ணை மணந்தார். திருமணத்திற்குப் பின்பு பிரசாத் தனது தமையனார் மகேந்திர பிரசாத்துடன் வசித்து வந்தார்.

## கல்வி

இராஜேந்திர பிரசாத்திற்கு ஐந்து வயதானபோது ஒரு இஸ்லாமிய மௌல்வியிடம் பெர்சியம், இந்தி மற்றும் கணிதம் கற்க இவருடைய பெற்றோர் ஏற்பாடு செய்தனர். சாப்ரா மாவட்டத்திலுள்ள பள்ளியில் பிரசாத் தனது தொடக்கக் கல்வியை முடித்தார். பின்னர் டி. கே கோஷ் அகாடமியில் இரண்டாண்டு பயின்றார். கல்கத்தா பல்கலைக் கழகத்தில் நுழைவுத் தேர்வு எழுதி மாதம் ரூ.30 உதவித் தொகைப் பெற்று தனது இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார். கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பயின்று 1907ம் ஆண்டு பொருளியலில் முதுகலைப் பட்டம் பெற்றார். படிக்கும் காலத்தில் பீகார் மாணவர் அவையை உருவாக்கினார் இராசேந்திர பிரசாத். பல்வேறு கல்லூரிகளில் பேராசிரியராகவும் பின்னர் கல்லூரி முதல்வராகவும் செயலாற்றியுள்ளார். பேராசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே சட்டத்தில் மேற்படிப்பு படித்து தேர்வில் முதல் மாணவனாக தங்கப் பதக்கத்தை வென்றார். பின்னர் சட்டத்துறையில் முனைவர் பட்டமும் பெற்றார்.





## விடுதலைப்போரில் ஈடுபாடு

மிகப் புகழ் பெற்ற வழக்குரைஞராக பணியாற்றி வந்த இவர், மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தால் கவரப்பட்டு தன் வேலையைத் துறந்து, அவ்வியக்கத்தில் இணைந்தார். தரையைத் துடைப்பது ,கழிவறையைக் கழுவுவது,பாத்திரம் துலக்குவது போன்ற பணிகளை ஆசிரமத்தில் செய்து வந்தார். பீகார் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்ட கிளம்பினார் ஆங்கிலேய கவர்னர் திரட்டியது மாதிரி மூன்று மடங்கு அதிகமாக முப்பத்தி எட்டு லட்சம் திரட்டினார். 'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டத்தில் கலந்து கொண்டதால் 1942ம் ஆண்டு கைது செய்யப்பட்டு மூன்றாண்டு கால சிறைவாசத்திற்குப் பின் 1945ம் ஆண்டு ஜூன் மாதம் 15ம் தேதி விடுதலையானார்.

## பதவி

1946ம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு அவையின் தலைவராக நியமிக்கப்பட்ட இவர், 1947ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் தலைவராக மூன்றாம் முறையாகப் பதவியேற்றார். இந்தியா சுதந்திரம் அடைந்த இரண்டரை ஆண்டுகளுக்குப்பின் புதிய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, 1950ம் ஆண்டு இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார் இராசேந்திர பிரசாத். 1952, 1957 ஆகிய ஆண்டுகளில் இரண்டு முறை குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற ஒரே குடியரசுத் தலைவரான இராஜேந்திரப் பிரசாத் 1962ம் ஆண்டு வரை பதவியிலிருந்து, பின் ஓய்வு பெற்றார். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொண்டார் என எந்த பணியிலும் ஈடுபடக் கூடாது என அரசு விதித்த தடையை மீறி, சிந்து மற்றும் பஞ்சாப் மாகணங்களில் நிலநடுக்கம் ஏற்பட்ட பொழுது நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார். காந்தியின் அழைப்புக்கு இணங்கி ஆங்கிலேய கல்விக்கூடத்தை விட்டு மகனை வெளியேற்றினார். காங்கிரசின் தலைவராகப் போஸிற்குப் பின் ,கிருபாளினிக்குப் பின் பதவியேற்றார்.

## விருது

இவருக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. இந்திய முதல் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் 1963ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி காலமானார்.

# மைக்கை கையில் எடுத்த ராம் சரண்... பெத்தி படத்தின் புதிய அப்டேட் ..!



ராம் சரண்– இயக்குநர் சங்கர் கூட்டணியில் வெளியான 'கேம் சேஞ்சர்' திரைப்படம் மக்களிடையே போதிய வரவேற்பை பெறவில்லை. இந்தப் படத்தை தொடர்ந்து இயக்குநர் புச்சி பாபு இயக்கத்தில் 'பெத்தி' படத்தில் ராம் சரண் நடித்து வருகிறார். இந்தப் படத்தை ரித்தி சினிமாஸ் மற்றும் மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன.

இந்தப் படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கிறார். இந்தப் படத்தில் ராம் சரணுக்கு ஜோடியாக ஜான்வி கபூர் நடித்துள்ளார். இந்தப் படத்தின் பர்ஸ்ட் சிங்கிள் "சிகிரி" பாடல் ஏற்கனவே வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது. 'பெத்தி' திரைப்படம் வருகிற ஏப்ரல் 30ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்து இருக்கிறது.

இந்த நிலையில், பெத்தி படத்திற்கான டப்பிங் பணிகளை நடிகர் ராம் சரம் தொடங்கியுள்ளதாக படக்குழு அறிவித்தது. மேலும், இது தொடர்பான வீடியோவையும் படக்குழு வெளியிட்டுள்ளது.

# கடைசி விமானம்... ஜஸ்ட் மிஸ்ஸில் தப்பிய சந்தோஷ் நாராயணன்



அணுசக்தி போட்டி காரணமாக ஈரான் மீது இஸ்ரேல்–அமெரிக்கா நேற்று காலை முதல் ஏவுகணைகள் மூலம் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. தலைநகர் டெஹ்ரான் மற்றும் பிற பகுதிகளில் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

தெஹ்ரானில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா காமேனி கொல்லப்பட்டார். இதற்கு பதிலடியாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

ஈரான் தாக்குதல் காரணமாக துபாய் விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. துபாயின் அபுதாபி சயீத் சர்வதேச விமான நிலையத்தில் நடத்தப்பட்ட டிரோன் தாக்குதலில் ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஏழு பேர் காயமடைந்தனர். விமான நிலையத்திற்கு அருகில் பெரும் வெடிச்சத்தங்கள் கேட்டன.

வளைகுடா நாடுகளில் ஒன்றான கத்தாரும் ஈரானிய தாக்குதலால் பாதிப்பு அடைந்துள்ளது. அந்நாட்டில் உள்ள அமெரிக்க ரேடார் அமைப்பை முழுமையாக அழித்துள்ளதாக ஈரான் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்த நிலையில், கத்தாரில் நிலவும் பதற்றமான சூழ்நியையில், அங்கிருந்து புறப்பட்ட கடைசி விமானத்தில் தப்பி அமெரிக்கா சென்றுள்ளதாக பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் X தளப் பதிவில், "விமான நிலையங்கள் முழுமையாக மூடப்படுவதற்கு முன்பு மத்திய கிழக்கிலிருந்து புறப்பட்ட கடைசி விமானம் எனது கத்தார் விமானமாக இருக்கலாம். நான் அமெரிக்காவிற்கு பறக்கும்போது ஸ்டார்லிங்க் வழியாக இணைக்கப்பட்டேன். பிராந்தியத்தில் உள்ள எனது சகோதர சகோதரிகள் அனைவரின் பாதுகாப்பிற்காக பிரார்த்தனை செய்கிறேன்," என்று குறிப்பிட்டுள்ளார்.


மேலும், கத்தாரில் இருந்து புறப்பட்ட சந்தோஷ் நாராயணன் பத்திரமாக அமெரிக்கா சென்றடைந்ததாக மற்றொரு பதிவில் தெரிவித்துள்ளார்.




நடிகை தர்ஷா குப்தா விஜய் டிவியில் சீரியல் நடிகையாக பிரபலம் ஆகி அதன் பின் படங்களில் நடிக்க தொடங்கியவர். சில படங்களில் நடித்த நிலையில் அவருக்கு குக் வித் கோமாளி, பிக் பாஸ் 8 போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்புகள் கிடைத்தது.

படவாய்ப்புகள் குறைந்த நிலையில் தர்ஷா குப்தா இன்ஸ்டாவில் தொடர்ந்து ஹாட் போட்டோக்களாக வெளியிட்டு வருகிறார்.

தற்போது அவர் வெளிநாட்டில் சேலையில் உச்சகட்ட ஹாட் போஸ் கொடுத்த புகைப்படங்களைப் பாருங்க.







தென்னிந்திய அளவில் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருபவர் சம்யுக்தா மேனன். இவர் மலையாளத்தில் அறிமுகமாகி பின் தமிழில் என்ட்ரி கொடுத்தார். ஆனால், தற்போது தெலுங்கில் மிகவும் பிஸியான நடிகையாக வலம் வருகிறார்.

ரசிகர்களின் மனம் கவர்ந்த நடிகைகள் வெளியிடும் போட்டோஷூட் புகைப்படங்கள் உடனடியாக இணையத்தில் வைரலாகும். அந்த வகையில், தற்போது இளைஞர்களின் மனதை கொள்ளைகொண்ட நடிகை சம்யுக்தாவின் லேட்டஸ்ட் போட்டோஸ் வைரலாகி வருகிறது.

# வாட்ஸ் அப் ஸ்டேட்டஸ் மூலம் ஹீரோயின் வாய்ப்பு- சனஸ்கா ஸ்ரீ



பெரிய நடிகர்களுடன் பணியாற்றும்போது ஒரு பயம் இருந்து கொண்டே இருக்கும்.

இயக்குநர் கேந்திரன்.வி இயக்கத்தில் உருவாகி உள்ள படம் வடம். மாசாணி பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இந்த படத்தில் விமல், நட்டி நட்ராஜ், சனஸ்காஸ்ரீ, முனீஸ்காந்த், பாலசரவணன், ஆடுகளம் நரேன், மதுசூதராவ் உள்பட பலர் நடித்துள்ளனர். டி.இமான் இசை அமைத்துள்ளார். 'வடமஞ்சு விரட்டு' என்ற கிராம வீர விளையாட்டின் பின்னணியில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் தயாராகி இருக்கும் இந்த படம் வருகிற 6–ந்தேதி திரைக்கு வருகிறது. இதையொட்டி படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது.

விழாவில் நடிகை சனஸ்காஸ்ரீ பேசும் போது, "நான் இயக்குநருடைய நண்பரின் படத்தில் நடித்துக் கொண்டிருந்தேன். அந்தப் படத்தில் நடித்திருந்த ஒரு காட்சியைத் தான் நான் என்னுடைய வாட்ஸ்அப் ஸ்டேட்டசில் வைத்திருந்தேன். அதைப் பார்த்து இந்தப் பெண் தான் இந்த கதாபாத்திரத்திற்கு பொருத்தமானவர் என்று அடம் பிடித்து நடிக்க வைத்தார். எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்காக இயக்குநருக்கு நன்றி.புது ஹீரோயினுக்கு சம்மதம் சொன்ன விமலுக்கும் நன்றி. பெரிய நடிகர்களுடன் பணியாற்றும்போது ஒரு பயம் இருந்து கொண்டே இருக்கும். ஆனால் விமலுடன் பணியாற்றும்போது அவர் என்னை கலாய்த்து கொண்டே இருப்பார். நான் சின்ன வயதில் ஸ்கூலுக்கு செல்லும் போது இமானின் பாடல்களை கேட்டு வளர்ந்திருக்கிறேன். படத்தில் எனக்கும் ஒரு சோலோ சாங் இருக்கிறது. அதை கொடுத்த இமானுக்கு நன்றி. ரொம்ப வருசத்திற்கு பிறகு ஹீரோயினுக்கு ஒரு தனி பாடல் வருகிறது' என்றார்.

# "மகரம்" படத்தில் மேக்கப் இல்லாமல் நடித்தேன் - நடிகை இஷிதா



ராக்ஸ் நேச்சர் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் A. அகஸ்டின் பிரபு இயக்கத்தில், தமிழ் சினிமாவில் புதிய முயற்சியாக மான்ஸ்டர் ஜானரில் ஒரு முழுமையான சயின்ஸ் ஃபிக்ஷன் திரைப்படமாக "மகரம்" உருவாகியுள்ளது.

ஹாலிவுட் படைப்புக்கு இணையாக முழுக்க கடலில் பல காட்சிகள் படமாக்கப்பட்டதுடன் இந்தப் படத்தில் 700 VFX காட்சிகள் இடம்பெற்றுள்ளது.

இந்தப் படம் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் என ஐந்து மொழிகளில் உலகமெங்கும் வெளியாகவுள்ளது.

விரைவில் திரைக்கு வரவுள்ள இப்படத்தின் டீசர் வெளியீட்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நடிகை இஷிதா பேசிய போது, "இந்தப் படத்தில் 'நாவிஸ்' என்ற கதாபாத்திரத்தில், ஒரு ஆர்கியாலஜிஸ்ட் வேடத்தில் நடித்திருக்கிறேன். மொழி வேறுபாடு இருந்தாலும், படக்குழுவினர் என்னை மிகவும் அன்பாக ஏற்றுக்கொண்டார்கள். உண்மையாக வீட்டில் இருப்பது போன்ற உணர்வு கிடைத்தது. இந்தப் படத்தின் இயக்குநர் அகஸ்டின் பிரபு பற்றி கூறியே ஆகவேண்டும்.

இந்தப் படத்தின் 80% காட்சிகளில் நான் மேக்கப் இல்லாமல் நடித்தேன். சிறிய மேக்கப் வைக்க நினைத்தாலும், "ப்ராசஸ்ஸை நம்புங்கள்" என்று அவர் சொல்வார். டீசரை பார்த்தபோது அது எவ்வளவு அழகாக வந்திருக்கிறது என்று உணர்ந்தேன். மிகவும் அழகான இடங்களில் படப்பிடிப்பு செய்தோம். அது சுலபமான பயணம் இல்லை, ஆனால் மிகவும் மகிழ்ச்சியான அனுபவம், என்றார்.













**UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD**

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்

5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971




# WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424

# WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# WANTED

Site Supervisor required for construction work in Ambattur



Contact:

8428872887




# WANTED

**Job 1-SALES ENGINEER**

Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**

Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu

**ALP AEROFLEX INDIA PVT. LTD.**
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com




தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE






### சிறகுகள்

வானத்தை
அளப்பது போல
பறக்க ஆசைதான்.

ஆனால்.. சிறகுகளை
விரிக்கும்போது..
இடித்துக் கொள்ளாமல்..
வலிக்காமல்.. சிறகுகளுக்குச்
சிறிதும்
சேதாரமில்லாமல்..

கிரகங்களை நான்
வலம் வரப்போகும்
நேரத்தை எப்படி
சந்திக்கப்
போகிறேன்?

காக்கும் பொறுப்பு
எல்லாம்வல்ல
பரம்பொருளுக்கு
மட்டுமே.. என்னுடன்
சிறகுகளையும்.

ஆறு கிரகங்களின்
சேர்க்கையாம் வானில்..
சோதிடர்களும்
விஞ்ஞானிகளும்
கைகோர்த்துச்
சொல்கின்றனர்?!



**கீதா கண்ணன்,**
ஸ்ரீரங்கம்

---

1. தன்னுடைய தவறுகளில்
இருந்து பாடம் கற்றுக்
கொள்பவன் புத்திசாலி
அடுத்தவர் தவறுகளில்
இருந்து பாடம் கற்றுக்
கொள்பவன் அதி புத்திசாலி

2.உங்களை பிசியாக
வைத்துக் கொள்ளுங்கள்
அவை உங்களை
கவலைகளில் இருந்து விடுபட
வைக்கும்

3.அறிவாளிகள் கூட்டத்தில்
முட்டாளாகவும்
முட்டாள்கள் கூட்டத்தில்
அறிவாளியாகவும் இருந்தால்
நாம் தனியாக தெரிவோம்

4.பணக்காரர்களுக்கு நேரம்
குறைவு ஏழைகளுக்கு
நண்பர்கள் குறைவு
இருப்பவனுக்கு பொறுப்புகள்
குறைவு இல்லாதவனுக்கு
கனவுகள் கூட குறைவு

5. சாப்பிடுகிற காய்கறிகளை
தெருவில் போட்டு
நிற்கிறார்கள் தெருவில்
போட்டு நடக்கும் செருப்பை
ஏசி ரூமில் போட்டு
விற்கிறார்கள்

--------------------

1. பணம் செல்போன் விலை
உயர்ந்த நகைகள் இவற்றில்
தீட்டு படுவது இல்லை

2. வாழ்க்கையில் நிம்மதி
வேண்டும் என்றால்



இரண்டு பேரை
கண்டுக்க கூடாது நமக்கு
பிடிக்காதவங்க
நம்மளை பிடிக்காதவங்க

3. கோபுர தரிசனத்தால்
கிடைக்கும் புண்ணியம் ஏன்
கோபுரத்தின் நிலையில்
பிச்சை எடுப்பவர்களுக்கு
கிடைக்கவில்லை

4. கடிகாரத்திற்கு நேரத்தை
காட்ட மட்டுமே தெரியும்
அவை நல்ல நேரமாகவும்
கெட்ட நேரமாகவும் மாற்ற
நம்மால் மட்டுமே முடியும்

5. மனிதனுக்கு பிரச்சனையே
வயிறுதான் பாதிபேர் குறைக்க
ஓடிக் கொண்டிருக்கிறார்கள்
பாதி பேர் நிறைக்க
ஓடிக்கொண்டு
இருக்கிறார்கள்

**நடேஷ் கன்னா**
கல்லிடைகுறிச்சி

---

### விலை போகாதவன்

மனிதர்களுக்கு விலை
பேசும் மனிதர்களை
என்னவென்று சொல்வது?
விலை பேசுவது பிழை
என்றால், விலை போவது
பெரும் பாவம்!
எதற்கும் அசையாதவர்,
எதையும் தாங்குபவர்,
நேர்மையின் வழி நிற்பவர்
என – சில மனிதர்கள்
மேல் அளவற்ற நம்பிக்கை
கொள்கிறோம். ஆனால்,
அவர்களது மௌனமும்,
கடந்து போகும்
சகிப்புத்தன்மையும்
காணும்போது –
இவர்களும் விலை
போய்விட்டார்களோ என
மனம் கேட்கதொடங்குகிறது!
மானமும் மரியாதையும்
முக்கியம் எனக்கருதி,
சில அறம் இல்லாத
செயல்களில்
பங்கெடுக்காமல்
ஒதுங்கி நிற்கிறோம்.
அப்படி ஒதுங்கி
இருப்பவர்களை எல்லாம்
'கோழைகள்' என்றும்,
ஊழலை ஒருங்கிணைத்து
வெற்றி காண்பவர்களை
'வீரர்கள்' என்றும் –
இங்கே தவறான கணக்கு
ஒன்று உலவுகிறது!
உண்மையில்... விலை பேசும்
மனிதர்களை விட,
விலை போகும் மனிதர்களே
மிக ஆபத்தானவர்கள்!
எந்த நிலையிலும் "என்
நிலை இதுதான்" என
நேர்க்கோட்டில்
பயணிக்கும் என்னைப்
போன்றவர்களுக்கு,
இந்த உலகம் 'ஏமாளிகள்'
எனப் பெயர் சூட்டலாம்.
ஆனால், எனக்கென
ஒரு பெயரை நானே
சூட்டிக்கொண்டேன்!
குறுக்கு வழியில்
நாற்பது பேர் அடையும்
வெற்றியையும்,
உண்மையை மறைத்து
'நாயை ஆடு' என விற்கும்
இந்தப் போலி வியாபாரச்
சந்தையையும் கடந்து –
இங்கே ஒரு 'மனிதனாகவே'
நான் இருக்கிறேன்!
'மனிதன்' என்பதை விடச்
சிறந்த பெயர் ஏது?'நேர்மை'
என்பதைவிடச்
சிறந்தஅடையாளம்
ஏது?



**ஜனனி அந்தோணி ராஜ்,**
திருச்சிராப்பள்ளி.

---



### கவி ஓவியா

உன்னை எப்பொழுது எந்த
நேரத்தில் பார்த்தாலும்
சண்டிகர் ரோஜாத்
தோட்டத்திலிருந்து
ஒரு மலர் எழுந்து வந்து
விட்டதோ என்றார் போல்
ஒரு பிரமிப்பு!
ஒவ்வொரு பாவையரும்
ஒவ்வொர் அழகு!
நீயோ தேவதைகளே
ரசிக்கும் பாவையர் மலர்!
ஒரே ஒரு வாரம்
உன்னைச் சந்திக்காமல்
போனாலும் அடுத்த நாளே
காணத் தவறாதீர்கள் என்று
கனவில் நினைவூட்டுகிறது
உன் அன்பு! உன்னுடன்
மகிழுந்தில் செல்லும் போது
நீ வாகனம் செலுத்தும்
அழகை ரசிக்கையில்
எனக்குள் ஏக பாலு
மகேந்திராக்களும்
அசோக் குமார்களும்
வந்து போகிறார்கள்!
புன்னகை சிந்தும்
உயிரோவியமான
உன்னைக் கண்டுதான்
மயிலாடுதுறை இளையபாரதி
அவர் இதழுக்கு கவி
ஓவியா என்று பெயர்
சூட்டியிருப்பாரோ?!
என்னைக் கட்டிப்
போடுவதிலும் சரி
கட்டளையிடுவதிலும் சரி
ஈடு இணையற்ற உன்
அன்பிற்கு எப்பொழுதுமே
முதல்
மதிப்பெண்
தான்!



**முத்து ஆனந்த்**
வேலூர்

---

### வீணை மத்தளமாகிறது

கண்ணிற்குள் வளர்ந்தமகள் இமைபட் டாலே
கலங்கிடுவாள் எனப்பூவாய் வளர்ந்தபெண்ணாள்
மண்ணிற்குள் விழுந்தவிதை மெல்லமெல்ல
மண்பிளந்து வளர்வதினைப் பேணல்போல
பண்ணிற்குச் சேர்க்கின்ற சுருதிபோல
பக்குவமாய் நாள்பார்த்து வளர்ந்த பூவாள்
தண்ணீர்க்குள் வலையவரும் மீனாய் வீட்டில்
தவழ்ந்துவரும் தென்றலென வளர்ந்த கண்ணாள்!

நெஞ்சோடு அணைத்தபடி இறக்கைக்குள்ளே
நெகிழ்வோடு கோழிகாக்கும் குஞ்சுபோல
கிஞ்சித்தும் தூசிவந்து படியாவாறு
குளிர்பதன அறைக்குள்ளே பேணுகின்ற
விஞ்ஞான அற்புதமாம் கணினிபோல
வீட்டிற்கு வாய்த்தநல்ல விளக்காய் வண்ண
மஞ்ஞையெனும் அழகுப்பெட் டகமாய் அன்பு
மலர்களிடை மணமாக வளர்ந்த பெண்ணாள் !

வருங்காலக் கனவுகளோ கோடியாக
வளர்த்துவைத்த நெஞ்சினளாய் வாழ்வை
யெண்ணிப்பருவத்தில் நிற்குமவள் கருத்திற்கேற்ப
பல்வேறு இடங்களிலே பார்த்துப் பார்த்துப்
பொருந்துகின்ற குணம்பார்த்தும் குடும்பம் பார்த்தும்
பொருளோடு தகுதிதனை ஆய்ந்து பார்த்துத்
திருமணத்தை இருமனங்கள் கலப்பதற்குத்
திருவாக நடத்திவைத்து மகிழ்ந்தார் பெற்றோர் !
(1)

புதுமணத்தின் நுகர்ச்சியிலே பொழுதும் நன்றாய்
புத்தின்பத் தேடலிலே கழிந்துசெல்ல
மதுமயக்கம் தெளிதல்போல் மோகவாசை
மங்கிவர மணவாளன் குணமும் மாறப்
புதுமனைவி எனத்தலையில் தூக்கி வைத்துப்
புகழ்மொழிகள் பொழிந்தநாவில் தேள்கொடுக்காய்
எதுசெயினும் குற்றமெனக் கொட்டலானான்
எல்லாமும் தாய்க்கயிற்றால் ஆடலானான் !

அன்பினிலே வளர்ந்தமகள் துன்பப் பட்டால்
அதைப்பார்க்க முடியாமல் கேட்ட தெல்லாம்
முன்வந்து தந்திடுவார் என்ற நோக்கில்
முள்ளாகச் சொற்களிலே குத்தும் அத்தை
தன்பங்காய் மாமனாரும் சாட்டை வீச்சாய்
தளிர்நெஞ்சைப் புண்ணாக்கி வீசுவார் சொல்லை
புன்னகையை இரவினிலே சிந்திக்காலை
புன்செயலைப் புரிகின்ற கொடுமைக்கணவன் !

கதிர்விழிக்கும் முன்விழித்து வாசல் கூட்டிக்
கலைமிளிரும் கோலமிட்டே அழகு செய்து
முதியவர்க்கோ இனிப்பில்லாப் பாலைத் தந்து
முரண்நெஞ்சக் கணவனுக்கோ இனிப்பைச்சேர்த்தும்
மதிக்காத நாத்திக்கும் மணக்கத் தந்து
மலையளவு பாத்திரங்கள் துலக்கி வைத்தும்
சதிமனத்தார் என்னசொல்வார் என்ற அச்சம்
சதிராடும் முகத்தோடு வலைய வந்தாள் !

உப்பில்லை உணவுவகை ஒருவருக்கு
உரப்பில்லா புளிகுறைவு ஒருவருக்கு
உப்போடு சுவையுணவு மற்றோர்க்கென்றே
உணவுதனைப் பலவகையாய் செய்தளித்தும்
தப்புதனைக் கண்டுரைக்கும் குடும்பத்தார்கள்
தான்விரும்பும் ஒருசுவையை ஆக்கியுண்ண
ஒப்புதலும் இல்லாமல் அடிமையாக
ஒப்புக்கே மருமகளாய் பணியாளானாள் !
(2)

ஏடுகற்ற கல்விக்குப் பயனுமின்றி
எந்தவொரு நூல்படிக்க நேரமின்றி
வீடுகூட்ட துணிதுவைக்க வீட்டுக்காரர்
வினையாற்றச் செல்வதற்குப் பணிகளாற்றி
மாடுபோல மாமிமாமன் நோய்களுக்கு
மருந்தளித்துத் தாதியெனத் தொண்டு செய்து
வாடுகின்ற கிளியைப்போல் இல்லக் கூண்டுள்
வாயிருந்தும் ஊமையெனக் குமுறலானாள் !

அலங்காரம் செய்துபுறம் கணவனோடு
ஆசையுடன் உரையாடிச் செல்வதற்கும்
கலகலெனப் பழகிவந்த தோழிமாரைக்
கண்ணாலே கண்டுநலம் கேட்பதற்கும்
வலம்வந்த பிறந்தவீட்டுச் சுற்றத்தாரின்
வாழ்த்துகளை நன்னாளில் பெறுவதற்கும்
குலமகளாம் பெயர்சூட்டி இயலாவாறு
கூட்டிற்குள் சிறகுவெட்டி முடக்கி வைத்தார் !

கோதையவள் கற்பனையும் கனவு யெல்லாம்
கோட்டைமணல் போலவன்றோ ஆனதின்று
போதையாகும் தட்சணையின் கொடுமையாலே
பொன்வீணை மத்தளமாய் ஆனதன்றோ
காதைகளும் கவிதைகளும் உரிமை பேசிக்
கட்டெல்லாம் உடைந்ததென்று
முழங்கினாலும்
பேதையராய்த்துணிவின்றி உள்ள
மட்டும்பெண்ணுரிமை என்பதெல்லாம்
வெற்றுப் பேச்சே !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**

---

### நாட்கள் !

நாட்கள் கடந்த பின் தான் தெரியவருகிறது..
எவ்வளவு வேகமாக காலசுழற்சி ஏற்பட்டு விடுகிறதென்று !

சில நாட்களுக்கு முன் நான் தூக்கி வளர்த்த என் மகள்
இப்போது பருவம் எய்து நிற்கிறாள் !

பிறகு திருமணம், குழந்தை என என் தந்தை
ஸ்தானத்திலிருந்து தாத்தா என்கிற வயோதிக
ஸ்தானத்திற்கு மாறுகிறேன் !

என் மகளை தூக்கி நடந்த போது பலத்தோடு நடந்த
நான்... மீண்டும் இப்போது என் பேரக்
குழந்தையை தூக்கிக் கொண்டு
நடக்கிறேன்... சற்றே பலம் தளர்ந்துவிட்ட
நிலையில் ! காலச் சூழலில் எதை
மறைத்தாலும் வயோதிகம் வாழ்வினில்
மறைக்க இயலாத நிலையே !



**எம்.பி.தினேஷ்.** கோவை

---

### மணியோசை

அதிகாலைப் பொழுதில்
அன்றைய விடியலுக்கு
அடித்து எழுப்பும்
அலார மணியோசை

அக இருள் போக்கி ஆன்ம பலம்
தந்து அமைதி தரும்
ஆலய மணியோசை

அறியாமை நீக்கி அகக்கண்
திறந்து அறிவு தரும்
பள்ளி மணியோசை

அதிகாரக் கட்டளைக்கு
அலுவலகப் பணி செய்ய
அழைத்து வரும்
அலுவலக மணியோசை

செய்தி பகிர நலம் விசாரிக்க
நாளெல்லாம் செவியில் விழும்
அலைபேசி மணியோசை

உடலுக்குத் தீங்கின்றி
உற்சாகமாய் இடம் சேர
இன்பப் பயணம் தரும்
இரு சக்கர வாகன மணியோசை

உயிர்காக்கும் வேகத்தில்
உதவி செய்யும் மனதோடு
அவசரமாய்க் கடக்கும்
அவசர ஊர்தி மணியோசை

மணியோசை பல உண்டு
மனதுக்கு இதமாகும் சில உண்டு
மனம் வருத்தும்
மணியோசை
மறைந்து போக
இன்பம் தரும்
மணியோசை
இன்னிசையாய்
ஒலிக்கட்டும்.



**தமிழ்நிலா**

---

வெகுதூரம் சென்று
விட்டப் பிறகும்....
நிலைகொள்ள இயலவில்லை...

சந்திர கிரகணத்தன்று
தவிக்கும்... தடாகம்போல...
சுமைகளாகத் தான் உருமாற்றம்
பெற்று விட்டன...

அன்று சுகமான
நினைவுகளாய்...
இருந்தவை...



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

---



### பள்ளிப் பறவைகள்

நட்பல் அறிமுகமாகி கூடியவர்கள்
வகுப்பறைகள் வேறாக இருந்தாலும்
மனங்கள் ஒன்றுதான்

ஜாதி மதம் இனம் நிறம் இல்லாமல்
சமரசம் உலாவும் இடம்
பள்ளிக்கூடம் தான்

எத்தனை முறை சாப்பிட்டேன்
என்று தெரியவில்லை எலந்த
பழம் மாங்காய் நெல்லிக்காய் ஐஸ்
ஆசை சாக்லேட் எது சாப்பிட்டாலும்
காக்கா கடியை கடித்து சாப்பிடாத
நண்பர்கள் யாரும் இல்லை

எழுத முதன் முதலில் பயன்படுத்திய
பேனா பரீட்சை அட்டை ஜாமின்டரி
பாக்ஸ் புத்தகம் சுமந்த மஞ்சள் பை
பள்ளி சீருடை வெள்ளை சட்டை
காக்கி பேண்ட் இவைகள் தங்கம்
அடகு வைத்தால் கிடைக்கும்
மதிப்பை விட பல மடங்கு
உயர்வானது விலை மதிப்பில்லாதது

முதல் முதலில் சைக்கிள் ஓட்டி
பழகியது மதிய இடைவேளையில்
முடி திருத்தும் நிலையம் சென்று
மீண்டும் மீண்டும் தலை சீவி வகிடு
எடுத்து ரஜினி ஸ்டைல் வைத்து
அழகு பார்த்தது

பன்னிரண்டாம் வகுப்பில் பெயருக்கு
பின்னால் அவரவர் விரும்பும்
பட்டப்படிப்பு முன்பே பதிவிட்டது
படிப்பில் சாதிக்க வேண்டும் என்று
சிந்தனையை வளர்த்தது
எப்போதும்
மறக்காது அனைத்து
தலைமுறைக்கும்
பள்ளி வாழ்க்கை
ஒரு கலங்கரை
விளக்கு




**"போயஸ் கார்டன்"**
**பொன்விழி,**அன்னூர்

---

# நூல் விமர்சனம்

நூல் : நகுலனின் நாலு கட்டு வீடு
ஆசிரியர் : குமரி உத்ரா
பதிப்பகம் :வேரல் புக்ஸ்
பக்கங்கள்: 98
விலை : ரூ140
பதிப்பு :ஜனவரி 2026




குமரி மாவட்டத்தை சேர்ந்த உமா மகேஸ்வரி தன் மாவட்டத்தின் பெயரால் குமரி உத்ரா என்று அழைக்கப்படுகிறார். மிகச் சிறந்த கவிஞர் மற்றும் மேடைப் பேச்சாளர். இச் சிறுகதை தொகுப்பு சென்ற வாரம் நெல்லை புத்தகக் கண்காட்சியில் வேரல் பதிப்பகத்தில் வெளியிடப்பட்டது

இத்தொகுப்பு பதினொன்று சிறுகதைகளைக் கொண்டது . அனைத்தும் குமரி மண்ணின் மணம் கொண்ட கதைகள்..

இக்கதைகள் அனைத்தும் போட்டிகளில் வெற்றி பெற்றவை. ஒவ்வொரு கதையும் தன் அழகான நடையாலும், அழுத்தமான கதை கருவாலும், நம் மனதில் அழுத்தமான ஒரு தாக்கத்தை உண்டாக்குகிறது.

கிராமப்புறங்களில் உலவும் சில வார்த்தைகளையும், சில நடைமுறைகளையும் , பழக்கவழக்கங்களையும் இவர் தம் கதாபாத்திரங்களின் மூலம் நம் முன் காட்சிப்படுத்துகிறார். நாம் அறிந்து கொள்ளாத கிராமத்து பழக்க வழக்கங்களையும் கிராமத்து சொற்களையும் புத்தகம் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது . வவுலாடி.. மஞ்சாடி முத்துக்கள் ..போன்ற சொற்களை உதாரணமாக கூறலாம் .

ஒவ்வொரு கதையும் ஒரு ஆழமான கருத்தை இயல்பாக போகிற போக்கில் வலியுறுத்தி செல்கிறது. நகுலனின் பழைய காலத்து நாலு கட்டு வீடு அவருக்கு மட்டுமல்ல, நமக்கும் இளமைக்கால நினைவுகளை மீட்டுகின்றது.

சிறுவயது தோழியை பல வருடங்கள் கழித்து சந்திக்கும் வான்மதி மனதைக் கவர்கிறாள். அவர்களுடைய இளமை கால சம்பவங்கள் அனைத்தும் அருமை கஞ்சியும், கானத்துவையலும், எழுத்து என்றாலும் நம்மை சாப்பிட அழைக்கிறது.. அனைத்தும் மண்மணம் வீசும் கதைகள்.

ஆசிரியர் ஒவ்வொரு கதையையும் ரசித்து எழுதியிருக்கிறார் ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் அழகாக செதுக்கியிருக்கிறார்.. என்று தான் சொல்ல வேண்டும். அவருடைய அழகிய எழுத்து நடை, கதைக்குள் நம்மை இழுத்து செல்கிறது. தாயின் மணத்தை அவள் நூல் புடவையில் உணரும் மகள் நம் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறாள். மனம் கனக்கிறது. நம் உணர்வுகளை அசைத்துப் பார்ப்பதே எழுத்தாளரின் கதைக்கு கிடைத்த வெற்றி. இக்கதைகள் அனைத்தும் கிராமத்து மண்ணின் மணம் கமழ எழுதப்பட்டிருப்பது தனிச்சிறப்பு. அங்கங்கே வரும் குமரி மாவட்ட வட்டார வழக்கு சொற்கள் ரசிக்க வைக்கிறது..

கிராமத்திற்கே உரிய பல விஷயங்கள் இக்கதைகளில் தூவப்பட்டிருக்கிறது அதுவும் இயல்பாக இருப்பதால் ரசிக்க முடிகிறது .. அனேக இடங்களில் ஆசிரியரின் சொல் விளையாட்டு நம்மை பிரமிக்க வைக்கிறது சுத்தம் கதையில் "ஒவ்வொரு வீட்டின் குப்பை கூடையும் சுத்தமானது அவளும் அவள் வண்டியும் அழுக்கானார்கள்.." ரசிக்க வைக்கும் சொற்கோர்வை வவுலாடி.. பெண்மை தலைதூக்கும் சங்கரனின் பிரச்சனையை ஒரு கவிதையாய் சொல்கிறது. மூன்றாம் இன சிறுவர்களின் பிரச்சனையை அழகாக கொண்டு செல்வது ஆசிரியரின் திறமைக்கு வெளிப்பாடு கவிதை உலகில் தன் தடத்தை பதித்து வரும் குமரி உத்ரா சிறுகதை பிரிவிலும் தன் முத்திரையை பதிக்கிறார்..

மொத்தத்தில் அனைத்து கதைகளும் மிக அருமையாக ஒவ்வொன்றும் ஒவ்வொரு உணர்வுகளை தருவதாக எழுதப்பட்டுள்ளது.அழகிய வார்த்தை பூக்களால் கட்டப்பட்ட பூமாலை

**இத்தொகுப்பு. தி.வள்ளி**
**திருநெல்வேலி.**




## தள்ளி நிற்கவே...

ஆம் சற்று நான் தள்ளி
நிற்கவே விரும்புகிறேன்..

மௌனங்களால் நானே
என் வலிகளை
வருடிக்கொள்கிறேன்..

உங்கள் ஆறுதலை
பிச்சை கேட்க
எனக்கு விருப்பமில்லை..

முள்வருடும் உங்கள்
முந்தைய ஆறுதல்களில்
மனம் ரணமானதே தவிர
என்னைமடிசாய்த்ததில்லை
அவை ஒருபோதும்..

உங்கள் பரிதாபப்
பார்வைகளில் விசம்
அப்பிக்கிடந்தன என்பதே
நானறிந்த உண்மையாகும்..

தோள்சேர்த்து நீங்கள்
தேறுதலானதில்லை
ஒருபோதும்..

காயங்களை வாஞ்சையாய்
கண்டுணர்ந்ததுமில்லை..

கேலிபூக்கும் உங்கள்
சம்பாஷணைகளுக்கு
நான் தீனியாகவே
இருந்திருக்கேன்..

என்னை உணர்ந்து
கொள்ளவும் புதிதாய்
உருவாக்கவும் இந்த
தள்ளி நிற்றல் வலு
சேர்க்கிறது..
வலி தீர்க்கிறது..

நான் மீள்வதெப்படி என
நீங்கள் ஆராய்கிறீர்கள்
அல்லது என் பேச்சில்
கண்டுணர்கிறீர்கள்
அல்லது எனது பலகீனங்களை
கேலி செய்கிறீர்கள்..

நான் ஏன் உங்களிடம்
புத்தகமாக வேண்டும்..

திறக்கவியலா மூடிய
அறையாய் உங்கள் முன்
ஒரு புதிராகவே
இருந்துவிட்டுப்போகிறேன்..

எனக்கான பயணங்களை
என் இலக்குகளை
இருள்சூழ்ந்த திரள்வெளியில்
என் கால்களே
தீர்மானிக்கின்றன..

முற்களை கடந்து
அவைகள்தான் என்
இலக்குகளுக்கு
அழைத்துச்செல்கின்றன..

என் புன்னகையை மட்டுமே
நீங்கள் அறிந்துகொண்டால்
போதுமானது..

அதன் பின்னாலான
ரணங்களை நானே
ஆற்றிக்கொள்கிறேன்
எவர் துணையுமின்றி..



ஆம் ஆகவே சற்று தள்ளி
நிற்கவே விரும்புகிறேன்..!

**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்



## "கடலே... கணவனைத் திருப்பி தா..."

கடலே... என்னால் உன்னை
வெறுக்க முடியாது.
ஏன்னா என் கணவன்
உன்னை நேசிப்பதால்!

கடலே... உன் கரையோரம்
நிற்கும் கருப்புப் பெண்ணின்
கண்ணீர்க் கவலைகள்
உனக்குப் புரியலையா?

நேற்றுக் காலை
சென்றானே வலையோடு!
மாலை வரேனென்று
சொன்னானே சிரிப்போடு!
உன் அலைகளுக்குள்
ஒளிந்திருக்கானா
விளையாட்டுக் காட்ட?

உன் மார்புக்குள்
எத்தனையோ உயிர்களின்
ரகசியம் உண்டு!
என் உயிரின் பாதி மட்டும்
ஏன் உனக்கும் பிடிச்சது?

அவன் படகு
கரும்புள்ளியாகி
மறைந்த நேரத்திலிருந்தே
என் இதயம்
நங்கூரமில்லா படகுதான்!

ஒவ்வொரு அலையிடமும்
கேட்கிறேன்.. "என்
மனிதன் எங்கே?"சத்தமாய்
மோதுகிறாய், நுரையாய்ச்
சிரிக்கின்றாய்
பதில் மட்டும் வரலையே!

என் குழந்தை
கதவோரம் நின்று
"அப்பா வருவாரா?"
ஏங்கிக் கேட்குது?
அக்கேள்வி எனக்குள்
கிழிக்குது மனசை!

கடலே...
உன் தண்ணீர் உப்பு
என் கண்ணீரும் உப்பு
ஒருவிதத்தில் நானும்
சகோதரியுனக்கு
ஒத்தாசை செய்திடு?

வலை காலியா
வந்தாலும் பரவாயில்லை!
கைகள் காலியா
வந்தாலும் பரவாயில்லை!
மூச்சோடு அவன்
வந்தாலே போதும்!

கடலே... உனக்குள்
புதைக்காதே என்
வாழ்க்கையை! அலைகளைத்
தள்ளி வைத்து
ஒரு உயிரை மட்டும்
கரையோரம் தள்ளிவிடு!

கடலே... என் மனிதனைத்
தின்று தீர்த்து விட்டாயா?
அப்படியென்றால்
அவன் மூச்சை மட்டும் தா
முந்தானையில் முடிக்கறேன்!


அவன் மூச்சில்லாத உலகில்
நினைவு கலந்த காற்று
போதும்... அதைத் தழுவி
இன்னும் கொஞ்ச நாள்
உயிரைத் தாங்குவேன்!

மீன் இல்லாத பாத்திரம்
நாளைக்கு நிரம்பலாம்!
ஆனால் அப்பா இல்லாத வீடு
எப்போதும் காலிதானே?,

கடலே... நாளை முதல்
உன் கரை நிற்கும்
ஒவ்வொரு
பெண்ணின்
கண்களிலும்
நான் இருப்பேன்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## கடல் நீர் !

கடல் நீரை குடிநீராய் மாற்றும்
திட்டத்தை சற்றே ஒத்தி
வையுங்கள்... என்னவளின்
பாதம்
பட்டாலே கடல்
நீர் இனிப்பாய்
மாறிவிடும் !



**எம்.பி. தினேஷ்.**
கோவை

## கல்லறை !


அன்று... காதலி
இறந்ததிர்காக கல்லறையை
நினைவுச்சின்னமாக எழுப்பிய
ஷாஜகான் முன்
ஜெயித்து விடுகிறார்கள்
இன்றைய காதலர்கள்..
ஓடும் ரயிலில் இருவருமாக
உயிரை விட்டு !

## குலதெய்வம் !

தெய்வ நம்பிக்கை பெரிதாக
இல்லாவிடினும் வருடத்திற்கு
ஒருமுறை வரும் குலதெய்வ
வழிபாட்டு விழாவில்
குடும்பத்தோடு கலந்து
கொள்ளத்தான்
செய்கிறேன்....

குல தெய்வத்தை காண
மட்டுமல்ல... ஆங்காங்கே
பிரிந்து சிதறி கிடக்கும்
குடும்ப உறவுகளை
அன்றாவது காணும்
ஆதங்கத்தில் !

**எம்.பி.தினேஷ்.** கோவை



நிறத்திலும் சந்தனம்
நினைவிலும்
சந்தனம்... நீ!

**சு.அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்



## ஒப்புதல்

" மண்வாசனை தன்
தோல்வியை மனப்
பூர்வமாக ஒத்துக்
கொண்டது மழலைச்
சாரல் மழலைத் தூறல்
வெளிப்பட்ட வேளையில்..."

**சோதனை**

" கடவுளின் அவசர
அத்யாவஸ்ய வேலைகள்
கூட தாமதமாக்கி தேங்கி
விடுகிறது குழந்தையின்
இடைவிடாத அழுகையால்...."

**திருஷ்டி**

" அழகில் ஊரே மயங்கி
திருஷ்டி சுத்தி போட்டது
ஹிரோ என்று அல்ல
வெள்ளை மனம் படைத்த
குழந்தை மனதுக்கு ....."

**ஈர்ப்பு**

" நட்சத்திரம் சிதறிய
நடுவில் சிக்கிய நிலா போல
சிதறிய பொம்மை நடுவில்
டிமிக்கி கொடுத்த
பொம்மை ...."

**கரிசனம்**

" மரத்துக் கிளையில்
தூளியில் தொங்கி தூங்கிய
குழந்தையை பார்த்துவிட்டு
சுடாமல் கதிர்களை சுருக்கி
திசை மாறினான் சூரியன்..."

**தாலாட்டு**

" தவழ்ந்து துள்ளி தாவி
தவித்த
குழந்தையின்
பாசத்
தேடல்
அம்மாவின்
தாலாட்டில்
எதிரொலித்தது
ஏக்கமாக ...."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி

## நாடகம் காட்டும் வழித்தடம்

எதிர்பாராத நிகழ்வுகள்தான்
வாழ்வின் இயல்பாகின்றன!
"எப்போதும் உன்னுடன்
இருப்பேன்... உனக்காகவே
இருப்பேன்..." –என்றெல்லாம்
நீ சொன்னபோது
மெய்சிலிர்த்துப் போனேன்.
ஆனால் இன்று...
அந்த வார்த்தைகளுக்குப்
பின்னால் இருந்த
வெற்றுப் பொய்களை
நினைக்கும்போது – என்
மனம் வேதனையில்
சிரிக்கிறது! ஏதோ ஒரு
பலனுக்காகவோ...
யாரோ தரும்
பயனுக்காகவோ...
அல்லது சொல்லத்
தயங்கும் ஏதோ ஒரு
காரணத்திற்காகவோ –
தொடரும் பழக்கம் ஒருநாள்
முடிவுக்கு வரும்போது,
"உறவு முடிந்தது" என்று
சொல்லத் தோன்றவில்லை;
மாறாக..."உங்கள் நாடகம்
முடிந்தது" என்றுதான்
நினைக்கத் தோன்றுகிறது!

உண்மையான அன்பும்
நேசமும் என்றென்றும்
முடிந்து போவதில்லை.
ஆனால், பொய்யான
உணர்வுகளும் உறவுகளும்
ஏதோ ஒரு கட்டத்தில் –
தானாகவே முற்றுப்புள்ளி
வைத்துக்கொண்டு
விடைபெறுகின்றன.
அப்பொழுதெல்லாம் வரும்
வலியை விட

போலிகள் விலகிப்
போவதில் ஒரு இனம்
புரியாத மகிழ்வினை
தான் அடைய வேண்டும்..
அப்போதெல்லாம் ஏற்படும்
வலியினை துறக்க
வேண்டும். உங்கள் நாடகத்
தோற்றத்தில், தாங்கள்
ஆற்றிய அந்த அபாரமான
கதாபாத்திரத்தின்
மெய்த்தன்மையை
நினைத்துத்தான் வியக்கத்
தோன்றுகிறது! காலங்கள்
மாறினால் காயங்கள் ஆறும்;
பகிர்ந்த உண்மையான அன்பு
மட்டுமே என்றும் நிலைக்கும்.
வலிகள் நிறைந்த இந்தப்
பிரிவுகள் –மட்டுமே
வாழ்வின் அடுத்த
கட்டத்திற்கான ஒரு
வழித்தடத்தைக் காட்டும் !

அந்த
வழித்தடம்
பூக்களால்
நிறைந்திருக்கும்
என்பது
இல்லை
முட்களை
அடையாளம் காட்டும்



**ஜனனி அந்தோணி ராஜ்,**
திருச்சிராப்பள்ளி.



## கண்ணிலே கருணையிருந்தால்

ஏன் உள்ளம் மட்டுமல்ல
எவரின் உள்ளமானாலும்
உவகையில் ஊஞ்சலாடும்
எள்ளலில் துள்ளல்
கொள்ளும் கண்ணிலே
அன்பிருந்தால்

விண்ணிலே நிலவிருந்தால்
மண்ணகமே வெளிச்சமாகும்
கண்ணிலே கருணை
இருந்தால் கள்ளம் கபடம்
இல்லா கனிவான நட்பு
வளரும்

கடலிலே அலை அடிப்பதால்
அல்லிமலர் பூப்பதில்லை
கண்ணிலே அன்பிருந்தால்
காதல் மலர் பூத்துவிடும்

வானத்து மேகங்களே
வாய்திறந்து நிற்கும்
வரப்புகளைப்
பாருங்கள்
கண்ணிலே
கருணை
யிருந்தால்
கண்ணீர்
மழை
தூவுங்கள்.



**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

## பாகுபாடு ஒழிப்போம்!

நேரிசை வெண்பா!
உரிமைகளைப்பாதுகாத்தே
உன்னதமாக பரிவுடன்
பாசமும் பாங்காய்..
பரப்புரை செய்து திகழ்வதே
சீராகும் எந்நாளும்
நெய்வோம் சமமென்றே
நேர்ந்து!

பாகுபாட்டைப் பாங்காய்
ஒழித்திட நிற்பமே
ஈகை சமமாக்கி
இன்னுயிரை..
ஏகமாகக்காண்பமே
கண்ணியமாக நடந்திட
பூண்பமே நல்ல பொலிவு!

## மூவேந்தர்!

அறுசீர் மண்டிலம்.

சேர சோழரும் பாண்டியரும்
செழிப்பாய் ஆண்டனர்
தமிழ்நாட்டை! சேரர்
கொடிதான் வில்லம்பு
சேர்ந்த தலைநகர்
வஞ்சியடா! ஆரத் தழுவியே
தமிழ்நாட்டை அழகாய்
ஆண்டனர் தமிழ்நாட்டை!
சீராய்ப் புலியினைக்
கொடியாக சோழர் பெற்றனர்
அறிவோமே!

பாண்டி மன்னரும்
மீன்தன்னைப்பாங்காய்ப்
பெற்றனர் கொடியாக!
வேண்டி முடியுடை
மூவேந்தர் விரும்பி
அடைந்தனர் மரபாக!
ஆண்ட காலமும்
பொற்காலம் அவரின்
ஆட்சியே நற்காலம்!
யாண்டும் மூவரின்
நல்லாட்சி யாரும் போற்றிடும்
சொல்லாட்சி!

அரசர் மூவரும் அழகாக
ஆண்டார் நலமுடன்
மக்களுக்காய் முரசு
கொட்டியே பாராட்டு
முன்னேஅவர்களைச்சீராட்டு!
பெருமை
முற்றிட
ஆண்டனரே
பேசும்
ஆட்சியை
நல்விதமாய்!
அருமை
தோன்றிட
மூவேந்தர் அறிவாய்
அருளுடன் ஆண்டனரே!



**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

உரசிய காற்று கிளைகளில்
தடவித் தவித்தது
உதிர்ந்த இலைத் தழும்பை.

வரும்போது வரட்டும்
இலையுதிர்த்துக்
காத்திருக்கிறது
நன்றியுடன் நதியோர மரம்.

அத்தனை
வலியில்லை
நட்டவர்
வந்து வேரில்
அமர்ந்தபோது
வளர்ந்த மரம்.



**ரிஷபன்**



## பச்சைக் கிளி

பச்சைக் கிளிமுகம்
பார்த்து ரசிக்கும்
இச்சைதான் நீர்பருகித்
தாகம் தணிக்கும்
கோவை இதழால்
கொத்தித் தின்றாலும்
தேவை குடிநீர்
தேடும் போதே!!
குளம்நிறை நீராயினும்
குடிப்பது
அவரவர்
அளவுக்கே
அதைவிட
அதிகம்
என்றில்லை !



**வைரமணி**
சென்னை



எங்கோ பிறந்தோம்!
எங்கோ வளர்ந்தோம்!
அனைவரும் இங்கே!
சந்தித்துக் கொண்டோம்!
இதயத்தை நட்பால
சிந்தித்துக கொண்டோம்!

முகங்களைப் பற்றி
யோசித்ததுமில்லை!
இனம் பணம் பார்த்து
நேசித்ததுமில்லை!

எதிர் பார்ப்புகள்
எதுவுமில்லை!
ஏமாற்றங்கள் சிறிதுமில்லை!

அவரவர் கருத்துக்களை
இடம் மாற்றிக்க
கொள்வோம்!
பாரட்டுக்களை
பரிமாறிக்க கொள்வோம் !


சின்ன சின்ன சண்டைகள்
இடுவோம் சீக்கிரத்திலேயே
சமாதானத்திற்கு வருவோம்!

கவலைகளை
கிள்ளி அறிவோம்!
இலட்சியங்களை
சொல்லி மகிழ்வோம்!

உழைப்பை பெருக்க
உற்சாகம் தருவோம்!
நலத்தை பெருக்க
நம்பிக்கை தருவோம்!
நன்மைகள்
வளர
முயற்சிப்போம்!
நட்பால்
உயர்ந்து
சாதிப்போம்!



**மீனாட்சி**
**பாண்டியன்**
திருவண்ணாமலை



**1. கனவு தொழிற்சாலை**
இயக்குநரின்
கனவு ,கண்ணோட்டம்
வாழ்க்கை தான்
நீங்கள் காண்கின்ற சினிமா!

**2. விட்டில் பூச்சிகள்**
கனவு காண்கின்றவனின்
கால் வயிறு கூட
நிறையவில்லை
"உதவி இயக்குநர்"

**3. ஸ்டார் நடிகன்**
எல்லா நட்சத்திரமும்
துருவ நட்சத்திரம்
ஆவதில்லை

**4. உண்மை எல்லாம்**
தொலைத்த பிறகும்
இழந்த பிறகும் மனிதன்
பயம் ஒன்றும் அறிவதில்லை!

**5. தெய்வம்**
சொல்லிக்காட்டாமல்
அள்ளிச்செய்யும் ஒரே ஒரு
உத்தம ஜீவன் அப்பா
மட்டுமே!

**6. மனிதமிருகம்**
துரோகங்களை
மனிதனை தவிர
எந்த மிருகங்களும்
செய்வதில்லை!

**7. படைப்பு**
எல்லாம் அறிந்தும்
எல்லாம் புரிந்தும் ஏனோ
இந்த மனிதர்களை
குறைகளுடன்
படைத்து
விடுகிறான்
அந்த
பெருங்கொடை
கொண்ட
கடவுள்!



**லி .நௌஷாத் கான்**

## மனிதா மாறுவாயா.?

* மனிதன் ஆகுவாயா..
இல்லை மரங்கள்
ஆகுவாயா..நீ..
மனித குலத்துக்கே
முள்ளாகுவையா.?
பேசு.. நீ.. பேசு..!
பேசு..நீ.. பேசு...!

*.எல்லா குணங்களும்
உனக்குள் இருந்து
ஆட்டங்கள் போடுதுவே..
எல்லா குணங்களும்
உனக்குள் இருந்து..
ஆட்டங்கள் போடுதுவே..

மனசில் இருக்கும் தெய்வ
குணங்களோ .. மவுனம்
காக்கிறதே..! மனசில்
இருக்கும் தெய்வ
குணங்களோ மவுனம்
காக்கிறதே..!

வேசத்தை விடுவாயா..
துவேசத்தை மறப்பாயா..
வேசத்தை விடுவாயா..
துவேசத்தை மறப்பாயா

அரக்க குணங்களை
அடக்கி ஆளுகிற
உறுதி கொண்டவனாக
வாழுவாயா..!

உறுதி கொண்டவனாக
வாழுவாயா..!
(மனிதன் ஆகுவாயா.)

* குரங்கினைப் போல
மனதும் தாவி..
வேடிக்கைக் காட்டுதுவே..
குரங்கினைப் போல
மனதும் தாவி.. வேடிக்கை
காட்டுதுவே..!

வரங்களை ஆளும்
வல்லமை யோடு..
வாழ்க்கை அழைக்கிறதே..
வரங்களை ஆளும்
வல்லமை யோடு..
வாழ்க்கை அழைக்கிறதே!

நடந்ததை மறப்பாயா..
நடப்பதை நினைப்பாயா..
நடந்ததை மறப்பாயா..
நடப்பதை நினைப்பாயா.!

இருக்கும்
வரையிலும்
இதயம்
இருக்கிற..
மனிதனாக நீ
வாழுவாயா..



மனிதனாக நீ வாழுவாயா..
(மனிதன் ஆகுவாயா.)

**வே.கல்யாண்குமார்.**



## அழகை ஆராதிப்போம்

கவிதைக்கு இலக்கணம்
இருக்கிறது அழகுக்கு
இலக்கணமேது – அது
மனநிலையைப் பொருத்தும்
சூழ்நிலையைப் பொருத்தும்

காதலன் காதலி ரசிப்பின்
இலக்கணம்கூட
சிலநேரம் மாறுதலுக்கு
உட்படுகிறது தாய்க்கூட
சிலநேரம் என் கடைக்குட்டி
ரொம்ப அழகுயென்று
பெருமைப்படுகிறாள்
ஆனால் குழந்தைக்கோ
தன்னைப்பெற்ற
தாய் மட்டுமே
தேவதையாகிறாள்

ரசனைக்கும் கலைக்கும்
இடையில்
சிக்கித்தவிக்கும்
இலக்கணமற்ற
பிரளயமே
அழகு – அதை
ஆராதிக்கப்
பழகு.



**நாகை ஆசைத்தம்பி**
கோவை

முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

RG
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sir Manjal Mart
YOUR DESIRE WE DELIVER
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget <> We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN
RS.20000
CRYPTO PLAN
RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash
& Detailing
We Done Here
9840882711
7200043675
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337 / 7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
Package
Rs. 4.8 LPA
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்




WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588


























ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs














# பல்சுவை களஞ்சியம்




# மீம்ஸ்







## வீட்டில் கேஸ் சிலிண்டர் உபயோகிக்கும் போது கவனிக்க வேண்டிய விஷயங்கள்



பொதுவாக நகரங்களில் அனைத்து வீடுகளிலும் கேஸ் அடுப்பு இருக்கிறது. அனைவருக்கும் கேஸ் அடுப்பை பயன்படுத்தும் விதம் நன்கு தெரிந்திருக்கும்.

சமையல் சிலிண்டருக்கு முதல் முறையாக இணைப்புப் பெறும் போது, சமையல் கேஸ் பாதுகாப்பாக பயன்படுத்தும் முறை பற்றி தெரியாவிட்டால் சிலிண்டர் வினியோகிக்கும் நபரிடம் செயல்முறை விளக்கம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

வெப்பமான பிற பொருட்களில் இருந்து சிலிண்டரை சில அடிகள் தள்ளி வைத்திருக்க வேண்டும். சிலிண்டரை பயன்படுத்தும் போது அதன் அருகில் மண்ணெண்ணெய் அல்லது வேறு வித எரிவாயு சம்மந்தமான அடுப்புகளை வைத்து பயன்படுத்தக் கூடாது. சிலிண்டர் வால்வின் உள்புறத்தில் ரப்பர் டியூப் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

சிலிண்டரில் கசிவு இருப்பதாக உணர்ந்தால் உடனே சோப்பு நீர் கலந்து சிலிண்டர் மீது ஊற்றினால் நீர்க் குமிழ் உருவாகும். இதைக் கொண்டு எரிவாயு கசிவை பரிசோதிக்க வேண்டும். எரியும் தீக்குச்சி மூலம் பரிசோதிக்கக் கூடாது.

நைலான் கயிற்றுடன் இருக்கும் பாதுகாப்பு மூடி எப்போதும் சிலிண்டரிலேயே பிணைக்கப்பட்டு இருக்க வேண்டும். கேஸ் கசிவு இருப்பதை அறிந்தால் பாதுகாப்பு மூடியால் வால்வை மூட வேண்டும்.

சிலிண்டர்களை நல்ல முறையில் உபயோகப்படுத்த சில குறிப்புகள்

சமைக்கும் போது, அடுப்பில் பாத்திரங்களை வைத்து விட்டு நீண்ட நேரம் கவனிக்காமல் விட்டு விட்டால் சமையல் பொருட்கள் கொதித்து வெளியேறி தீயை அணைத்து விடும். இதனால் கேஸ் கசிவு உண்டாகும்.

பிரிட்ஜ் போன்ற மின் சாதனங்களை சமையல் அறைக்குள் வைத்திருக்கக் கூடாது. அதனால் ஏற்படும் மின் அழுத்த ஏற்றத்தாழ்வு, கேஸ் கசிவு இருக்கும் போது விபத்தை உண்டாக்கக் கூடும்.

2 ஆண்டுகளுக்கு ஒரு முறை ரப்பர் டியூப்பை மாற்ற வேண்டும். சமையல் எரிவாயு சாதனங்களை அவ்வப்போது பரிசோதித்து சரி செய்து கொள்ள வேண்டும்.

கேஸ் கசிவு ஏற்பட்டால் பதட்டம் அடையாமல் ரெகுலெட்டர் மற்றும் பர்னர் நாப்களை மூட வேண்டும். அந்த அறையில் உள்ள மின் சுவிட்சுகள், மின் சாதனங்களை இயக்கக்கூடாது வெளிப்புறம் இருக்கும் மின் இணைப்பில் மின் சப்ளையை துண்டிக்க வேண்டும்.

காற்றோட்டத்துக்காக கதவுகள், ஜன்னல்களை திறந்து வைக்கவும். எரியும் நெருப்பு, எண்ணெய் விளக்குகள், மெழுகுவர்த்தி போன்றவற்றை அணைத்திட வேண்டும். சிலிண்டரை பாதுகாப்பு மூடியால் மூடிவிடுங்கள். உதவிக்கு உங்களின் வினியோகஸ்தர் அல்லது அவசர சேவை மையத்தை தொடர்பு கொண்டு கேஸ் கசிவு ஏற்படுவதை சரிசெய்து கொள்ளுங்கள்.




-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

# விடுகதை



| | |
|---|---|
| எட்டாத ராணியாம் இரவில் வருவாள், பகலில் மறைவாள். அது யார்? | நிலா |
| ஆள் இறங்காத குளத்தில் ஆடி இறங்கி கூத்தாடுது. அது என்ன ? | மத்து |
| கண்ணில் தென்படுவான், கையில் பிடிபட மாட்டான். அவன் யார்? | புகை |
| அடித்து நொறுக்கி அணலில் போட்டால் ஆவியாகத் தோன்றி அழகாய் மணக்கும். அது என்ன? | சாம்பிராணி |
| தலை இல்லாதவன் தலையை சுமப்பவன். அவன் யார் | தலையணை |
| வாலால் நீர் குடிக்கும்,வயால் பூச்சொரியும் அது என்ன? | விளக்கு |

## நல்ல முன்னேற்றம் உண்டாக...





எவ்வளவு சம்பாதித்தாலும் பொருளாதாரத்தில் முன்னேற்றமே இல்லையா? இந்த மரத்திற்கு அடியில் தினமும் ஒரு தீபத்தை ஏற்றி பாருங்கள். குரு பகவானின் அருளால் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்*

நாம் ஒவ்வொருவரும் கஷ்டப்பட்டு சம்பாதிப்பதற்கு காரணம் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் உண்டாக வேண்டும் என்பதுதான். பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டாலே நம்முடைய கஷ்டங்கள் படிப்படியாக விலக ஆரம்பித்து விடும். ஆனால் பலருக்கும் எவ்வளவு சம்பாதித்தாலும் சம்பாதித்த பணம் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு உதவாமல் தேவையில்லாத செலவுகளாக போய் சேர்ந்து விடுகிறது. அப்படிப்பட்டவர்கள் ஏற்ற வேண்டிய தீபத்தை பற்றி தான் இந்த ஆன்மீகம் குறித்த பதிவில் நாம் பார்க்க போகிறோம்

பொருளாதார நிலை சிறப்பாக இருக்க

ஒருவருடைய வாழ்க்கையில் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்றால் அவருக்கு குருபகவானின் அருள் என்பது பரிபூரணமாக வேண்டும். யார் ஒருவருடைய ஜாதகத்தில் குருவின் பலம் இருக்கிறதோ அவர்களுக்கு பொருளாதாரத்தில் எந்தவித தடைகளும் ஏற்படாது. அவர்கள் தொட்டது அனைத்தும் துலங்கும் என்றே கூறப்படுகிறது. அதனால் தான் குரு பார்க்க கோடி நன்மை என்று கூறுவார்கள். அப்படி சிறப்பு வாய்ந்த குரு பகவானின் அருளை பெற்று பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட செய்ய வேண்டிய ஒரு எளிமையான வழிபாட்டு முறையை தான் இப்பொழுது பார்க்க போகிறோம்.


ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு விதமான மரங்கள் உகந்த மரங்களாக திகழும். அந்த வகையில் குரு பகவானுக்கு உகந்த மரமாக திகழ்வதுதான் வாழைமரம். யாரோ ஒருவருடைய வீட்டில் வாழை மரத்தை வைத்து வளர்க்கிறார்களோ அவர்களுடைய வீட்டில் செல்வ செழிப்பிற்கு எந்தவித குறையும் இருக்காது என்று கூறப்படுகிறது. இரண்டே இரண்டு வாழை மரங்களை தங்களுடைய வீட்டில் வைத்து நீரூற்றி வளர்ப்பதன் மூலம் அந்த மரம் வளர்வது போல் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றமும் உண்டாகும் என்று கூறப்படுகிறது.

ஒருவேளை வீட்டில் வாழை மரத்தை வைத்து வளர்ப்பதற்குரிய இட வசதி இல்லை என்று நினைப்பவர்கள் அருகில் இருக்கக்கூடிய ஆலயத்தில் வாழை மரக்கன்றுகளை வைத்து தினமும் தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டும். இப்படி செய்தாலும் குரு பகவானின் அருளால் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். இப்படி வளர்க்கக்கூடிய இந்த வாழை மரத்தின் அடியில் தினமும் காலையிலும், மாலையிலும் ஒரே ஒரு தீபத்தை ஏற்றி வைத்து ஊதுபத்தி காட்டி வழிபாடு செய்வதன் மூலம் குருவருள் கிடைக்கும் என்று ஜோதிட ரீதியாக கூறப்படுகிறது. இரண்டு வேளையும் தீபம் ஏற்ற முடியவில்லை என்றால் ஒருவேளை மட்டுமாவது தீபம் ஏற்றலாம். தினமும் ஏற்ற இயலாதவர்கள் குரு பகவானுக்குரிய கிழமையான வியாழக்கிழமை அன்று மட்டுமாவது தீபம் ஏற்றி வழிபாடு செய்ய குரு பகவானின் அருள் பரிபூரணமாக கிடைக்கும். அப்படி அருகில் ஆலயமும் இல்லை வீட்டில் வாழை மரத்தை வைத்து வளர்ப்பதற்குரிய இட வசதியும் இல்லை என்று நினைப்பவர்கள் வியாழக்கிழமை தோறும் வீட்டு பூஜை அறையில் குரு பகவானை மனதார நினைத்து இரண்டு மஞ்சள் வாழைப்பழத்தை வைத்து வழிபாடு செய்வதன் மூலமும் குரு பகவானின் அருளை பெற முடியும்.

குரு பகவானின் அருளை பரிபூரணமாக பெற்று வாழ்க்கையில் தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைப்பதற்கும் பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படவும் முழுமனதோடு இந்த வழிபாட்டை செய்தால் போதும்.

எம் அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி,
திருச்சி

# ஜோக்ஸ்



கணவன் : வொய்ஃபுக்கு(wife) அர்த்தம் தெரியுமா? வித்அவுட் இன்பர்மேஷன் ஃபைட்டிங் எவ்ரிதிங் ( without information fighting everthing)

மனைவி : அதுக்கு அர்த்தம் அப்படி இல்லைங்க ! வித் இடியட் ஃபார் எவர் ( with idiot for ever)

கணவன் : தேவைதான்டி எனக்கு !

=========================================

கணவர்: இது மாதிரி என்கிட்டே தொடர்ந்து சண்டை போட்டுக்கிட்டே இருந்தா ஒரு நாள் மிருகமா மாறிடுவேன் ஜாக்கிரதை !

மனைவி: அட நீங்க வேற எலியைப் பார்த்தெல்லாம் நான் பயப்பட மாட்டேன்!

=========================================

மனைவி : என்னை, பெண் பார்க்க வந்தன்னிக்கு, நீங்க டிபனை தொடவே இல்லையே ஏன்?”

கணவன் : ரெண்டாவது ‘ஷாக்’ எதுக்குன்னு, தான்..!


=========================================

“தரகரே... நீங்க ஒரு பெரிய விஷயத்தை மறைச்சிட்டீங்க.”

“என்ன சொல்றீங்க?”

“பெண் அஞ்சடி உயரம்னு சொன்ன நீங்க, மூணு அடி அகலம் இருப்பாள்னு சொல்லவே இல்லையே...”

=========================================



“டாக்டர் பத்து நாளா ஒரே கனவா வருது!”

“கனவு தானே வருது... அதனாலென்ன?”

“இல்ல டாக்டர். இடை இடையே இந்தக் கனவை உங்களுக்காக வழங்குபவர்கள்னு விளம்பரம் வேற வருதே!”

=========================================

“பாடம் எல்லாம் முடிஞ்சிப் பேச்சு.. ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க.. எதுவா இருந்தாலும் தயங்காமக் கேளுங்க..”

“சார் உங்க பெண்ணு பேரு என்ன சார்?”

=========================================

“ஏன்டா 20 நாள் காலேஜுக்கு வரல...?”

“சார்... எங்கப்பா எப்பவும் சொல்லுவார் ஒரு இடத்துக்கு அடிக்கடி போனா மரியாதையா இருக்காதுனு”

=========================================

1. ஆங்கிலம் ஒரு அற்புதமான மொழி நான் பேசாதிருக்கும் வரை..

2. வீட்டை சுத்தப் படுத்துவதற்காகவே பண்டிகைகளை கண்டுபிடித்துள்ளான் தமிழன்.

3. வெயில் காலத்திற்கும் பனி காலத்திற்கும் நூல் அளவு தான் வித்தியாசம்.

எப்படா குளிக்க போறோம்னு யோசிச்சா அது வெயில் காலம்..

ஏன்டா குளிக்க போறோம்னு யோசிச்சா அது பனி காலம்..

# போதி தர்மனின் முந்தைய வாரிசு

=========================================

போடா, நீ முட்டாள் !

குமாஸ்தா : போடா, நீ முட்டாள் !

டைப்பிஸ்ட்: போடா, நீ தான் முட்டாள் !

மேனேஜர்: என்ன அங்கே கூச்சல்? நான் ஒருத்தன் இங்கே இருப்பது உங்களுக்கு தெரியலையா ?



# பன்முகம்



## தூக்க கலக்கத்தை எப்படி துரத்தலாம்



மதிய வேளையில் சிறுதுயில் கொள்வது சிலரின் பழக்கம். அதை அவர்கள் அன்றாட வழக்கமாகவே வைத்திருப்பார்கள். எவ்வளவு நேரம் தொடர்ந்து வேலை பார்த்தாலும், மதியம் சிறிது நேர தூக்கம் இல்லாமல் அவர்களால் தொடர்ந்து இயங்க முடியாது.

ஆனால் அலுவலகப் பணி போன்றவற்றில் இருப்பவர்களுக்கு, மதியம் தூக்கம் வருவது பிரச்சனையை ஏற்படுத்தும். அந்த மாதிரியானவர்கள், மதிய நேர தூக்க கலக்கத்தை எப்படி துரத்தலாம் என்று பார்க்கலாம்...

லேசான, சத்தான உணவு

மதிய உணவின்போது அதிகமான, எண்ணெய் நிறைந்த உணவுகளைச் சாப்பிடுவது மந்தமான உணர்வை ஏற்படுத்துகிறது. தூக்கத்தை அழைத்து வருகிறது. அதற்குப் பதிலாக, புரதம், நார்ச்சத்து நிறைந்த மிதமான அளவு உணவை உட்கொள்ளலாம்.

சாதத்தைக் குறைத்து, பச்சைக் காய்கறிகள், சாலட் மற்றும் பழங்களை மதிய உணவில் கூடுதலாக சேர்த்துக்கொள்ள வேண்டும். இதனால் உடலுக்கு ஆற்றல் கிடைக்கும், தூக்கம் குறையும்.

**டீ,காபி**

ஒரு கப் டீ அல்லது காபி பருகுவது. பிற்பகல் தூக்கத்தைத் துரத்த உதவும். ஆனால், உடனடி உற்சாக உணர்வை தோற்றுவிக்கும் இந்த பானங்களை அளவோடு அருந்துவதே நல்லது. காரணம். அதிகப்படியான காபீன், உடலில் நீரிழப்பை ஏற்படுத்தி, வழக்கமான இரவு தூக்கத்தை பாதிக்கும்.

**சிறிய இடைவெளி**

தொடர்ச்சியான வேலை. ஒருவரை சோர்வடையச் செய்யும். அந்நிலையில் தூக்கம் வருவது இயற்கையானது. ஒவ்வொரு மணி நேரத்துக்கும் 5 முதல் 10 நிமிட இடைவெளி எடுத்துக்கொள்வது. உடலை இயல்பாக்கும். இந்த சிறிய இடைவெளி, நம் மனதை புத்துணர்ச்சியடையச் செய்து தூக்கத்தை விரட்ட உதவும்.

**காற்றாட நடப்பது**

மதிய நேரம் தூக்கம் அதிகமாக தொந்தரவு படுத்தினால், உடனே காற்றாட வெளியே சிறிது தூரம் நடந்து செல்லுங்கள். புதிய காற்றும். லேசான சூரிய ஒளியும் ஒருவர் உடலுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தும். தூக்க கலக்கத்தைப் போக்கும்.

**தண்ணீர் குடிப்பது**

மதியம் போதுமான அளவு தண்ணீர் குடிப்பது நமது உடலை நீரேற்ற மாக வைத்திருக்கும், சோம்பலைக் குறைக்கும். அதிக நேரம் தண்ணீர் பருகாதபோது. சோர்வு அதிகரித்து தூக்கம் வரும்.

**சிறிதுநேர ஓய்வு**

மதிய வேளையில் தூக்கத்தை தடுப்பது கடினமாகத் தோன்றினால், வாய்ப்பிருந்தால் சுமார் 10-15 நிமிடங்கள் கண்களை மூடி அறி துயில் ஓய்வு எடுக்கலாம். அதன் மூலம் புத்துணர்ச்சி பிறக்கும். உற்சாகமாக செயல் பட முடியும்.

பொதுவாக, மதிய உணவுக்குப் பிறகு. நமக்கு அலுப்பு,சலிப்பூட்டுவதாகத் தோன்றும் வேலைகளை கொஞ்ச நேரம் ஒத்திவைத்து, விருப்பமான வேலைகளை செய்யலாம். இதனால், மதிய நேர உறக்கம் நம்மை ஆக்கிரமிப்பதை தவிர்க்கலாம்.

## ஏ.ஐ. எனும் செயற்கை நுண்ணறிவு



மனித நுண்ணறிவினை எந்திரங்களால் உருவகப்படுத்துவது தான் செயற்கை நுண்ணறிவு.

தொழில் நுட்பத் துறையில் ஏ.ஐ. எனப்படும் இந்த செயற்கை நுண்ணறிவால் மிக உயர்ந்த வளர்ச்சியினை கண்டுள்ளது மனித சமுதாயம். இன்னும் கொஞ்ச காலத்தில் ஏ.ஐ. மனித வாழ்க்கையினையே மாற்றிவிடலாம். பல பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த தொழில் நுட்பம் விஞ்ஞான வளர்ச்சியில் ஒரு புரட்சி. செயற்கை நுண்ணறிவு இன்று நுழையாத இடமில்லை எனலாம். மனிதன் மூளை ஓடும் ஓட்டத்திற்கு அவனுக்கு நேரத்தினையும் உழைப்பினையும் மிச்சப்படுத்திக் கொடுக்கின்றது இந்த தொழில் நுட்பம்.

விவசாயத் துறையில்-நோய், சத்து குறைபாடு, தட்ப வெப்ப நிலை, தண்ணீர் தேவை, மண்வளம் என எதனையும் ஏ.ஐ. மூலம் அறிய முடியும்.

இன்றைய கால கட்டத்தில் வங்கிகளின் உள் மனதினை (சைபர் கிரைம்) பயன்படுத்தி மக்களை ஏமாற்றி எடுக்கும் மோசடிகளைக் கூட இந்த ஏ.ஐ. மூலம் வங்கிகள் கண்காணிக்க முடியும்.

மருத்துவ உலகில் ஏ.ஐ. மிக அதிக முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. நாம் உணராமலேயே எக்ஸ் ரே, எம்.ஆர்.ஐ, சி.டி. ஸ்கேன் என நாம் உபயோகித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். புற்றுநோய், எலும்பு முறிவு இவைகளின் நுண்ணறிவினைக் கொண்டுதான் நோய்களை கண்டறிவது எளிதாகிறது.

பயாப்சி முறையில் கண்டறிவதும் இவ்வாறுதான். இனிவரும் காலங்களில் ஒரு நோய்க்கு ஒரே விதமான மருந்து என்பது கூட மாறி ஒவ்வொரு தனி மனிதனின் பாதிப்பு, உடல் தேவைக்கேற்ற அளவில் கூட மருந்துகள் வழங்கப்படும். இது ஒருவரின் உடல்நல முன்னேற்றத்திற்கு எளிதாக இருக்கும்.

மேலும் ஏ.ஐ. மூலம் ஒருவருக்கு குறிப்பிடப்பட்ட நோய்கள், பாதிப்புகள் ஏற்படுவதனைக் கூட கண்டறிய முடியும்.

உடலில் நச்சு (செப்சிஸ்) ஆபத்து நெருங்கும் நிலை இவைகளை ஏ.ஐ. மூலம் முன்னதாகவே அறிய முடியும்.

* ரோபோட் செயல் திறனே ஏ.ஐ. தானே

* இன்று நுணுக்கமான அறுவைச் சிகிச்சைகளைக் கூட இதன் திறன் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

* ஒருவரின் முழு ரெகார்டுகளை சேமித்து நிர்வகித்து வைக்க முடியும்.

இன்று எப்படி கணினி இல்லாமல் மனிதனால் வாழ முடியவில்லையோ. அது போல் வருங்காலத்தில் ஏ.ஐ. இல்லாமல் வாழ முடியாது என்ற நிலை ஏற்படும்.

இன்று வெளிநாடுகளில் காரில் அமர்ந்து ஒருவர் தான் செல்ல வேண்டிய இலக்கினை பதிவு செய்து விட்டால் போதும். அவர் எதுவும் செய்யத் தேவையில்லை. அதுவே சாலையில் சிக்னல், வேகம் இவற்றினை கண்காணித்து செல்ல வேண்டிய இடத்தில் கொண்டு போய் விட்டு விடும்.

போன்களில் முக அங்கீகாரம், சிரி, விளையாட்டுகள் என இவையெல்லாம் ஏ.ஐ.யின் தனி மனிதனுக்கான சிறு வெளிப்பாடுதான்.

செயற்கை நுண்ணறிவின் தந்தை ஜான் மென்கார்தி ஆவார். இவர் அமெரிக்க கணினி விஞ்ஞானி ஆவார்.

ஏ.ஐ. இதனை ஆக்கப்பூர்வமாக பார்க்கும் பொழுது மிக துரிதமாக துல்லியமாக எந்த வேலைகளையும் செய்ய முடியும். மனிதன் செய்யும் பொழுது ஏற்படும் தவறுகள் குறையும்.

* பல சேகரிப்புகளை கணித்து துல்லியமான முடிவுகளை சொல்ல முடியும். இது மருத்துவம், பண முதலீடு, வியாபாரம் போன்ற பிரிவுகளில் பேருதவியாக இருக்கும்.

* மருத்துவ துறையில் நோய் கண்டுபிடிப்பு, சிகிச்சை முறை, நோயாளிக்கு செலுத்தப்பட வேண்டிய கவனிப்பு, பராமரிப்பு இவைகளை இது துல்லியமாக சொல்லும்.

* தொழில் இடத்தில் உற்பத்தி கூட, பிரச்சினைகள் தீர வழி வகுக்கும்.

* பேரழிவு காலங்களில் மனிதனுக்கு கடினமான வேலைகளை ஏ.ஐ. கொண்டு செய்ய முடியும்.

ஆனால் ஒவ்வொன்றுக்கும் மறுபக்கம் என்ற ஒன்று இருக்கும் அல்லவா? அது போல் ஏ.ஐ.க்கான மறுபக்கத்தினைப் பார்ப்போம்.

* மிகப்பெரிய பிரச்சினையே மக்களுக்கு வேலை வாய்ப்பு என்பது மிகவும் குறைந்து விடும். விவசாயம் முதல் உயிர் காப்பது வரை பொது மக்களுக்கு வேலை வாய்ப்பு என்பது மிகப்பெரிய பிரச்சினை தான்.

* ஒவ்வொரு தனி மனிதனின் தனிப்பட்ட விஷயங்கள், சூத்திரம் இவை இருக்காது.

* பாதுகாப்பு இருக்காது

* பிளாக் பாக்ஸ் எனப்படும் - மனிதனுக்கே சவாலான சில முடிவுகளை ஏ.ஐ. எடுக்கலாம்

* இதனை உபயோகித்து தவறான செய்திகளை உட்புகுத்தலாம்.

* மனிதன் இல்லாமலே ஆபத்தான ஆயுதங்களை இயக்குதல், மனித அழிவு இவற்றினை ஏற்படுத்தலாம்.

* டிரோன்ஸ், ரோபோட் போன்றவை மனித கட்டுப்பாட்டில் இல்லாமல் தானே முடிவுகள் எடுத்து செயல்படலாம். இது பல நாடுகளின் பாதுகாப்பிற்கு ஆபத்தாக முடியலாம். இன்று உலக நாடுகள் ஏ.ஐ.பற்றிய சில கவலைகளைக் கொண்டுள்ளன.


* வேலையில்லா திண்டாட்டம் பற்றியது

* ஏ.ஐ.யினை தவறாக பயன்படுத்தக் கூடிய அபாயம் பற்றியது

* இன்று சீன நாட்டில் யுத்தத்தில் சண்டையிட ரோபோட்களை உருவாக்கி வருகின்றனர். இது மனிதனின் கட்டுப்பாடின்றி தீயனவற்றை தாக்குமாறு அவைகளுக்கு கட்டளையிட்டு உருவாக்கி வருகின்றனர். இதுவே அதே ரோபோட் சுயமாக தன் போக்கில் இயங்கும் ஆபத்தும் ஏற்படலாம்.

* இது போலவே டிரோன்கள் மூலம் அதிக கவனிப்பினை ஏற்படுத்திக் கொள்ளுதல், வானில் தானே இயக்குதல் இவற்றினை உருவாக்குவதிலும் அதிக பண முதலீட்டினை செய்து வருகிறது.

## மூளையில் மட்டுமல்ல நினைவுகள்



மனிதனின் நினைவுகள் எங்கே சேமிக்கபடும்? மூளையில். ஆனால் மூளை எனும் உறுப்பு இல்லாத மிக தொன்மையான உயிரினங்கள் உலகில் உள்ளன. ஜெல்லிமீன், ஸ்டார் ஃபிஷ் மாதிரி. அவற்றுக்கும் நினைவுகள் இருக்கவேண்டும். நினைவுகள் இருந்தால் தான் எதை சாப்பிடலாம், கடலில் எது ஆபத்தான பகுதி என்பது மாதிரி விசயங்கள் தெரியவரும்.

ஆக அவற்றின் நினைவுகள் செல்லுலர் அளவில் உடலில் சேமிக்கபட்டு இருக்கலாம். மனிதனும் பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய உயிரினங்களின் வம்சாவழிதான். ஆக அவன் உடலிலும் மூளையை தவிர வேறு எங்காவது நினைவுகளை சேமித்து வைக்கும் அந்த மெகானிசம் இருக்குமா?

ஆம் என்கிறது அறிவியல். இதற்கு காரணம் உறுப்பு மாற்று சிகிச்சைக்கு பின்னர் பலரின் வாழ்வில் நடந்த மாற்றங்கள். க்ளேர் சில்வியா எனும் பெண்ணின் கேஸ் மிக பிரபலம். நடனகலைஞராக இருந்த க்ளேருக்கு இதயத்தில் பிரச்சனை இருந்ததால் அவருக்கு பைக் விபத்தில் இறந்த ஒரு 18 வயது இளைஞனின் இதயத்தை பொருத்தி சிகிச்சை தரப்பட்டது. அதன்பின் திடீரென அவருக்கு பியரும் கே.எப்.சி சிக்கனும் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. இதற்கு முன் அவருக்கு இதெல்லாம் பிடிக்காது. நடையும் ஆணை போல மாறியது. இதய தானம் செய்த பையனின் குடும்பத்தினரை தொடர்பு கொள்கையில் அவர்கள் தம் மகனுக்கு இதெல்லாம் பிடிக்கும் என்றார்கள்.

இப்படி இதயமாற்று சிகிச்சை பெற்ற பலரும், கிட்னி, நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்த பலரும் தாம் முன்பின் சந்தித்திராத உறுப்புதானம் செய்தவர்களுக்கு பிடித்த உணவுகளை உண்பது, தொழிலையே மாற்றிக்கொள்வது என இருப்பது பரவலாக காணப்படும் விஷயம். இதை ஆராய்ந்த ஆய்வுகள் ஒரு 15% கேஸ்களில் இப்படி ஏற்படும் வாய்ப்பு உண்டு என்கின்றன.

## கடவுள் சிந்திக்க வைத்தவன்



ஒரு கோவில் மண்டபம். அங்கு, கடவுளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார் சாமியார் ஒருவர். நிறையப் பேர் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதை, மேலே இருந்து கவனித்துக் கொண்டிருந்தார் கடவுள். 'இந்த மனிதர்கள் எப்பவும் நம்மைப் பற்றியே பேசுகிறார்களே!' என்று நினைக்கும் போது கடவுளுக்குப் பெருமையாக இருந்தது.

'சரி... நேரில் போய் அவர்களைப் பார்த்து விட்டு வரலாம்' என்று அங்கிருந்து புறப்பட்டார்.

சாமியார் பேசிக் கொண்டிருந்த கோவில் மண்டபத்தின் அருகே வந்து சேர்ந்தார். ஆலயத்தின் வெளியே இருந்த ஓர் அரச மரத்தின் அடியில் நின்றார்.

அப்போது, வெளியே வந்த பக்தர் ஒருவர், "வேஷப் பொருத்தம் பிரமாதமா இருக்கு!" என்றார் கடவுளைப் பார்த்து.

கடவுளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "ஐயா, நான்தான் உண்மையான கடவுள்!" என்றார்.

உடனே, "என்கிட்டே சொன்னதோட வெச்சிக்க. வேற யார்கிட்டேயும் சொல்லிடாத. பிறகு, உன்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில கொண்டு போய் விட்டுடுவாங்க!" என்றார் பக்தர்.

"நான் சொல்றதைக் கொஞ்சம்..."

கடவுள் ஏதோ சொல்லத் துவங்குவதற்குள், அவரை இடை மறித்த பக்தர், "ஒண்ணும் சொல்ல வேணாம். முதல்ல இடத்தைக் காலி பண்ணு. கூட்டம் முடிஞ்சி, சாமியார் வெளியே வர்ற நேரம் இது... அதுக்குள்ளே போயிடு!" என்று கூறிச் சென்றார்.

வெளியே வந்த பக்தர்கள் எல்லாம் இவரைப் பார்த்துவிட்டு, சந்தேகத்தோடு விலகிப் போக ஆரம்பித்தார்கள். கடைசியாக சாமியார் வந்தார். பார்த்தார்.

"ஏம்பா... இப்படி இங்கே வந்து கலாட்டா பண்றே? பேசாம போயிடு!"

"என்னைப் பற்றி பிரசங்கம் பண்ற உனக்குமா என்னை அடையாளம் தெரியலே?"

எதுவும் அவர்கள் காதில் விழவில்லை. கடைசியாக, கடவுளை ஓர் அறையில் தள்ளிப் பூட்டி விட்டுப் போய் விட்டார்கள்.

வேறு வழியில்லை. கடவுள், கண்களை மூடிக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

நள்ளிரவு நேரம். கதவைத் திறந்து கொண்டு மெள்ள உள்ளே வந்தார் சாமியார்.

"கடவுளே! என்னை மன்னிச்சிக்குங்க... நீங்கதான் கடவுள்னு எனக்கு அப்பவே தெரியும்!"

"அப்புறம் என்ன... அந்த ஜனங்கள்கிட்டே சொல்ல வேண்டியதுதானே!"

"சொல்லி இருந்தா, என்னையும் பைத்தியம்னு சொல்லி உள்ளே தள்ளி இருப்பாங்க!"கடவுள் சிந்திக்க ஆரம்பித்தார்.

'இந்த மனிதர்களுக்கு, இருக்கிற கடவுளைக் காட்டிலும் இல்லாத கடவுள் மீதுதான் அதிக நம்பிக்கை இருக்கிறது!' என்று மனதுக்குள் எண்ணியவர் அங்கிருந்து மறைந்து போனார்.

யோசிக்காமல்
நீ செய்யும்
ஒவ்வொரு செயலும்
உன்னை
யோசிக்க
வைக்கும்..






## முதல்வர் ஸ்டாலினின் பிறந்த நாளுக்கு பிரதமர் மோடி வாழ்த்து



**சென்னை, மார்ச் 02:** முதல்வர் மு.க. ஸ்டாலினின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழகம் வந்துள்ள பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார்.

மேலும் அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு பிறந்த நாள் நல்வாழ்த்துகள். அவர் நீண்ட ஆயுளோடும் நல்ல ஆரோக்கியத்தோடும் வாழ வாழ்த்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

பிரதமரின் வாழ்த்துக்கு முதல்வர் தனது சமூக ஊடக பதிவில் நன்றி தெரிவித்துள்ளார். மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்ட வாழ்த்துப் பதிவில், "தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு இனிய பிறந்த நாள் நல் வாழ்த்துகள்.

நீண்ட ஆயுளோடும் ஆரோக்கியத்தோடும் வாழ் வாழ்த்துகள்" என குறிப்பிட்டுள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர்

### என்.சங்கர் எம்.கே.கார்த்திகேன் !



**செய்யாறு, மார்ச் 02:** தமிழகமுதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி நேற்று வெம்பாக்கம் தி.மு.க., கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மாங்கால் கூட்டுரோடு பகுதியில் ஒன்றிய செயலாளர் என். சங்கர், மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் எம்.கே.கார்த்திகேயன் ஆகியோரது ஏற்பாட்டில் 1000 பேருக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.

மார்ச் 1ம் தேதி (நேற்று) தமிழக முதல்வரின் பிறந்தநாளையொட்டி நாடு முழுவதும் கழக பொறுப்பாளர்கள் நிகழ்ச்சிகள் மூலம் விழா எடுத்து கொண்டாடினர். செய்யாறு சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட வெம்பாக்கம் கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.சங்கர், மாவட்ட அயலக அணி துணை தலைவர் எம்.கே.கார்த்திகேயன் ஆகியோரது ஏற்பாட்டில் மாங்கால் கூட்டுரோட்டில், பொதுமக்கள் 1000 பேருக்கு வேட்டி - சேலை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அன்னதானமும் வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் லோகநாதன், தி.மு.க., பொறுப்பாளர்களான பாபு, ராமலிங்கம், ஏகாம்பரம், லோகநாதன், ஷர்மா, பிரபு, ஜெகநாதன், சேகர், மனோகர், பெருமாள் மற்றும் இளைஞரணி பொறுப்பாளர்கள் என, 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## வேலூர் தொரப்பாடியில் மு. க. ஸ்டாலினின் 73 வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்!



**வேலூர்,மார்ச்02:** வேலூர் தொரப்பாடி 49 வது திமுக வட்டக் கழகம் சார்பில் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டக் கழக செயலாளர் அப்பு தனசேகர் தலைமையில், பகுதி செயலாளர் ஐயப்பன் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். இந்த எளிய நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள், துணைச் செயலாளர்கள், பிரதிநிதிகள், தொண்டர்கள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.


## தமிழ்நாட்டிற்கான ரயில்வே நிதி ஒதுக்கீடு.. பாஜக ஆட்சியில் 9 மடங்கு உயர்வு.. பிரதமர் மோடி!



**மதுரை, மார்ச் 02:** பாஜக ஆட்சியில் ரயில்வே துறைக்கு தமிழ்நாட்டிற்கான நிதி ஒதுக்கீடு 9 மடங்கு அதிகரித்துள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். 1,300 கிமீ தூரத்திற்கு புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறிய பிரதமர் மோடி, 10 ஆண்டுகளில் ரயில்வே துறை பல்வேறு சாதனைகள் படைத்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மதுரையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இதற்காக மதுரை வந்துள்ள பிரதமர் மோடி, மதுரை விமான நிலையத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பங்கேற்றார். இந்த விழாவில் ரூ.4,400 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்தார்.

## சீர்காழியில் ஸ்ரீராதா கல்யாண மஹோத்ஸவ சபா அறக்கட்டளை சார்பில் 11-ம் ஆண்டு ஸ்ரீராதா கல்யாண மஹோத்ஸவம்



**சீர்காழி , மார்ச் , 02:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் ஸ்ரீராதா கல்யாண மஹோத்ஸவ சபா அறக்கட்டளை சார்பில் 11-ம் ஆண்டு ஸ்ரீராதா கல்யாண மஹோத்ஸவம் கைவிளாஞ்சேரி தென்பாதி ஸ்ரீகோதண்டராமர் கோவிலில் ஸ்ரீ ஆஞ்சநேயர் சன்னதியில் ஸ்ரீ பகவத் க்ருபையால் மயிலாடுதுறை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி பாகவதர் குமாரர் பிரம்மஸ்ரீ ஞானகுரு பாகவதர் குழுவினரை கொண்டு சனி மற்றும் ஞாயிறு இரு நாட்கள் நடைப்பெற்றது. முதல் நாள் சனிக்கிழமை அன்று காலை 7.30 மணி: பெருமாள் திருமஞ்சனம் காலை 8.30 - 1.00 மணி வரை: அநுஞ்ஞை, விக்னேஸ்வர பூஜை, க்ரஹபிரீதி, சம்ப்ரதாய பஜனை, அஷ்டபதி பஜனை மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை விஷ்ணு சஹஸ்ரநாம பராயணம் மாலை 6.00 மணி: தியானம், நிச்சயதாம்பூலம், பூஜை, திவ்ய நாம சங்கீர்த்தனம், டோலோத்ஸவம் இரவு 9.30 மணி : மகாதீபாராதனை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றது.

இரண்டாம் நாள் ஞாயிறு அன்று காலை 7.30 மணி உஞ்சவிருத்தி காலை 9.00 மணி ஸ்ரீ ராதா கல்யாணம் ஆரம்பம் 12.00 மணிக்கு மேல் 1.35 மணிக்குள் ஸ்ரீ ராதா கல்யாண மாங்கல்ய தாரண மஹோத்ஸவம் . தொடர்ந்து ஸ்ரீஆஞ்சநேய உத்ஸவம் நடைபெற்றது .திரளாக பக்தர்கள் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது .

## 3 நூல்கள் வெளியீடு



திருச்சி மத்திய பேருந்து நிலையம் ஹோட்டல் அருண் மேக்ஸி ஹாலில் நேற்று(01.03.26) கலை இலக்கிய பெருமன்றம் சார்பில்நடைபெற்ற விழாவில்

கவிஞர் ஆங்கரை பைரவியின் "கோணாவாச்சி" சிறுகதைகள் நூலை திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்க சிறப்புத் தலைவர் திரு. சௌமாராஜரத்தினமும் "தனிமை நேரத்து தூண்டில்காரன்' கவிதை நூலை திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்க தலைவர் திரு.இந்திரஜித்தும் கவிஞர் ஆநிறைச்செல்வன் எழுதிய "தாடி வைத்த நெடும்பனை" கவிதை நூலை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் திருச்சி மாவட்டத் தலைவர் திரு. எம். செல்வராஜூம் வெளியிட்டனர்.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## பூமிநாத ஈஸ்வரர் திருக்கோயிலின் பிரதோஷ வழிபாடு.



கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் பூமிநாத ஈஸ்வரர் திருக்கோயிலின் பிரதோஷ வழிபாடு.

## புதுப்பாடி பிரதோஷ வழிபாடு.



புதுப்பாடி பிரதோஷ வழிபாடு.

## பள்ளி ஆண்டு விழா



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அடுத்த அன்மருதை கிராமத்தில் அமைந்துள்ள ஆக்சீலியம் மெட்ரிகுலேஷன் உயர்நிலைப்பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது. ஆண்டு விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக ஆரணி இன்டர்நேஷனல் பெண்கள் பி.எட். கல்லூரி தாளாளர் வழக்கறிஞர் ஜாகிர் உசேன் அவர்கள் கலந்து கொண்டார்.ஆக்சீலியம் பள்ளி தலைமை ஆசிரியை ரேகா அவர்கள் ஆண்டறிக்கையை வாசித்தார். பள்ளியின் தாளாளர் பிலோமினா விழாவிற்கு தலைமை தாங்கினார். விழாவில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர் ஜாகிர் உசேன் அவர்கள் பரிசுகளை வழங்கினார். பள்ளி ஆசிரியை ஜெசிந்தா நன்றி தெரிவித்தார். விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வளத்தி ஊராட்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா



விழுப்புரம் மாவட்டம் வளத்தி ஊராட்சியில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமையில் கேக் வெட்டி, இனிப்புகள், பழவகைகள் வழங்கி மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கழகஒன்றிய செயலாளர்கள் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் தொண்டர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்தநாள்



**திருப்பத்தூர், மார்ச் 02:** திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் அம்பலூர் ஊராட்சி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு திமுக மாவட்ட பிரதிநிதி, ஊராட்சிமன்ற தலைவர் A.P.முருகேசன் கேக் வெட்டி, இனிப்புகள் வழங்கி மரக்கன்றுகளை நட்டு வைத்தார். இதில் துணை தலைவர் நர்மதா நந்தகோபால் A.T.மனோகரன்,A.C.ரவி,D. துளசிராமன்,S.தமிழ்வாணன், E.கஜேந்திரன்,S.பாண்டு ரங்கன், G.பத்மநாபன் \,V. பத்மநாபன், R.திருமால்,S. குமரேசன்,அறிவழகன், யுவராஜ்,G.அஜித் மகளீர் அணி நிர்வாகிகள் C.பத்மா,R. சபிதா,R.திலகவதி,P.பார்வதி,S. ராஜேஸ்வரி P.நட்சத்திரம்,K. ரத்தினம்மாள்,M.ராணி,S. சரிதா,B.மோனிஷா,R. வனரோஜா,மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




## நூலக ஓவியப் போட்டியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள்!



**வந்தவாசி, மார்ச் 02:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மருதாடு கிளை நூலகத்தில் "வாசிப்பும் நேசிப்பும்" மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு கிளை நூலகர் ஜா.தமீம் ((பொ) தலைமை தாங்கினார். பிரதம் தன்னார்வ தொண்டு நிறுவன அலுவலர் பு.அரிகரன், க.பிரியா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சமூக ஆர்வலர் புண்ணிய கோட்டி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் பங்கேற்று, வாசிப்பும் நேசிப்பும் என்ற தலைப்பில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு தகவல்களை வழங்கினார். மேலும் புத்தக வாசிப்பு பற்றிய விழிப்புணர்வு ஓவியப் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் புதுமண தம்பதிகள் பு.அரிகரன் - க.பிரியா ஆகியோர் நூலகர் ஜா. தமீம் அவர்களிடம் ரூபாய் 1001 செலுத்தி நூலக புரவலர்களாக இணைந்தனர். இறுதியில் நூலக பொறுப்பாளர் பிரேமலதா நன்றி கூறினார்.

**பா.சீனிவாசன், வந்தவாசி.**



## 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்வுகள் ஒத்திவைப்பு

அமெரிக்கா - ஈரான் இடையிலான போர் மூண்டதால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் போர் நடைபெற்று வரும் நிலையில் இன்று நடைபெற இருந்த 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக சிபிஎஸ்இ அறிவித்துள்ளது.

## வாடிபட்டியில் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் விழா



**வாடிப்பட்டி, மார்ச்.02:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூர் தி.மு.க சார்பாக தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் 73வது பிறந்தநாள் விழா பஸ் நிலையத்தில் அண்ணா சிலை முன்பு பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

இந்த விழாவிற்கு பேரூர் செயலாளர் மு. பால்பாண்டியன் தலைமை தாங்கி இனிப்பு வழங்கினார். ஒன்றிய செயலாளர் பால ராஜேந்திரன், முன்னாள் பேரூராட்சி தலைவர் பேரூராட்சி தலைவர் கிருஷ்ண வேணி, அவைத்தலைவர் திரவியம்,. கவுன்சிலர் ஜெயகாந்தன், முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் பேரூர் செயலாளர் மு.பா. பிரகாஷ் வரவேற்றார். இதில் பேரூர் துணைசெயலாளர் கண்ணன், பேரூர் நிர்வாகிகள் பன்னீர், ராம்மோகன், எம் எஸ் முரளி, மருது பாண்டியன், மகேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் முன்னாள் கவுன்சிலர் பாலசுப்ரமணி நன்றி கூறினார்.

# சுற்றுலா: இராமேஸ்வரத்தில் அவசியம் பார்க்க வேண்டிய பத்து இடங்கள்!

1. இராமநாதசுவாமி திருக்கோயில்

இந்தியாவில் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள பன்னிரு ஜோதிர்லிங்க தலங்களுள் ஒரு முக்கியமான தலமாகும்.

2. ஸ்ரீகோதண்டராமர் கோயில்

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாக கருதப்படும் இத் திருக்கோயில் தனுஷ்கோடிக்குச் செல்லும் வழியில் வங்காளவிரிகுடா மற்றும் மன்னார் வளைகுடாவால் சூழப்பட்ட ஒரு சிறிய தீவில் அமைந்துள்ளது.

3. தனுஷ்கோடி

பாம்பன் தீவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. 1964 ஆம் ஆண்டு வீசிய புயலால் முற்றிலும் சேதமடைந்த ஒரு தீவாகும். இராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 20 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இதைத் தாண்டி இன்னும் நான்கு கிலோமீட்டர் பயணித்தால் அரிச்சல்முனை என்ற பகுதியை அடையலாம். இங்கு வங்காளவிரிகுடாவும் இந்தியப் பெருங்கடலும் இணைகின்றன.

4. கலாம் இல்லம்

முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள் வாழ்ந்த இல்லம் தற்போது அருங்காட்சியமாக மாற்றப்பட்டுள்ளது. காலை 08.00 மணியிலிருந்து இரவு 07.00 மணி வரை இல்லத்தைப் பார்வையிடலாம்.



5. இராமர் பாதம்

கெந்த மாதன பர்வதம் என்ற இடத்தில் இராமர் பாதம் அமைந்துள்ளது. இது ஒரு மணல் மேடாகும். நிலமட்டத்திலிருந்து சுமார் 60 மீட்டர் உயரமுடையது இந்த சிறிய குன்று. இந்த இடத்தின் மீது இலங்கைக்குச் செல்ல கடலில் பாலம் அமைப்பது குறித்து ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது. அருள்மிகு இராமநாதசுவாமி கோயிலில் இருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் ராமர் பாதம் அமைந்துள்ளது.



6. பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவில்

இராமேஸ்வரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் பிரதான சாலையில் சீதா தீர்த்தத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. இங்கு அனுமன் செந்தூர நிறத்தில் காட்சி தந்து அருளுகிறார். சேது பந்தனம் உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட மிதக்கும் கற்களை இங்கு தரிசிக்கலாம். அளவிலும் எடையிலும் பெரிதாக உள்ள இத்தகைய கற்கள் தண்ணீரில் மிதக்கும் அதிசயத்தைக் காணலாம்.

7. வில்லூண்டித் தீர்த்தம்

வில்லூண்டி என்றால் அம்பினால் துளைக்கப்பட்ட இடம் என்பது பொருளாகும்.

இராமேஸ்வரம் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் ஆறு கிலோமீட்டர் தொலைவில் இத்தலம் அமைந்துள்ளது. கடலுக்குள் அமைந்துள்ள வில்லுண்டித் தீர்த்தத்தில் தூய நீர் உருவாவது அதிசயமாகும். கரையிலிருந்து கடலுக்குள் 120 அடி நீளத்திற்கு ஒரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. பாலத்தின் இறுதியில் இந்த கிணறு போன்ற தீர்த்தம் அமைந்துள்ளது.

8. அப்துல் கலாம் நினைவு மண்டபம்

இராமேஸ்வரம் தீவில் பேக்கரும்பு என்ற இடத்தில் அப்துல்கலாம் அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. மூன்றரை ஏக்கர் பரப்பளவில் இருபது கோடி ரூபாய் மதிப்பில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. கலாம் அவர்கள் பயன்படுத்திய உடைகள், புத்தகங்கள் மற்றும் அரிய புகைப்படங்கள் முதலானவை இந்த மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

9. லட்சுமண தீர்த்தம்

இலட்சுமணர் தனக்கு ஏற்பட்ட பாவங்களைப் போக்கிக் கொள்ளுவதற்காக இந்த தீர்த்தத்தை உருவாக்கியையாகவும், இந்த இடத்தில் ஒரு லிங்கத்தை நிறுவி சிவபெருமானிடம் பாவ நிவர்த்தி வேண்டி பிராத்தனை செய்ததாகவும் ஐதீகம்.

10. குந்துகால்

சிகாகோவில் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்ட 26.01.1897 அன்று இந்தியா திரும்பிய சுவாமி விவேகானந்தர் இந்த இடத்தில்தான் வந்து இறங்கினார். இதன் தொடர்பாக இப்பகுதியில் ஒரு நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. அக்காமடம் என்ற இடத்தில் இறங்கி அங்கிருந்து ஆட்டோவில் 4 கிலோமீட்டர் பயணித்து இந்த இடத்தை அடையலாம்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## மிஸ் பண்ணிடாதீங்க... எய்ம்ஸ் நிறுவனத்தில் 2,551 செவிலியர் அலுவலர் பணி!

அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தில்(எய்ம்ஸ்) நிரப்பப்பட உள்ள 2,551 செவிலியர் அலுவலர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியும் விருப்பமும் உள்ளவர்களிடம் இருந்து மார்ச் 16 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி விவரம் மற்றும் இதர விவரங்கள் குறித்து பார்ப்போம்.

Advertise with us

பணி: Nursing Officer

மொத்த காலியிடங்கள்: 2,551

காலியிடங்கள் விவரம்: பதிண்டா - 72, போபால் - 76, புவனேஸ்வர் - 55, தியோகர் - 104, கோரக்பூர் - 203, குவஹாத்தி - 78, கல்யாணி - 205, மங்களகிரி - 88, நாக்பூர் - 56, ரேபரேலி - 85, புது தில்லி - 282, பாட்னா - 168, ரிஷிகேஷ் - 64, ராய்ப்பூர் - 43, விஜய்பூர், ஜம்மு - 54, மதுரை - 30, மைதாங்கரி - 32, தேசிய காசநோய் மற்றும் சுவாச நோய்கள் நிறுவனம் - 5, அகில இந்திய உடல் மருத்துவம் மற்றும் மறுவாழ்வு நிறுவனம் -1, சிஜபி ராஞ்சி - 13, புதுச்சேரி - 88, ஏனாம் - 7, காரைக்கால் - 383, எஸ்.ஜே.எச் மருத்துவமனை - 140, புது தில்லி இஎஸ்ஜசி - 219.

தகுதி: இந்திய நர்சிங் கவுன்சில், மாநில நர்சிங் கவுன்சில் அங்கீகாரம் பெற்ற நிறுவனம் அல்லது பல்கலைக்கழகத்தில் இருந்து பி.எஸ்சி. (ஹானர்ஸ்) நர்சிங், பி.எஸ்சி. நர்சிங் அல்லது டிப்ளமோ நர்சிங்(டிஜிஎன்எம்) முடித்து இந்திய நர்சிங் கவுன்சில், மாநில நர்சிங் கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும்.

பணி அனுபவம்: குறைந்தபட்சம் ஐம்பது படுக்கைகள் கொண்ட மருத்துவமனையில் இரண்டு ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். வயதுவரம்பு: 16.3.2026 தேதியின்படி 18 முதல் 30-க்குள் இருக்க வேண்டும். சம்பளம்: மாதம் ரூ.9,300 - 34,800 விண்ணப்பக் கட்டணம்: எஸ்சி,எஸ்டி, இடபுள்யுஎஸ் பிரிவினர் ரூ.2,400, இதர அனைத்து பிரிவினர் ரூ.3000 செலுத்த வேண்டும். கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: www.aiimsexams.ac.in என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 16.3.2026

# இன்னும் அனேகமாக ஓரிரு வாரத்தில் சட்டமன்ற தேர்தல் தேதி வெளியாகும்

**சென்னை, மார்ச் 2::**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான தேதி இன்னும் அனேகமாக ஓரிரு வாரத்தில் வெளியாகும் என தெரிகிறது.

தமிழகத்தில் ஆளும் தி.மு.க. அரசின் பதவிக்காலம் மே மாதம் 10ந் தேதியுடன் நிறைவடைகிறது. இதேபோல் புதுச்சேரி (ஜூன் 15), மேற்கு வங்காளம் (மே 7), அசாம் (மே 20), கேரளா (மே 23) ஆகிய மாநிலங்களின் பதவிக்காலமும் முடிவடைகிறது. எனவே இந்த 5 மாநிலங்களில் உள்ள 824 சட்டசபை தொகுதிகளுக்கும் தேர்தலை நடத்த இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக, ஒவ்வொரு மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடனும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் தேர்தல் வன்முறை குறைவு என்பதால், எப்போதும் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது. வடமாநிலங்களில்தான் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக பல்வேறு கட்டங்களாக தேர்தல் நடத்தப்படுகின்றன. அந்த வகையில் தற்போது நடைபெற உள்ள 5 மாநில தேர்தலை கண்காணிக்க 714 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், 233 ஐ.பி.எஸ் அதிகாரிகளும் தேர்தல் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 497 செலவின பார்வையாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்த முறை வெயிலின் தீவிரத்தை கருத்தில் கொண்டு மே மாதம் தமிழக சட்டசபை தேர்தலை நடத்தலாமா? என்று தேர்தல் ஆணையம் யோசித்து வருகிறது. ஏற்கனவே 5 மாநில தேர்தல்களை 5 கட்டங்களாக நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ள நிலையில், அதில் கடைசி கட்டமாக தமிழக சட்டசபை தேர்தல் நடத்தப்படலாம் என தெரிகிறது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# தமிழ்நாட்டின் முதல் இரவு வான் பூங்கா: அரியூர் சோலைக்காட்டில் ராஜகண்ணப்பன் துவக்கினார்

**கொல்லிமலை, மார்ச் 2:**

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலைப் பகுதியில் அரியூர் சோலைக்காட்டில் ரூ.44 லட்சத்தில் அமைக்கப்பெற்ற தமிழ்நாடு அரசின் முதல் இரவு வான் பூங்காவினை வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தொடங்கி வைத்தார்.

இரவு வான் பூங்கா என்பது செயற்கை ஒளி மாசுபாட்டிலிருந்து பாதுகாக்கப்பட்ட இயற்கை பரப்பாகும். இங்கு நிலவு, நட்சத்திரங்கள், கோள்கள் மற்றும் பிற விண்வெளி நிகழ்வுகளை தெளிவாகக் காண முடியும். உயரமான நில அமைப்பு, அடர்ந்த காடு மற்றும் குறைந்த நகர ஒளி மாசுபாடு ஆகியவற்றால் கொல்லிமலை இயற்கையான இருள் சூழலை வழங்குகிறது. இதனால் இரவு வான் காட்சிகளை பாதுகாக்கவும், விண்வெளி நிகழ்வுகளை காண்பதற்கும் சிறந்த இடமாக இது திகழ்கிறது. கட்டமைக்கப்பட்ட வான் கண்காணிப்பு அமர்வுகளுக்கான 3 மேம்பட்ட தொலைநோக்கிகள் மற்றும் தள செயல்பாடுகளுக்கு தேவையான நிலையான மின்சாரத்தை வழங்க கூடிய வகையில் சூரிய ஒளி மின்சார வசதி. இந்த மையம் பகல் நேரங்களில் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களிடையே வானியல் குறித்த அறிவியல் கல்வி மற்றும் வானியல் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக செயல்படும். நட்சத்திரங்களை பார்வையிடுவதற்கு குறுகிய கால அமர்வுகள் நடத்தப்படும். வனத்துறையால் போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். தங்குமிட வசதிகளும் உரிய நேரத்தில் செய்து தரப்படும். திட்டமிட்ட நட்சத்திர பார்வை அமர்வுகள் நடத்தப்படும். இரவு நேரம் முழுவதும் தங்காமல் பங்கேற்கும் வசதியும் வழங்கப்படும். குறிப்பிடத்தக்க வானியல் நிகழ்வுகளின்போது, குறிப்பாக அமாவாசை நிகழ்வுகளின் போது, உகந்த தெரிவுநிலையை உறுதி செய்வதற்காக முழு இரவு நட்சத்திரப் பார்வை முகாம்கள் மாதத்திற்கு இரண்டு முதல் மூன்று முறை ஏற்பாடு செய்யப்படும்.

இந்த முயற்சி தமிழ்நாட்டை ஒரு பொறுப்பான வானியல் சுற்றுலா தலமாக நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் சுற்றுலா மேம்பாடு சுற்றுச்சூழல் பாதுகாப்புகளுடன் இணைந்திருப்பதை உறுதி செய்கிறது.

பாதுகாப்பு, கல்வி மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட பார்வையாளர் அணுகலை ஒருங்கிணைப்பதன் மூலம், இரவு வான் பூங்கா சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் உள்ளூர் வாழ்வாதார வாய்ப்புகளை வலுப்படுத்துகிறது.

# மார்ச் 4ம் தேதி தஞ்சையில் தவெக தலைவர் விஜய் பிரச்சாரம்

**தஞ்சாவூர், மார்ச் 2:**



மார்ச் 4-ம் தேதி தஞ்சாவூர் மாவட்டம் அருகே செங்கிப்பட்டியில் நிர்வாகிகளையும், தொண்டர்களையும் தவெக தலைவர் விஜய் சந்திக்கவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் சட்டசபை தேர்தலை முன்னிட்டு பல்வேறு மாவட்டங்களில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

அண்மையில் சேலம் மற்றும் வேலூர் ஆகிய பகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டார். இதில் அடுத்த கட்டமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் தனது தொண்டர்களையும் நிர்வாகிகளையும் சந்திக்க உள்ளார்.

இதற்காக வருகிற 4ம்தேதி தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி அருகே சுமார் 9 ஏக்கர் பரப்பளவில் பிரச்சாரக் கூட்டம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காலை 10 மணி முதல் 3 மணி வரை இந்த கூட்டம் நடைபெறுகிறது.

இதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டசபை தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் நிர்வாகிகளும் தொண்டர்களும் பங்கேற்க உள்ளதாகவும் எனவே இந்த கூட்டத்திற்கு உரிய பாதுகாப்பு வழங்க வலியுறுத்தி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தவெக நிர்வாகிகள் மனு அளித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு குறித்து விசாரணை நடத்தி இன்று மாலை தகவல் சொல்வதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளதாக தஞ்சாவூர் மத்திய மாவட்ட செயலாளர் சரவணன் தெரிவித்துள்ளார்.

# கோவில் பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகை ரூ.1,500 வழங்கும் திட்டம்: முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்



**சென்னை, மார்ச் 2:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, மயிலாப்பூரில் இன்று இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்துகொண்டு, கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.1,500 வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

6,000 பூசாரிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகை வழங்கிடும் அடையாளமாக 11 பூசாரிகளுக்கு அதற்கான காசோலைகளையும், 10 பூசாரிகளுக்கு பூசை உபகரணங்களையும், 2 பூசாரிகளுக்கு இருசக்கர வாகனம் வாங்குதற்கான மானியம் தலா ரூ.12,000 -க்கான காசோலையையும், 3 பூசாரிகளின் பிள்ளைகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் ஒரு பூசாரியின் வாரிசுதாரருக்கு குடும்ப நலநிதி ரூ.50 ஆயிரத்து-க்கான காசோலைகளையும் முதல்வர் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று சென்னை, மயிலாப்பூர், ஆர்.கே. மடம் சாலை, கபாலீசுவரர் திடலில் நடைபெற்ற கிராமக் கோயில் பூசாரிகள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசியதாவது:

உண்மையான ஆன்மீக அன்பர்களும், இறை பற்றாளர்களும் விரும்பக்கூடிய அரசுதான், திராவிட மாடல் அரசு! இந்த மாநாட்டைப் பார்க்கும்போது, பலருக்கு வியப்பாக இருக்கலாம்; ஏன், சிலருக்கு எரிச்சல்கூட வரலாம்.

கடந்த ஆட்சிக் காலங்களில், அறநிலையத் துறை அமைச்சர் யார் என்பதுகூட மக்களுக்கு நினைவில் இருக்காது. ஆனால், இப்போது தமிழ்நாட்டில் இருக்கின்ற யாரை கேட்டாலும், நம்முடைய சேகர்பாபுவின் பெயரை பளிச்சென்று சொல்வார்கள். அந்தளவுக்கு நாள்தோறும் ஏதாவது ஒரு விழா, ஒரு கோயிலை புதுப்பிப்பது என்று அவர் செய்து கொண்டே இருக்கிறார்.

இன்னும் பெருமையாக சொல்ல வேண்டும் என்றால், நான் அதிகமாக் எந்த துறையினுடைய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டீர்கள் என்று யாராவது கேட்டால், இந்து சமய அறநிலையத்துறை நிகழ்ச்சிகள் என்று உடனே பதில் சொல்லிவிடலாம். அந்தளவுக்கு, சிறப்பாக, வேகமாக செயல்படுகிறார் நம்முடைய சேகர்பாபு.

சமரசமும் - சமத்துவமும்தான் ஆன்மீகப் பாதையாக இருக்க முடியும்! நம்மைப் பொறுத்தவரைக்கும், சமத்துவத்தை போற்றும் அனைவரையும் நாம் போற்றுவோம்! மக்களுடைய சுயமரியாதையும் - உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும்! அதை நாம் சரியாக செய்வதால்தான், ஆன்மீகப் பெரியோர்கள் தொடர்ந்து நமக்கு ஆதரவாக இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் இத்தகைய சமத்துவமும், சகோதரத்துவமும் நிலைபெற வேண்டும். மக்களுக்குள்ளே ஒற்றுமைதான் ஓங்கி வளரவேண்டும்! மக்களை பிரிக்க நினைக்கின்ற கும்பல்களை அடையாளம் கண்டு புறக்கணிக்க வேண்டும்! இவ்வாறு மு.க.ஸ்டாலின் பேசினார்.

இம்மாநாட்டில், அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞானபாலய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் ராமனுஜ எம்பார் சுவாமிகள், மேயர் ஆர்.பிரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆயுட்காலம் குறைவு என கூறிய ஜோதிடர்... பெண் கம்ப்யூட்டர் என்ஜினீயர் எடுத்த விபரீத முடிவு

பெங்களூரு, மார்ச் 2:

கர்நாடக மாநிலம் பெங்களூரு பாகலகுண்டே பகுதியில் அமைந்துள்ள எம்.இ.ஐ. லே-அவுட்டில் வசித்து வந்த பெண் வித்யா ஜோதி(வயது 29). இவர் தனியார் நிறுவனம் ஒன்றில் கம்ப்யூட்டர் என்ஜினீயராக பணியாற்றி வந்தார். மேலும் அவர் வீட்டில் இருந்தபடியே அலுவலக பணிகளை செய்து வந்தார். இந்தநிலையில் வித்யா ஜோதியும், குடகு மாவட்டத்தை சேர்ந்த ஒரு வாலிபரும் காதலித்து வந்துள்ளனர்.

இவர்களின் காதலுக்கு இரு வீட்டாரும் சம்மதம் தெரிவித்து இன்னும் சிறிது நாட்களில் திருமணம் செய்துகொள்ள இருந்தனர். இந்த நேரத்தில்



ஜோதிடர் ஒருவர் வித்யா ஜோதியின் ஜாதகத்தை பார்த்து அவருக்கு ஆயுட்காலம் குறைவு என்று கூறினார். மேலும் அவரது ஆயுட்காலத்தை நீட்டிக்க மாரம்மாதேவிக்கு 9 நாட்கள் தொடர்ந்து பூஜை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

அதன்படி வித்யா ஜோதியின் குடும்பத்தினர் தனது மகளின் வாழ்க்கையை கருத்தில் கொண்டு 9 நாட்கள் பூஜைக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இருப்பினும் வித்யா ஜோதி தான் சீக்கிரம் இறந்து விடுவேன், ஆகையால் தான் குடும்பத்தினர் தனது ஆசைகளை நிறைவேற்றுகிறார்கள் என்று நினைத்துள்ளார். இந்தநிலையில் வித்யா ஜோதியின் வீட்டில் 9 நாட்கள் தொடர்ந்து பூஜைகள் நடந்து வந்துள்ளது. இதில் 9-வது நாள் பூஜையில் மாரம்மா தேவிக்கு தாலியை காணிக்கையாக வழங்க ஜோதிடர் அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி 9-வது நாள் பூஜையில் கலந்து கொண்ட வித்யா ஜோதி தாலியை காணிக்கையாக வழங்கியுள்ளார். பூஜைகள் அனைத்தும் முடிந்து இரவு உணவுக்கு பின் குடும்பத்தினர் மற்றும் வித்யா ஜோதி ஆகியோர் இரவு தூங்குவதற்காக அறைக்கு சென்றனர். பின்னர் மறுநாள் காலையில் வித்யா ஜோதியின், தாயார் அவரின் அறைக்கதவை தட்டியுள்ளார். ஆனால் வித்யா ஜோதி கதவை திறக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் சந்தேகமடைந்த பெற்றோர் ஜன்னல் வழியாக அறைக்குள் பார்த்தனர். அப்போது வித்யா ஜோதி தூக்கில் பிணமாக தொங்கினார். இதனால் பதற்றம் அடைந்த அவர்கள் பாகலகுண்டே போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். விரைந்து வந்த போலீசார் வித்யா ஜோதியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பெங்களூரு விக்டோரியா அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். ஜோதிடர் ஆயுட்காலம் குறைவு என்று கூறியதால் வித்யா ஜோதி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. இருப்பினும் வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளதா? என்பது குறித்து போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

## க்ரைம் கார்னர்

### வி.ஏ.ஓ. வீட்டில் 12 சவரன் நகை திருட்டு: பெங்களூருவில் தந்தை, மகன் கைது

தூத்துக்குடி, மார்ச் 2:

தூத்துக்குடி அருகேயுள்ள புதுக்கோட்டை, சந்தோஷ்நகரைச் சேர்ந்த மாரிமுத்து (வயது 44), ஓட்டப்பிடாரம்- தருவைகுளம் பகுதியில் கிராம நிர்வாக அலுவலராக (வி.ஏ.ஓ.) பணியாற்றி வருகிறார். இவரது மனைவி கவுசல்யா(37), திருநெல்வேலியில் பேராசிரியையாகப் பணியாற்றி வருகிறார். இவர்கள் கடந்த 14-ம் தேதி வெளியூருக்குச் சென்றுவிட்டு, 16-ம் தேதி வீடு திரும்பியுள்ளனர். அப்போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு, பீரோவில் இருந்த 12 சவரன் தங்க நகைகளை மர்ம நபர்கள் திருடிச் சென்றது தெரியவந்தது. இதன் மதிப்பு ரூ.15 லட்சம் எனப் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து மாரிமுத்து அளித்த புகாரின் பேரில், புதுக்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். சம்பவ இடத்திலிருந்த சி.சி.டி.வி. கேமரா பதிவுகளின் அடிப்படையில் போலீசார் துப்பு துலக்கினர்.

விசாரணையில், கர்நாடக மாநிலம் உத்தரகள்ளியைச் சேர்ந்த அர்ஜூன்(56) மற்றும் அவரது மகன் மோகன்குமார்(22) ஆகிய 2 பேர் வியாபாரிகள் போல் நோட்டமிட்டு இந்தத் திருட்டில் ஈடுபட்டது தெரியவந்தது. அவர்களது செல்போன் எண்களை சைபர் கிரைம் மூலம் ஆய்வு செய்ததில், 2 பேரும் பெங்களூருவில் பதுங்கியிருப்பது கண்டறியப்பட்டது. இதனையடுத்து, புதுக்கோட்டை போலீசார் பெங்களூரு விரைந்து சென்று தந்தை, மகன் 2 பேரையும் கைது செய்தனர்.

### கோவில்பட்டியில் வாலிபர் கொலை வழக்கு: 2 சிறார் உள்பட 5 பேர் கைது




தூத்துக்குடி, மார்ச் 2:

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சங்கரலிங்கபுரம் 2-வது மேலத்தெருவைச் சேர்ந்த திருப்பதி மகன் மாரிமுத்து(எ) மனோஜ் (வயது 18), பிளம்பிங் மற்றும் எலக்ட்ரீசியன் வேலை செய்து வந்தார். இவர் கடந்த வியாழக்கிழமை இரவு தனது நண்பர்களுடன் சங்கரலிங்கம் 3-வது தெருவில் சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த மர்ம கும்பல் ஒன்று, மனோஜை அரிவாள் மற்றும் கத்தியால் சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பியோடியது. இதில் பலத்த காயமடைந்த மனோஜ், கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைக்குப் பின், மேல் சிகிச்சைக்காகத் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அங்கு சிகிச்சை பலனின்றி வெள்ளிக்கிழமை அவர் உயிரிழந்தார். இதுகுறித்து கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில், கோவில்பட்டியில் உள்ள ஒரு பள்ளியில் 10-ம் வகுப்பு மற்றும் 11-ம் வகுப்பு படிக்கும் இரு மாணவர்களிடையே "யார் பெரியவர்?" என்ற ரீதியில் ஏற்பட்ட மோதல், பின்னர் இரு தரப்பினருக்கு இடையேயான பகையாக மாறி இந்தக் கொலையில் முடிந்தது தெரியவந்தது.

இந்த கொலை வழக்கு தொடர்பாக இலுப்பையூரணி மறவர் காலனியைச் சேர்ந்த குமார்(24), துரைசாமிபுரத்தைச் சேர்ந்த முனியசாமி(எ) வேலு(19), திருநெல்வேலி முன்னீர்பள்ளத்தைச் சேர்ந்த நெல்லையப்பன்(22) மற்றும் மேலப்பாளையம், கோவில்பட்டி முகமது சாலிகாபுரத்தைச் சேர்ந்த 17 வயதுடைய 2 சிறுவர்கள் என மொத்தம் 5 பேரை போலீசார் கைது செய்தனர். மேலும், அவர்களிடமிருந்து ஒரு இருசக்கர வாகனத்தைப் பறிமுதல் செய்துள்ள போலீசார், இந்த வழக்கில் தொடர்புடைய, தலைமறைவாக உள்ள சிலரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

## விளையாட்டு செய்திகள்

### சூப்பர் 8 சுற்றோடு வெளியேறியது பாகிஸ்தான்: இலங்கைக்கு எதிராக ஆறுதல் வெற்றி!

கண்டி, மார்ச் 2:

நடப்பு ஐசிசி டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் சூப்பர் 8 குரூப்-2 பிரிவு ஆட்டத்தில் இலங்கையை 5 ரன்களில் வீழ்த்தி பாகிஸ்தான் அணி ஆறுதல் வெற்றி பெற்றது. இந்த பிரிவில் நெட் ரன் ரேட் அடிப்படையில் நியூ ஸிலாந்து அணி அரையிறுதிக்கு முன்னேறியது. அதனால் பாகிஸ்தான் அணி தொடரில் இருந்து வெளியேறியது.

இந்த ஆட்டம் இலங்கையில் கண்டி நகரில் உள்ள பல்லேகலே மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதலில் விளையாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 212 ரன்கள் எடுத்தது. பாகிஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர் சாஹிப்சாதா ஃபர்ஹான் அதிரடியாக விளையாடி சதமடித்தார். இந்த உலகக் கோப்பையில் அவர் விளாசும் 2-வது சதமாகும் இது. 60 பந்துகளில் 9 பவுண்டரி, 5 சிக்ஸர்களுடன் 100 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார் அவர்.

பஹர் ஸமான் 42 பந்துகளில் 84 ரன்கள் குவித்தார். கவாஜா நபாய் 2, முகமது நவாஸ் 0, சல்மான் அலி ஆகா 0, ஷதப் கான் 7 ரன்களில் வீழ்ந்தனர். இலங்கை அணி தரப்பில் தில்ஷன் மதுசங்கா 3, தசன் ஷனகா 2, துஷ்மந்தா சமீரா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

முதல் விக்கெட்டுக்கு ஃபர்ஹான், பஹர் ஸமான் ஜோடி 176 ரன்கள் குவித்து சாதனை படைத்தது. டி20 உலகக் கோப்பை போட்டியில் எந்தவொரு விக்கெட்டுக்கும் குவிக்கப்பட்ட அதிகபட்ச ரன்களாக இது அமைந்தது.

இதற்கு முன்பு இதே உலகக்கோப்பையில் நியூஸிலாந்து வீரர்கள் டிம் செய்பர்ட், பின் ஆலன் ஜோடி 175 ரன்கள் குவித்ததே சாதனையாக இருந்தது.

### ஆசிய குத்துச்சண்டை போட்டி: 20 பேர் கொண்ட இந்திய அணி அறிவிப்பு

புதுடெல்லி, மார்ச் 2:

ஆசிய குத்துச் சண்டைப் போட்டியில் பங்கேற்கும் 20 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்படுகிறது. இதில் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற லோவ்லினா போர் கோஹெய்ன், 2 முறை உலக சாம்பியன் நிகத் ஜரீன் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். இந்த ஆசியக் கோப்பை குத்துச்சண்டைப் போட்டி வரும் 28-ம் தேதி முதல் ஏப்ரல் 11-ம் தேதி வரை மங்கோலியாவில் நடைபெறவுள்ளது.

அணி விவரம் - மகளிர்: மீனாக்சி (48 கிலோ), நிகத் ஜரீன் (51 கிலோ), பிரீத்தி(54 கிலோ), ஜாஸ்மின் (57 கிலோ), பிரியா (60 கிலோ), அங்குஷிதா போரோ (65 கிலோ), அருந்ததி சவுத்ரி(70 கிலோ), லோவ்லினா போர்கோஹெயின்(75 கிலோ), பூஜா ராணி (80 கிலோ), அலிபியா தரன்னும் அக்ரம் கான் பதான் (80+கிலோ).

ஆடவர்: விஸ்வநாத் சுரேஷ் (50 கிலோ), ஜாதுமணி சிங் மன்டேங்பம் (55 கிலோ), சச்சின்(60 கிலோ), ஆதித்யா பிரதாப் யாதவ் (65 கிலோ), தீபக் (70 கிலோ), ஆகாஷ் (75 கிலோ), அங்குஷ் (80 கிலோ), லோகேஷ் (85 கிலோ), ஹர்ஷ் சவுத்ரி (90 கிலோ), நரேந்தர் (90+கிலோ).

# கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க 14 வயது சிறுமிகளுக்கு இலவச தடுப்பூசி திட்டம்: பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

புதுடெல்லி, மார்ச் 2:

நாடு முழுவதும் 14 வயதுடைய சிறுமிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி போடும் திட்டத்தைப் பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார்.

நாட்டில் பெண்களின் உடல்நலத்தை வலுப்படுத்தவும், நாடு முழுவதும் பெண்களுக்கான நோய்களைத் தடுக்கவும் மத்திய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, 14 வயது சிறுமிகளுக்கு மனித பாப்பிலோமா வைரஸ் (HUMAN PAPILLOMA VIRUS -) எச்பிவி தடுப்பூசி போடும் திட்டத்தைப் பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார். ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீருக்கு நேற்று வந்த பிரதமர் மோடி இந்த திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

மனித பாப்பிலோமா வைரஸ் என்பது பொதுவான வைரஸ் தொற்றாகும். இது பெரும்பாலும் பாலியல் தொடர்பு மற்றும் நெருங்கிய தோல் தொடர்பின் காரணமாகப் பரவுகிறது. இது கருப்பை வாய் புற்றுநோயை உண்டாக்க காரணமாக உள்ளது.

இந்தவைரஸை தடுக்கும் திட்டம் நாடு முழுவதும் செயல் படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 1.15 கோடி சிறுமிகளுக்கு இலவசமாகத்



தடுப்பூசி போடப்படும். நாட்டின் அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் உள்ள அரசு சுகாதார நிலையங்கள், ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் (ஆரம்ப சுகாதார மையங்கள்), மாவட்ட மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரிகளில் இந்த தடுப்பூசி இலவசமாகப் போடப்படும்.

இந்தத் தடுப்பூசியை பெற்றோர் அல்லது காப்பாளரின் ஒப்புதலுடன் 14 வயது சிறுமிகள் போட்டுக் கொள்ளலாம். இது கட்டாயமில்லை. இந்த தடுப்பூசி வழங்கும் பணிகள் அனைத்தும் சுகாதாரத் துறை நிபுணர்கள் மூலம் கண்காணிக்கப்படும். அத்துடன் தடுப்பூசி போட்டுக் கொண்ட பிறகு அரிதாக ஏதேனும்

சிக்கல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ உதவிகள் அளிக்க 24/7 வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் பிரதமர் மோடி வெளியிட்ட பதிவில், "இந்த நாட்டு மகள்களின் உடல் நலம், வளர்ச்சியை உறுதிப்படுத்துவதே மத்திய அரசின் இலக்கு. இதற்காக அஜ்மீரில் இன்று எச்பிவி தடுப்பூசி வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன். கருப்பை வாய் புற்றுநோயைத் தடுப்பது இதன் முக்கிய நோக்கமாகும்" என்று தெரிவித்துள்ளார்.


ஒருமுறை வழங்கப்படும் இந்த எச்பிவி தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது என்று சுகா தாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கிடையில், ராஜஸ்தானில் ரூ.16,680 கோடி செலவில் பல்வேறு நலத்திட்டங்களுக்குப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று அடிக்கல் நாட்டினார்.

# வெடிபொருள் உற்பத்தி நிறுவனத்தில் வெடிவிபத்து - 15 பேர் உயிரிழப்பு

நாக்பூர், மார்ச் 2:

மகாராஷ்டிராவின் நாக்பூர் மாவட்டத்தில் உள்ள SBL எனர்ஜி லிமிடெட் நிறுவனத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சுரங்கங்கள் மற்றும் தொழில்துறையினருக்கான வெடிபொருட்களை உற்பத்தி செய்யும் இந்த நிறுவனம் நாக்பூர் மாவட்டம், காடோல் வட்டம், ரால்கோன் என்ற இடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் ஏற்பட்ட திடீர் வெடிவிபத்தில் குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளனர். 18 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தகவல்களை நாக்பூர் காவல் கண்காணிப்பளர்



ஹர்ஷ் போடார் உறுதிப்படுத்தி உள்ளார்.

நாக்பூர் கிராமப்புற காவல் அதிகார வரம்புக்கு உட்பட்ட SBL எனர்ஜி லிமிடெட் நிறுவன வளாகத்தில் இந்த வெடிப்பு நிகழ்ந்துள்ளது. குண்டுவெடிப்புக்கான சரியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

மூத்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் பிற அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வணிகச் செய்திகள்

### தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,800 உயர்வு

சென்னை, மார்ச் 2:

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை (மார்ச் 1) பவுனுக்கு ரூ.1,800 உயர்ந்துள்ளது. வெள்ளி விலையும் கிலோவுக்கு ரூ.5,000 உயர்ந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது.

இந்தச் சூழலில், கடந்த சில நாட்களாகவே தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகிறது. உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியான உறவு இதற்கு முக்கிய காரணம் என துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும், ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் மேற்கொண்டுள்ள கூட்டுத் தாக்குதல் காரணமாக தங்கத்தின் விலையில் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

நேற்று ஒரே நாளில் பவுனுக்கு ரூ.5,200 உயர்ந்து, ஒரு பவுன் தங்கம் ரூ.1,24,400-க்கு விற்கப்பட்டது. ஒரு கிராம் தங்கம் ரூ.650 உயர்ந்து ரூ.15,550 ஆக இருந்தது. இந்நிலையில், (மார்ச் 1) தங்கம் விலை உயர்ந்துள்ளது.

# இந்தியாவின் முதல் டிஜிட்டல் சுங்கச் சாவடி: நெடுஞ்சாலை உள்கட்டமைப்பில் ஒரு மைல்கல்!

புதுடெல்லி, மார்ச் 2:

இந்தியாவின் முதல் டிஜிட்டல் சுங்கச் சாவடி பயன்பாட்டுக்கு வந்ததையடுத்து, அப்பகுதியில் வாகனங்கள் நில்லாமல் சாவடியைக் கடந்து செல்ல முடிகிறது.

தேசிய நெடுஞ்சாலை-48 (என்எச்-48) சூரத் காம்ரேஜ் பகுதியில் முழுக்க முழுக்க மின்னணுமுறையில் இயங்கும் சுங்கச் சாவடி பயன்பாட்டுக்கு வந்தது. ரூ. 15 கோடியில் அமைக்கப்பட்டுள்ள இந்த




சுங்கச் சாவடியில் வாகனங்கள் நிற்கமல் கடந்து செல்லலாம்.

அதி நவீன ஸ்கேனர்கள், ஏ.என்.பி. ஆர் கேமிராக்கள், லிடார், ரேடார், உயர் தொழிநுட்பக் கட்டுப்பாட்டு அறை ஆகியவையே இந்த சுங்கச்சாவடியின் பின்புலத்தில் இருப்பவை யாகும். கண்காணிப்பு கேமிராக்களில் ஃபாஸ்டேக் உதவியுடன் சுங்கச்சாவடியைக் கடந்து செல்லும் வாகனங்களின் விவரங்கள் பதிவாகி அதனை ஊழியர்கள் கண்காணிக்கின்றனர். இதனால் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர் பயன்பாட்டுடன் இந்தச் சுங்கச் சாவடி இயங்குகிறது.

ஒரு நாளைக்கு சுமார் 25,000 வாகனங்களைக் கையாளும் இந்தச் சுங்கச் சாவடியிலிருந்து ஈட்டப்படும் வருவாய் ரூ. 60 லட்சம். இதனால் வாகனப் போக்குவரத்துநெருக்கடி குறைவதுடன், மாசுபாடும் குறைகிறது. மேலும், எரிபொருள் சேமிப்பு வாகன ஓட்டிகளுக்கு பலனிக்கிறது. முக்கியமாக பயண நேரம் குறைகிறது. இந்திய நெடுஞ்சாலை உள்கட்டமைப்பில் ஒரு புதிய சகாப்தத்துக்கு டிஜிட்டல் சுங்கச்சாவடித் திட்டம் முன்னோடியாக அமைத்துள்ளது.

# மத்திய கிழக்கில் அதிகரிக்கும் தாக்குதல்.. 400-க்கும் மேற்பட்ட இந்திய விமானங்கள் ரத்து

புதுடெல்லி, மார்ச் 2:

ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா நேற்று அதிரடி தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணு சக்தி மையங்கள், அணு சக்தி உள்கட்டமைப்புகள், ராணுவ தளங்கள் என பல்வேறு பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் நட்பு நாடுகள் மீதும் ஈரான் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.





இந்நிலையில் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:-

ஈரான் மற்றும் மத்திய கிழக்கின் சில பகுதிகளில் வான்வெளி கட்டுப்பாடுகள் காரணமாக, நேற்று (பிப்ரவரி 28ம் தேதி) உள்நாட்டு விமான நிறுவனங்களின் 410 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இன்று (மார்ச் 1-ம் தேதி) 444 விமானங்கள் ரத்து செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பு மற்றும் செயல்பாட்டு விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக விமான நிறுவனங்களுடன் DGCA நெருக்கமான ஒருங்கிணைப்பைப் பேணி வருகிறது.

விமான நிலையத்திற்குச் செல்வதற்கு முன், பயணிகள் அந்தந்த விமான நிறுவனங்களுடன் தங்கள் விமான நிலையை சரிபார்த்து உறுதிப்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சாத்தியமான திசைதிருப்பல்களை நிர்வகிக்கவும், தடையற்ற பயணிகள் வசதியை உறுதி செய்யவும் முக்கிய விமான நிலையங்கள் செயல்பாட்டு விழிப்புடன் உள்ளன. பயணிகள் உதவி, விமான ஒருங்கிணைப்பு மற்றும் முனைய கூட்ட மேலாண்மை ஆகியவை உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகின்றன, மூத்த அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அமைச்சகத்தின் பயணிகள் உதவி கட்டுப்பாட்டு அறை (PACR) பயணிகளின் கவலைகளை உன்னிப்பாகக் கண்காணித்து, உடனடி தீர்வுக்கு உதவி வருகிறது. பிப்ரவரி 28 அன்று, ஏர்சேவா 216 குறைகளைப் பதிவு செய்தது, அதே காலகட்டத்தில் 105 குறைகள் தீர்க்கப்பட்டன, பாதிக்கப்பட்ட பயணிகளுக்குத் தேவையான ஆதரவை உறுதி செய்தது.

பாதிக்கப்பட்ட பயணிகளை ஒழுங்காக கையாளுவதையும், சம்பந்தப்பட்ட அனைத்து பயணிகளுக்கும் சரியான நேரத்தில் உதவி செய்வதையும் உறுதிசெய்ய அனைத்து உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேல் - ஈரான் போர்! இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயரும் அபாயம்!

புதுடெல்லி, மார்ச் 2:

உலகளவில் 20 முதல் 30 சதவிகித கச்சா எண்ணெய் ஏற்றுமதி ஹார்முஸ் ஜலசந்தி வழியாகத்தான் மேற்கொள்ளப்படுகிறது. ஹார்முஸ் ஜலசந்தி, உலகின் முக்கியமான கச்சா எண்ணெய் ஏற்றுமதி வழித்தடமாக அறியப்படுகிறது. தங்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்பட்டால், ஹார்முஸ் ஜலசந்தி வழித்தடத்தை மூடி விடுவோம் என்று ஈரான் நீண்டகாலமாகவே எச்சரிக்கை விடுத்து வருகிறது. இந்த நிலையில், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடி விட்டதாகக் கூறப்படுகிறது. இருப்பினும், ஈரான் தரப்பிலிருந்து அதிகாரப்பூர்வமான அறிவிப்பு எதுவும் பெறப்படவில்லை. ஹார்முஸ் ஜலசந்தி வழித்தடம் மூடப்படுவதாய் இருந்தால், இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை அதிகரிக்கும் அபாயமும் உள்ளது. ஏனெனில், இந்தியா தனது 80 முதல் 90 சதவிகித கச்சா எண்ணெய்யை இறக்குமதிதான் செய்கிறது. பெரும்பாலும் சௌதி அரேபியா, இராக், ஐக்கிய அரபு அமீரகம், குவைத், கத்தார் உள்ளிட்ட நாடுகளிருந்து ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே இறக்குமதி செய்கிறது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும் பட்சத்தில், கச்சா எண்ணெய் விலை உடனடியாக அதிகரிக்கும். கச்சா எண்ணெய்யில் உயர்வு ஏற்பட்டால், இந்தியாவின் இறக்குமதி செலவுகள் தானாகவே அதிகரிக்கும். இதனால், பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விலைகளில் உயர்வு ஏற்படும் அழுத்தம் உண்டாகும். இதனால், உள்நாட்டு எரிபொருள் விலை அதிகரிக்கும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

## குறுகிய தூர இலக்குகளை தாக்கி அழிக்கும் வான் பாதுகாப்பு ஏவுகணை சோதனை வெற்றி

புதுடெல்லி, மார்ச் 2:

ராணுவத்துக்குத் தேவையான ஏவுகணைகள், துப்பாக்கிகள் உட்பட பல்வேறு ஆயுதங்களை பாதுகாப்புத் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (டிஆர்டிஓ) தயாரித்து வருகிறது. அந்த வகையில் தற்போது குறுகிய தூர எதிரி இலக்குகளை துல்லியமாகத் தாக்கி அழிக்கும் ஏவுகணை சோதனை ஒடிசா மாநிலம் சந்திப்பூர் கடல் பகுதியில் நேற்று வெற்றிகரமாக நடத்தப்பட்டது. 'விஷார்ட்ஸ்' என்று அழைக்கப்படும் இந்த வகை ஏவுகணை உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது. இந்த ஏவுகணையை மனிதர்கள் எளிதாக சுமந்து செல்ல முடியும். இதை டிஆர்டிஓ.வின் இம்ராத் ஆய்வு மையம், மற்ற டிஆர்டிஓ ஆய்வு மையங்கள், இந்திய தொழிற்துறை நிறுவனங்களுடன் இணைந்து உருவாக்கி உள்ளது. இதுகுறித்து மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "குறுகிய தூர எதிரி இலக்கைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் 3 ஏவுகணைகள் சோதனை செய்யப்பட்டன. அவை மிகத் துல்லியமாக செயல்பட்டு இலக்கை அழித்தது. இந்த சோதனை முழு வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம், வெவ்வேறு வேகத்தில், வெவ்வேறு உயரத்தில் பறந்து வரும் எதிரிகளின் விமானம், ஏவுகணை, ட்ரோன்கள் என எதுவாக இருந்தாலும், நமது குறுகிய தூர வான் பாதுகாப்பு ஏவுகணை துல்லியமாகத் தாக்கி அழிக்கும்" என்று தெரிவித்துள்ளது. இந்த சோதனை வெற்றி பெற்றதற்கு டிஆர்டிஓ விஞ்ஞானிகளுக்குப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்துள்ளார். விரைவில் இந்த வகை ஏவுகணைகள் ராணுவத்தில் இணைக்கப்பட உள்ளன.

## காக்கிநாடா பட்டாசு ஆலை வெடிவிபத்து; முதல் மந்திரி இழப்பீடு அறிவிப்பு

காக்கிநாடா, மார்ச் 2:

ஆந்திர பிரதேசத்தில் காக்கிநாடா மாவட்டம் வெட்லபாலெம் கிராமத்தில் பட்டாசு ஆலை ஒன்று செயல்பட்டு வந்தது. இந்த ஆலையில் தொழிலாளர்கள் பலர் வேலை செய்து வந்த நிலையில், அந்த பட்டாசு ஆலையில் பலத்த சத்தத்துடன் வெடிவிபத்து ஏற்பட்டது.



இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை போராடி அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், ஆந்திராவில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் சிக்கி 20 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த சம்பவத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளார்.

இதில் பலியானவர்களின் குடும்பத்திற்கு ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் இழப்பீடு வழங்கப்படும் என அவர் அறிவித்து உள்ளார்.

இந்நிலையில் முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு சம்பவ பகுதியை நேரில் சென்று பார்வையிட்டார். அவர், மந்திரிகளையும் மற்றும் மூத்த அதிகாரிகளையும் சம்பவ பகுதிக்கு நேரில் சென்று பார்வையிடும்படி கேட்டு கொண்டார். அவர் மீட்பு மற்றும் நிவாரண பணிகள் பற்றியும் கேட்டு அறிந்து கொண்டார்.

இதன் பின்னர் அவர் மருத்துவமனைக்கு நேரில் சென்றார். பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். அவர்களுக்கு அரசு முழு ஆதரவு அளிக்கும் என கூறினார்.

## அஜீத் பவாரின் விமானம் விபத்தில் சிக்கியதற்கு மோசமான வானிலை காரணம்: ஏஏஐபி அறிக்கை

புதுடெல்லி, மார்ச் 2:

மகாராஷ்டிர மாநிலம், பாராமதியில் உள்ள விமான நிலையத்தில் கடந்த ஜனவரி 28-ஆம் தேதி காலை தரையிறங்குகையில் சிறியரக தனியார் விமானம் விழுந்து நொறுங்கியது. விமானத்தில் பயணித்த அஜீத் பவார் உள்ளிட்ட 5 பேர் பலியாகினர்.




இந்த சம்பவம் குறித்த 22 பக்க முதல்கட்ட விசாரணை அறிக்கையை ஏஏஐபி சனிக்கிழமை வெளியிட்டது. அதில், 'விபத்துக்கான காரணங்களை வெளிக்கொணரும் வகையில் அனைத்து அம்சங்கள் குறித்தும் விசாரிக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. இதுவரை நடந்த விசாரணை அடிப்படையில், 5,000 மீட்டர் உயரத்தில் இருக்கையில் விமானத்தை தரையிறக்கும் பணியை தொடங்க வேண்டும், ஆனால் அதற்கு மாறாக, 3,000 மீட்டர் உயரத்தில் இருக்கும்போது அதற்கான பணியில் விமானி ஈடுபட்டுள்ளார். அப்போது மோசமான வானிலை காரணமாக விமான நிலைய ஒடுபாதை சரியாகத் தெரியவில்லை. இதுவும் விபத்துக்கான காரணிகளில் ஒன்றாகும்' என கூறப்பட்டுள்ளது.

அதேபோல் விமான பாதுகாப்புக்கு எடுக்க வேண்டிய அவசியமான தடுப்பு நடவடிக்கைகள் குறித்து டிஜிசிஏ-க்கு அறிக்கையில் பரிந்துரைத்துள்ள ஏஏஐபி, விமான ஓடுபாதைகளில் விமானங்களை இயக்கும்போது, அதுதொடர்பான செயல்பாட்டு வழிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்கும்படி விமான நிறுவனங்களுக்கு டிஜிசிஏ உத்தரவிட வேண்டும், டிஜிசிஏ வகுத்த நெறிமுறைகளின்படி வானிலை நிலவரம் இருந்தால் மட்டுமே விமானம் இயக்குவதை உறுதி செய்வது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பொறுப்பாக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

# உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி மேற்கு வங்கத்தில் 'எஸ்ஐஆர்' முதல் கட்ட பட்டியல் வெளியீடு: 7 லட்சம் வாக்காளர் நீக்கம்

புதுடெல்லி, மார்ச் 2:

உச்ச நீதிமன்றம் நிர்ணயித்த காலக் கெடுவின்படி, மேற்கு வங்கத்தின் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) செயல்முறைக்குப் பிந்தைய முதல்கட்ட வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்டது.



அதேநேரம் அந்த பட்டியலை தேர்தல் ஆணையம் இதுவரை இணையதளத்தில் அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை. எனினும், கடந்த டிசம்பரில் வெளியிடப்பட்ட வரைவுப் பட்டியலின்படி மாநிலத்தில் இருந்த 7.08 கோடி வாக்காளர்களில், இதுவரை சுமார் 7 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 60 லட்சத்து 60,475 பேரின் பெயர்கள் ஆய்வில் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரைவுப் பட்டியலுக்குப் பிறகு, தர்க்க ரீதியான முரண்பாடு என குறிக்கப்பட்ட இந்த 60 லட்சம் பேரின் பெயர்கள் இன்னும் சரிபார்ப்புக்காக நிலுவையில் உள்ளன. கடந்த டிசம்பரில் வெளியிடப்பட்ட வரைவுப் பட்டியலில், 58 லட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. எஸ்ஐஆர் செயல் முறை முடிவடையும்போது, நீக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை தற்போதுள்ளதை விட அதிகமாக இருக்கும் என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து பாரக்பூர் திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. பார்த்தா போமிக் நேற்று கூறும்போது, "முழுமையான பட்டியலை நாங்கள் இன்னும் பார்க்கவில்லை. நைஹாத்தியில் [வடக்கு 24-பர்கானாஸ்] கிடைத்த தகவலின்படி, உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

7 மருத்துவர்கள், ரயில்வே ஊழியர்கள் மற்றும் சிலரின் பெயர்கள் விடுபட்டிருக்கிறது. இன்னும் பலர் இருப்பார்கள்" என்றார்.

தேர்தல் ஆணையம் விளக்கம்: இறப்பு, இடமாற்றம், இரட்டைப் பதிவுகள் மற்றும் முகவரி கண்டறிய முடியாத காரணங்களால் மட்டுமே பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும், முறையான ஆவண சரிபார்ப்புக்குப் பிறகே புதிய பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நாட்டிலேயே முதல் முறையாக தன்பாலின ஈர்ப்பாளர் மேனகா குருசாமி எம்.பி.யாகிறார்

புதுடெல்லி, மார்ச் 2:

மாநிலங்களவையில் விரைவில் காலியாக உள்ள 37 இடங்களுக்கு மார்ச் 16-ம் தேதி தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி, மேற்கு வங்கத்தில் 5 இடங்களுக்கு தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சி சார்பில், உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞரும் தன்பாலின ஈர்ப்பாளருமான (எல்ஜிபிடிக்யூ) மேனகா குருசாமி, சட்டப்பேரவை உறுப்பினர் பாபுல் சுப்ரியோ, டோலிவுட் நடிகை கோயல் மல்லிக் மற்றும் சமீபத்தில் ஓய்வு பெற்ற மேற்கு வங்க காவல் துறை தலைமை இயக்குநர் (டிஜிபி) ராஜீவ் குமார் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இதில் மேனகா குருசாமி வெற்றி பெற்றால் நாட்டின் முதல் எல்ஜிபிடிக்யூ நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வரலாறு படைப்பார்.

மேனகா குருசாமி ஒரு அரசியலமைப்புச் சட்ட வல்லுநர் மற்றும் இந்திய தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர். அவர் 1997-ம் ஆண்டு முன்னாள் அட்டர்னி ஜெனரல் அசோக் தேசாயின் கீழ் தனது சட்டப் பணியைத் தொடங்கினார். மேனகா தனது ஆரம்பக் காலங்களில் வழக்குகள் மற்றும் அரசியலமைப்பு விவகாரங்களில் முக்கியமாகப் பணியாற்றினார்.

பின்னர் வெளிநாடுகளில் உயர்கல்வியைத் தொடர்ந்த அவர், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பிசிஎல் பட்டமும், ஹார்வர்டு சட்டப் பள்ளியில் முதுகலை சட்டப் பட்டமும் பெற்றார். நியூயார்க்கில் உள்ள 'டேவிஸ் போல்க் & வார்டுவெல்' நிறுவனத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். 2015-ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். அமெரிக்காவின் புகழ்பெற்ற யேல், கொலம்பியா மற்றும் நியூயார்க் பல்கலைக்கழகங்களில் கவுரவப் பேராசிரியராக மேனகா பணியாற்றியுள்ளார். மேலும், ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி நிதியம் மற்றும் சிறுவர் நிதியமான யுனிசெஃப் ஆகியவற்றுக்கு ஆலோசகராகவும் செயல்பட்டுள்ளார். இந்தியாவில், பிரிவு 377-ஐ (தன்பாலின சேர்க்கையை குற்றமாகக் கருதும் சட்டம்) எதிர்த்து வாதிட்ட சட்டக் குழுவில் மேனகா முக்கியப் பங்கு வகித்தார். அதிகாரத்துவ சீர்திருத்தங்கள், அகஸ்டா வெஸ்ட்லேண்ட் ஊழல் வழக்கு, சல்வா ஜூடும் வழக்கு மற்றும் கல்வி உரிமைச் சட்டம் தொடர்பான பல முக்கிய வழக்குகளிலும் அவர் வாதாடி உள்ளார்.

## சத்தீஸ்கர் சட்டப்பேரவையை பார்வையிட்ட 20 முன்னாள் மாவோயிஸ்டகள்

ராய்ப்பூர், மார்ச் 2:

மார்ச் 31-ம் தேதிக்குள் நாடு முழுவதும் மாவோயிஸ்ட் மற்றும் நக்சல் தீவிரவாதத்தை ஒழிக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதன்படி, மாவோயிஸ்ட் அமைப்புகளில் இருந்து ஜனநாயகப் பாதைக்கு திரும்புவோருக்கு மறுவாழ்வு திட்டங்களை அந்தந்த மாநில அரசுகள் அறிவித்துள்ளன. இதையடுத்து, இதுவரை நூற்றுக்கணக்கானவர்கள் சரணடைந்துள்ளனர். இந்நிலையில், சத்தீஸ்கர் அரசின் மறுவாழ்வு முயற்சியின் ஒரு பகுதியாக, சுமார் 120 சரணடைந்த மாவோயிஸ்ட்கள் ராய்ப்பூரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சட்டப்பேரவையைப் பார்வையிட வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்களில் 59 வயதான முன்னாள் மத்திய குழு உறுப்பினர் தக்கலப்பள்ளி வாசுதேவ ராவும் (ஆஷண்ணா (எ) ரூபேஷ்) ஒருவர். இவர் மாவோயிஸ்ட்களின் 'குண்டு தயாரிப்பாளர்' என்று அறியப்பட்டவர். மேலும், 2003-ம் ஆண்டு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மீதான கொலை முயற்சி உள்ளிட்ட முக்கியத் தாக்குதல்களில் இவருக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சரணடைந்தவர்களை 'ஜெய் ஜோஹர்' என பாரம்பரிய முறைப்படி முதல்வர் விஷ்ணு தியோ சாய் வரவேற்றார்.

## ரேஷனில் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை நிறுத்த மத்திய அரசு முடிவு

புதுடெல்லி, மார்ச் 2:

ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க, இரும்பு சத்து, ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி12 ஆகிய நுண்ணூட்ட சத்துக்களுடன் செறிவூட்டப்பட்ட அரிசியை ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்கும் திட்டத்தை பிரதமர் மோடி கடந்த 2021-ம் ஆண்டு அறிவித்தார்.

விவசாயிகளிடம் இருந்து மத்திய அரசு கொள்முதல் செய்யும் அரிசிகள் உணவு தானிய சேமிப்பு கிடங்கில் 2 முதல் 3 ஆண்டுகள் வரை சேமித்து வைக்கப்படுகின்றன. நாடு முழுவதும் உள்ள மத்திய அரசின் உணவு கிடங்குகளில் 674 லட்சம் டன்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 372 லட்சம் டன்கள் ஒவ்வொரு ஆண்டும் இலவச அரிசி திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. இந்நிலையில், செறிவூட்டப்பட்ட அரிசியை எவ்வளவு காலம் சேமித்து வைக்க முடியும் என்ற ஆய்வில் காரக்பூர் ஐஐடி ஈடுபட்டது. நமது நாட்டின் தட்ப வெப்ப சூழ்நிலையில், செறிவூட்டப்பட்ட அரிசியை நீண்ட காலம் சேமித்து வைத்தால் அது உடைந்து விடுகிறது. மேலும், அவற்றில் உள்ள நுண்ணூட்ட சத்துக்களின் அளவுகளும் குறைவது ஆய்வில் தெரிய வந்தது.

இதையடுத்து இப்பிரச்சினைகளுக்கு நவீன தொழில்நுட்பம் மூலம் தீர்வு காணும் வரை செறிவூட்டப்பட்ட அரிசியை ரேஷன் கடைகள் மூலம் விநியோகம் செய்வதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

## கர்நாடக கிராமத்தில் அரசு சார்பில் சலூன்

பெங்களூரு, மார்ச் 2:

கர்நாடக மாநிலம் கதக் மாவட்டம் சிங்கத்தலூர் கிராமத்தில் உள்ள முடி வெட்டும் கடையில் பட்டியலினத்தவருக்கு முடி வெட்ட கூடாது என ஆதிக்க சாதியினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து கதக் மாவட்ட சமூக நலத்துறை அதிகாரிகள், தங்களது துறையின் சார்பில் முடி வெட்டும் கடை திறக்க திட்டமிட்டனர். சமூக நலத்துறை அமைச்சர் எச்.சி.மஹாதேவப்பாவை சந்தித்து அனுமதி கேட்டனர்.

அவர் கடந்த 26-ம் தேதி அனுமதி அளித்ததை தொடர்ந்து, சிங்கதத்தலூர் கிராமத்தில் முதல் முறையாக, அரசே முடிவெட்டும் கடையை நேற்று முன்தினம் திறந்தது. இதனால் பட்டியலின மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# ஈரான் உச்ச தலைவர் கமேனியின் கொலை சர்வதேச சட்டத்திற்கு எதிரானது; ரஷிய அதிபர் புதின்

மாஸ்கோ, மார்ச் 2:

ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா நேற்று அதிரடி தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணு சக்தி மையங்கள், அணு சக்தி உள்கட்டமைப்புகள், ராணுவ தளங்கள் என பல்வேறு பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி அவரது குடும்பத்தினர், ஈரான் பாதுகாப்புத்துறை மந்திரி அமீர், ஈரான் புரட்சிப்படை தளபதி முகமது உள்பட பலர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்க படைத்தளங்கள் அமைந்துள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த மோதலால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், ஈரான் உச்ச தலைவர் கமேனியின் கொலை சர்வதேச சட்டத்திற்கு எதிரானது என்று ரஷிய அதிபர் விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார். ஈரான் உச்ச தலைவர் கமேனி மற்றும் அவரது குடும்பத்தினர் கொல்லப்பட்டதற்கு எனது இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கொலை சர்வதேச சட்டத்திற்கு எதிரானது என்று புதின் தெரிவித்துள்ளார்.

# ஈரான் ராணுவத்திற்கு புதிய தளபதி நியமனம்

டெல் அவிவ், மார்ச் 2:

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் நேற்று கடுமையாக தாக்கியதில் பலர் கொல்லப்பட்டனர். தெற்கு ஈரானின் ஹர்மோஜ்கான் மாகாணத்தில் மினாப் நகரில் உள்ள பெண்கள் தொடக்கப்பள்ளியின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 100-க்கும் மேற்பட்ட மாணவிகள் பலியாகி உள்ளனர்.

இதேபோன்று, ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோரும் கொல்லப்பட்டனர். இதில், 2025-ம் ஆண்டில் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை எனப்படும் ஈரானிய படையின் பொறுப்பை பாக்பூர் ஏற்றுக்கொண்டார். அதற்கு முன்பு தளபதியாக இருந்த உசைன் சலாமி மரணம் அடைந்த நிலையில், பாக்பூர் அந்த பதவியை வகித்து வந்து உள்ளார். இந்த நிலையில் இஸ்ரேலிய தாக்குதலில் அவர் கொல்லப்பட்டு உள்ளார். இதனை தொடர்ந்து, ஈரானின் இஸ்லாமிய புரட்சி படை எனப்படும் ஈரான் ராணுவத்திற்கு புதிய தளபதி நியமனம் செய்யப்பட்டு உள்ளார். இதுபற்றி ஈரான் ஊடகங்கள் வெளியிட்டு உள்ள தகவலில், ஜெனரல் அகமது வாஹிதி ஈரான் படைக்கான புதிய தளபதியாக நியமிக்கப்பட்டு உள்ளார் என தெரிகின்றது.

பியூனஸ் அயர்ஸ் நகரில் 1994-ம் ஆண்டு நடந்த வெடிகுண்டு தாக்குதலில் 84 பேர் பலியான சம்பவத்துடன் தொடர்புடைய இவரை 2007-ம் ஆண்டு முதல் இன்டர்போல் தேடி வருகிறது. 2025-ம் ஆண்டு அக்டோபரில் ஈரான் ராணுவத்தின் துணை தளபதியாக நியமிக்கப்பட்ட வாஹிதி, கடந்த காலத்தில் ஈரானின் பாதுகாப்பு மற்றும் உள்துறை மந்திரி பதவியை வகித்தவர் ஆவார்.

# ஈரான் தலைவர் மரணம்; பாகிஸ்தானில் நடந்த போராட்டத்தில் 9 பேர் பலி

கராச்சி, மார்ச் 2:

அமெரிக்காவுடன் சேர்ந்து இஸ்ரேல் நாடானது, மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஈரானை நேற்று கடுமையாக தாக்கியது. இதில் போர் ஜெட் விமானங்கள் வான் வழியே தாக்குதல் நடத்தின. இதனால் நகரத்தின் சில பகுதிகளில் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. பலர் கொல்லப்பட்டு உள்ளனர்.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது. தெற்கு ஈரானின் ஹர்மோஜ்கான் மாகாணத்தில் மினாப் நகரில் உள்ள பெண்கள் தொடக்கப்பள்ளியின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 100-க்கும் மேற்பட்ட மாணவிகள் பலியாகி உள்ளனர் என அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டு உள்ளன.

இந்த தாக்குதலை நிறுத்தும்படி இந்தியா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் கூறி வருகின்றன. இந்நிலையில், ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா காமேனி கொல்லப்பட்டு உள்ளார்.

இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளாது. இதனை தொடர்ந்து பாகிஸ்தானின் கராச்சி நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் முன் போராட்டக்காரர்கள் இன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது நடந்த வன்முறையில் 9 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர்.

# ஈரானில் 40-க்கும் மேற்பட்ட மூத்த ராணுவ அதிகாரிகள் படுகொலை; இஸ்ரேல் தகவல்

டெல்அவிவ், மார்ச் 2:

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் நேற்று கடுமையாக தாக்கியது. இந்த வான்வழி தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என பலர் கொல்லப்பட்டு உள்ளனர். இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்றம் காணப்படுகிறது.

ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டு உள்ளனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது.




ஈரானில் அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து நடத்திய தொடக்க கட்ட தாக்குதலில் 40-க்கும் மேற்பட்ட மூத்த ராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டு விட்டனர் என இஸ்ரேல் பாதுகாப்பு படை இன்று தகவல் தெரிவித்து உள்ளது. இது வரலாற்று தாக்குதல் என்றும் ராணுவ உளவு தகவலின் அடிப்படையில் இது சாத்தியம் என்றும் தெரிவித்து உள்ளது.

இதில், 2 தனித்தனியான இடங்களில் அடுத்தடுத்து நடந்த தாக்குதலில் பல தளபதிகள் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்த இஸ்ரேல், அவர்களின் பெயர்களை வெளியிடவில்லை.

இந்த பட்டியலில், ஈரானின் தலைமை தளபதி லெப்டினென்ட் ஜெனரல் அப்துரகீம் மவுசவியும் ஒருவர் என இஸ்ரேல் தெரிவித்து உள்ளது. இந்த தாக்குதலில் மவுசவி மற்றும் பிற மூத்த ஈரானிய பாதுகாப்பு பிரிவு தலைவர்கள் கொல்லப்பட்டு விட்டனர் என ஈரானின் அரசு ஊடகமும் தெரிவித்து உள்ளது.

ஈரானின் வான் பாதுகாப்பு சாதனங்களை மேற்கு மற்றும் மத்திய ஈரான் பகுதியில் தகர்த்து விட்டோம் என்றும், ஈரானின் வான் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறோம் என்றும் இஸ்ரேலுக்கு எதிரான அச்சுறுத்தலை அழிக்கும் இலக்குடன் தொடர்ந்து செயல்படுவோம் என்றும் இஸ்ரேல் தெரிவித்து உள்ளது.

# ஓமன் அருகே நடுக்கடலில் எண்ணெய் கப்பல் மீது தாக்குதல்; 15 இந்தியர்கள் மீட்பு

மஸ்கட், மார்ச் 2:

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் நேற்று கடுமையாக தாக்கியதில் பலர் கொல்லப்பட்டு உள்ளனர். இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்றம் காணப்படுகிறது.

ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோரும் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா காமேனி, அவருடைய மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டு உள்ளனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது.



இந்நிலையில் ஸ்கைலைட் என பெயர் கொண்ட பலாவ் நாட்டு கொடியுடன் சென்ற எண்ணெய் கப்பல் ஒன்று கடுமையாக தாக்கப்பட்டு உள்ளது. இந்த கப்பல் காசாப் துறைமுகத்தில் இருந்து வடக்கே 5 கடல் மைல் தொலைவில் தாக்கப்பட்டு உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

உடனடியாக கப்பலில் இருந்தவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய கூடிய, அதிகாரிகளின் ஒருங்கிணைந்த பணியும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

இதில், கப்பல் ஊழியர்கள் 20 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

# ஈரான் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்

தெஹ்ரான், மார்ச் 2:

ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா நேற்று அதிரடி தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணு சக்தி மையங்கள், அணு சக்தி உள்கட்டமைப்புகள், ராணுவ தளங்கள் என பல்வேறு பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி அவரது குடும்பத்தினர், ஈரான் பாதுகாப்புத்துறை மந்திரி அமீர், ஈரான் புரட்சிப்படை தளபதி முகமது உள்பட பலர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்க படைத்தளங்கள் அமைந்துள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், ஈரான் மீது இஸ்ரேல் இன்று மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது. ஈரான் தலைநகர் தெஹ்ரானின் சயது காண்டின், குவாசர், வனக் சதுர்க்கம், மொடஹரி ஸ்டிரீட் உள்ளிட்ட பகுதியில் இஸ்ரேல் இன்று வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை.

# கமேனி கொல்லப்பட்டதற்கு சீனா கடும் கண்டனம்!

தெஹ்ரான், மார்ச் 2:

ஈரான் போரில் உச்சகட்ட பதற்றமாக, இஸ்ரேல் - அமெரிக்க படையின் தாக்குதலில் ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா கமேனி (86) கொல்லப்பட்டார். இதனைத்தொடர்ந்து, அமெரிக்காவுக்கு ஈரான் தக்க பதிலடி அளிக்கும் என்று சூளுரைத்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவி வரும் பதற்றமான சூழலில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே இப்போது பூதாகரமாகப் போர் வெடித்துள்ளது. இதனால் ஈரானில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்நிலையில், கமேனி கொல்லப்பட்டதற்கு சீனா கடும் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளது. "இறையாண்மை மிக்க தலைவர் ஒருவர் வெளிப்படையாகக் கொல்லப்பட்டிருப்பதும், அதன்மூலம், ஆட்சி மாற்றத்தைத் தூண்டுதலும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்று தெரிவித்துள்ள சீன வெளியுறவு அமைச்சர் வாங்க் ஈ சீன அரசின் கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறார்.

# அமெரிக்காவிற்கு மரண அடி கொடுப்போம்: ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் எச்சரிக்கை

ஈரான், மார்ச் 2:

ஈரான் அணு ஆயுத தயாரிப்பை நிறுத்த வேண்டும்; அதற்கான யுரேனியம் செறிவூட்டலையும் முழுமையாக நிறுத்த வேண்டும். நீண்ட தொலைவு சென்று தாக்கும் ஏவுகணைத் திட்டங்களை ரத்து செய்ய வேண்டும். மத்திய கிழக்கு நாடுகளில் ஈரான் தனது கிளர்ச்சி படைகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்திய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், அதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடவும் ஈரானை வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக அமெரிக்கா -ஈரான் இடையே நடைபெற்ற இரு சுற்றுப்பேச்சுவார்த்தைகளிலும் சுமுக உடன்பாடு ஏற்படவில்லை. அதைத் தொடர்ந்து, ஈரான் உடனடியாக ஒப்பந்தம் மேற்கொள்ளாவிட்டால் மோசமான பேரழிவைச் சந்திக்க நேரிடும் என்று டிரம்ப் மிரட்டல் விடுத்தார். ஈரானைச் சுற்றி அமெரிக்க போர்க்கப்பல்கள் விரைந்தன.

இதனால் ஈரான் மீது அமெரிக்கா எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் நடத்தலாம் என்ற பதற்றம் நிலவிய நிலையில், நேற்று இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து



தாக்குதலை நடத்தின. ஈரானில் தலைநகர் தெஹ்ரான் உள்பட பல இடங்களில் வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டதாக ஈரானிய ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. காமேனி கொல்லப்பட்டதால் ஈரானில் போராட்டம் வெடித்துள்ளது. ஈரான் மட்டுமின்றி உலகின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் வெடித்து ள்ளன.

இந்த நிலையில், கமேனியை கொன்ற அமெரிக்காவிற்கு மரண அடி கொடுப்போம் என்று ஈரான் சபாநாயகர் முகமது பாகெர் கலிபாப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், "அமெரிக்காவும் இஸ்ரேலும்சிவப்புக்கோட்டைத் தாண்டிவிட்டன, அதற்கான விலையை அவர்கள் கொடுத்தே ஆக வேண்டும். கமேனியை கொன்ற அமெரிக்காவிற்கு மரண அடி கொடுப்போம்.

ஈரான் மீது தாக்குதல் நடத்தினால் விளைவுகள் பயங்கரமாக இருக்கும். இந்தப் போர் ஈரானின் வாழ்வா சாவானப் போர் மட்டுமல்ல, இறுதிப் பழிவாங்கலுக்கான போர். நெதன்யாகு மற்றும் ட்ரம்ப்பிற்கு நான் சொல்வது இதுதான்; நீங்கள் கெஞ்சும் அளவிற்கு வலிமைமிக்க அடிகளை உங்கள் மீது தொடுப்போம். அதை நீங்கள் விரைவில் காண்பீர்கள்" என கூறினார்.

# துபை, தோஹாவில் இரண்டாவது நாளாக வெடிச்சத்தம்



துபாய், மார்ச் 2:

ஈரான் மீதான இஸ்ரேல் - அமெரிக்க கூட்டுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தத் தாக்குதலில் ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா கமேனி கொல்லப்பட்டார். இஸ்ரேல் மற்றும் அமெரிக்க கூட்டுப்படை தாக்குதல்களுக்குப் பதிலடியாக, அண்டை நாடுகளான வளைகுடா நாடுகள் மீதான தாக்குதலை ஈரான் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்களை இலக்கு வைப்பதாக ஈரான் கூறியிருந்தாலும், வளைகுடா நகரங்களில் உள்ள பல்வேறு இடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஈரானின் இந்த தாக்குதல்கள் காரணமாக இரண்டாவது நாளாக ஞாயிற்றுக்கிழமை துபை மற்றும் கத்தாரின் தலைநகரான தோஹாவில் பலத்த வெடிச்சத்தங்கள் கேட்டுள்ளன. முதன்முறையாக ஓமன் நாடும் இந்தத் தாக்குதலுக்கு உள்ளானது.

ஓமனின் வணிகத் துறைமுகத்தை நோக்கி சனிக்கிழமை இரண்டு ட்ரோன்கள் ஏவப்பட்டன. இதில் தொழிலாளி ஒருவர் காயமடைந்ததாக அந்நாட்டு அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதேபோல் துபையில் இடைமறிக்கப்பட்ட ட்ரோன்களின் சிதறல்கள் இரண்டு வீடுகள் மீது விழுந்ததில் இருவர் காயமடைந்ததாக துபாய் ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது. மேலும் துபை சர்வதேச விமான நிலையம், புகழ்பெற்ற புர்ஜ் அல் அரப் ஹோட்டல் மற்றும் செயற்கை தீவான பாம் ஜுமேரா ஆகியவை சேதமடைந்தன. கத்தாரில் தொழில்பேட்டை பகுதியில் ஏவுகணை இடிபாடுகள் விழுந்ததில் சிறிய அளவிலான தீ விபத்து ஏற்பட்டதாக கத்தார் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கின் மிகப்பெரிய சுற்றுலா மற்றும் வர்த்தக மையமாக விளங்கும் துபையின் விமான நிலையம், உலகின் பரபரப்பான பயண மையங்களில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரான் உச்ச தலைவர் காமேனி கொல்லப்பட்டது எப்படி? வெளியான திடுக்கிடும் தகவல்

வாஷிங்டன், மார்ச் 2:

ஈரானின் உயரிய அதிகாரம் பெற்ற நபராக காமேனி திகழ்ந்தார். அவருக்கு அச்சுறுத்தல் உள்ள நிலையில் அவர் ரகசியமான இடத்திலேயே இருந்து வந்தார். முக்கியமான நேரத்தில் மட்டுமே பொது வெளியில் தலையைகாட்டினார். அவரது இருப்பிடத்தை கண்டுபிடிக்கும் பணியில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் உளவுத்துறையினர் தீவிரம் காட்டி வந்தனர்.

இந்தநிலையில், கடந்த சில நாட்களாக அணு ஆயுதம் தயாரிப்பது தொடர்பாக ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே மோதல் ஏற்பட்டது. இதனால் ஈரான் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பாக பல மாதங்களாக அமெரிக்கா திட்டமிட்டு வந்தது.



யாரும் எதிர்பார்க்காத வகையில் ரமலான் மாதத்தில் திடீரென நேற்று தாக்குதலை நடத்தி உள்ளது. இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர், மகள், மருமகன், பேரக்குழந்தைகள், காமேனியின் ஆலோசகர், ஈரான் படைகளின் தலைவர் முகமது பக்போர் உள்ளிட்டோர் 400க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்தநிலையில், ஈரான் உச்ச தலைவர் காமேனி கொல்லப்பட்டது எப்படி? என்பது குறித்து திடுக்கிடும் தகவல் வெளியாகி உள்ளது. அதில்,

காமேனி சந்திப்பு, சந்திப்பு நடக்க இருக்கும் இடம் குறித்து அமெரிக்காவின் சிஐஏ தகவல் சேகரித்திருக்கிறது. மத்திய தெஹ்ரானில் காமேனியின் ஒவ்வொரு நகர்வையும் அமெரிக்காவின் சிஐஏ கண்காணித்தது.

நேற்று காமேனி, ஈரான் தலைவர்கள் மற்றும் ராணு அதிகாரிகளோடு சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


காமேனி சந்திப்பு, சந்திப்பு நடக்க இருக்கும் இடம் குறித்து சிஐஏ தகவல் சேகரித்திருக்கிறது. காமேனி ரகசிய சந்திப்பு குறித்த உளவுத்துறை தகவல்களை சிஐஏ இஸ்ரேலுக்கு வழங்கி இருக்கிறது, சி.ஐ.ஏ ஸ்கெட்ச் ஏற்படுத்தி கொடுத்த செயல் திட்டத்தின் அடிப்படையில் இஸ்ரேல், விமானப்படை மிக துல்லியமாக அதிரடி தாக்குதல் நடத்தி உள்ளது. காமேனி அதிகாரிகளை சந்தித்த நேரத்தில் இஸ்ரேல் விமானப்படை 30 குண்டுகளை வீசி உள்ளது. இந்த தாக்குதலில் அந்த கட்டடம் கடும் சேதமடைந்துள்ளதை செயற்கைக் கோள் புகைப்படங்கள் உறுதி செய்துள்ளன. ஈரான் தாக்குதலில் தொடர்புடைய அதிகாரிகள் தகவல் என நியூயார்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராக பழிவாங்குவது ஈரானின் கடமை மற்றும் சட்டப்பூர்வமான உரிமை என ஈரான் அதிபர் மசூத் பெசேஷ்கியன் அதிரடியாக அறிவித்துள்ளார். இந்த வரலாற்று குற்றத்திற்குக் காரணமானவர்களை பழிவாங்கும் பொறுப்பை நிறைவேற்ற ஈரான், தனது முழு பலத்தையும் பயன்படுத்தும் என அவர் திட்டவட்டமாக கூறியுள்ளார்.



# ஈரான் தலைவர் காமேனி கொல்லப்பட்டார்

## பணம் நமக்கு, பிரச்சனை மக்களுக்கு என்பது தான் தி.மு.க.-வின் மாடல்



## 12 ஆண்டுகளுக்குப் பிறகு வெளியே வந்த அத்திவரதர்!

## கருப்பை வாய் புற்றுநோயைத் தடுக்க 14 வயது சிறுமிகளுக்கு இலவச தடுப்பூசி திட்டம்

## பூமியைப் போல 140 டிரில்லியன் மடங்கு பிரம்மாண்ட கடல்


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 02.03.2026 திங்கட்கிழமை இலவச இ-பேப்பர்